# ஏசுநாதர் போதனை

ஜே. ஸி. குமரப்பா

27 JUN 1946
MADRAS

சக்தி

96 : 33
N46
104318

தி வெளியீடு

# ஏசுநாதர் போதனை

934
366
K-4
27 JUN 1946

ஜே. ஸி. குமரப்பா
மகன்வாடி, வார்தா,

தமிழாக்கியவர் :
'குமுதினி'

சக்தி காரியாலயம்
சென்னை : மதுரை : கோயமுத்தூர் : திருநெல்வேலி

# பதிப்புரை

ஏசுநாதர் அவதாரத்தின் தத்துவம் யாது, அவருடைய திருமொழிகளின் தத்துவங்கள் யாவை என்பதைத் தெளிவாக ஆசிரியர் குமரப்பா விளக்குகிறார். காந்தியடிகளும் இந்த வியாக்கியானம் பொருத்தமானது என்று கருதுகிறார். இந்த அரிய நூலைத் தமிழருக்கு உதவ முன்வந்தவர் 'குமுதினி' அவர்கள்.

Q6:33
N46

முதற்பதிப்பு : மார்ச் 1946
உரிமை பதிவு செய்யப் பெற்றது

TAMIL NAD ... ARCHIVES LIBRARY
109318
MADRAS-600 008

அணா பன்னிரண்டு
(தபால் செலவு தனி)

அச்சிட்டோர் :
சக்தி பிரஸ் லிமிடெட்
சாந்தி பிரஸ்
ராயப்பேட்டை : சென்னை

## சமர்ப்பணம்

# என் அன்னைக்கு

'' சிறுமை யானவர்களுக்குத் தன் கையைத் திறந்து,
ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறுள். ''

'' அவளுடைய செய்கைகள் வாசல்களில்
அவளைப் புகழக் கடவது. ''

நீதி மொழிகள் - 31
20, 31

காந்தியடிகள்

எழுதிய

# இந்திய சுயராஜ்யம்

பரலி - சு. நெல்லையப்பர்

மொழிபெயர்த்தது

விலை ரூ. 1

சக்தி வெளியீடு

# ஒரு வார்த்தை

இந்தப் புத்தகத்தி லடங்கிய அத்தியாயங்களை நான் கவனமாகப் படித்திருக்கிறபடியால், கடவுளிடம் நம்பிக்கையுள்ள யாவரும், அவர் கிறிஸ்தவராக இருப்பினும் வேறு மதத்தினராக இருப்பினும், இதை நன்றாகப் படிக்க வேண்டு மென்று சிபார்சு செய்கிறேன்.

இச்சிறிய புத்தகம், கிறிஸ்தவ போதனைகளைப்பற்றி ஆசிரியர் ஜே.ஸி. குமரப்பா கொண்டுள்ள அபிப்பிராயங்களைச் சுருக்கமாக உரைப்பதாகும். ஏசுநாதர் கடவுளின் ஆள் என்பதை இது ஒரு புது, புரட்சிகரமான முறையில் எடுத்துக் காண்பிக்கிறது. இருந்தும் மிகச் சுவையானதாகவும், புது விஷயங்களை விளக்குவதாகவும் இருக்கிறது. "பரமண்டல மந்திரத்"தை அவர் விளக்குவதும், மற்றும் அவர் கூறும் பல அர்த்தங்களும் புதியனவாகவும் மனத்திற்கு உகந்தவையாகவும் இருக்கின்றன.

மத விஷயமாக ஆசிரியர் குமரப்பா எண்ணுவதுபோல் எல்லாரும் எண்ணினால் வகுப்பிற்கு வகுப்பும், மதத்திற்கு மதமும் இருக்கும் சண்டை இனி இரா. கிறிஸ்தவ வேதாகமத்தின் இந்த அர்த்த விளக்கம் இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு அதிக மனச் சாந்தியை அளிக்கக் கூடும். ஆசிரியர் குமரப்பா படிக்கிற விதமாக அவர்கள் தமது பைபிளைப் படித்தார்களானால் தமது முன்னோர்களைப் பற்றியாகிலும், முன்னோர்களின் மதத்தைப் பற்றியாகிலும் வருத்தப்பட வேண்டாம். பழைய முறையில் இருக்கும் கெடுதல்களையும் மூட நம்பிக்கையையும் இப்புத்தகத்தில் காட்டியிருக்கும் விசால போதனையின் மூலம் அவர்கள் நீக்கிவிடலாம். அதே சமயம் பழைய போதனையில் அழிவற்றதும் என்றும் போற்றக் கூடியதுமான அருமையான விஷயங்கள் இருப்பதை அவர்கள் உணருவார்கள்.

உண்மையில் ஆசிரியர் குமரப்பாவின் போதனைகள் இந்தியாவிற்கு மாத்திரமல்ல, வெளிநாடுகளுக்கும் ஏற்றவை. மேலைநாடுகளில் வசிப்பவர்கள் கிறிஸ்தவராக இருப்பினும் சுவிசேஷங்களில் கூறப்பட்டிருக்கும் ஏசுநாதரின் உண்மை உருவத்தை அறியவில்லை என்றே அவர் ஒரு பூரண ஆஸ்திகரின் நம்பிக்கையுடன் கூறுகிறார்.

இந்தப் புத்தகத்தைப் படித்து வருகையில் முன்பு டர்பனில் வசித்த அட்வகேட் எப். ஏ. லாட்டன் (F. A. Laughton) என்பவரின் ஞாபகம் எனக்கு உண்டாயிற்று. அந்தக் காலத்தில் எனக்கு ரோமன் டச்சுச் சட்டங்கள் தெரியாது. தென் ஆப்பிரிக்காவின் நான்கு மாகாணங்களுக்குமுரிய தனித்தனிச் சட்டமும் தெரியாது. ஆகையால் சந்தேகம் ஏற்படும் சமயங்களில் நான் மிஸ்டர் லாட்டனின் உதவியை நாடுவேன். நான் வந்த காரியம் முடிந்ததும் அவர் மிகப் பெருமையுடன் தமது மேஜை இழுப்பிலிருந்து தமது தகப்பனாரின் கைப்பட எழுதப்பட்ட குறிப்புகளடங்கிய ஒரு பச்சை அட்டைப் புத்தகத்தை எடுப்பார். அது எட்வின் அர்னால்டின் 'தெய்வ கீதம்' (Song Celestial பகவத் கீதை) என்ற புத்தகம். மிஸ்டர் லாட்டனின்

தகப்பனர் அப்புத்தகத்தில் அங்கங்கே பைபிளிலிருந்து அதே கருத்துக்க ளடங்கிய வாக்கியங்களை எடுத்து எழுதி, இதைக்கும் "புது ஏற்பாட்டிற்" கும் இருக்கும் ஒற்றுமையைக் காண்பித்திருந்தார். அச்சமயம் நான் சத்தியத்தின் பல அம்சங்களைத் தேடும் ஒரு மாணவனாக இருந்தேன். அவ்விதம் நான் தேடுகிறேன் என்பதைக்கூட நான் உணரவில்லை. ஆசிரி யர் குமரப்பாவின் வியாக்கியானமும், பைபிளிலிருந்து எடுத்துக் கூறப் பட்ட பல மூலச் சொற்களும் நான் 1894-5 போன்ற வருஷங்களிலேயே நம்பின விஷயங்களை எனக்கு ஞாபக மூட்டுகின்றன. ஆகையால் இப் புத்தகத்தில் ஆசிரியர் குமரப்பா கொடுத்திருக்கும் விளக்கத்தின் உண்மையை நான் எனது சொந்த அனுபவத்திலிருந்து ஒத்துக் கொள்ளு கிறேன்.

சேவா கிராமம்
21—3—1945

மோ. க. காந்தி

# முன்னுரை

இச் சிறிய நூல் ஒரு தத்துவ ஞானியாலோ, கிறிஸ்தவ மதம் முழுவதும் படித்துத் தேர்ந்த பண்டிதராலோ எழுதப்பட்டதன்று. கிறிஸ்தவ மதத்தைப் பற்றி நான் கற்றதெல்லாம் என்னுடைய தாயார் மடியிலும், பிற்பாடு ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிகளிலும், குடும்பப் பிரார்த்தனைக் காலங்களிலுமே.

என்னுடைய தாயார், காலேஜ் படிப்புப் பெற்றவரல்லர். தென்னிந்தியாவில் மிகப் பக்தியுள்ள கிறிஸ்தவக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர். அவருடைய காலத்தை நோக்க அவர் மிகவும் படித்தவரே. முக்கியமாய்த் தமிழ் நூல்கள் அதிகம் படித்தவர். தமது வாழ்க்கையை ஏசுநாதரின் போதனைகளைப் பின்பற்றுவதில் கழித்தார். தமது பக்தியையும், அக்கம் பக்கத்தாரிடம் தமக்கு உள்ள அனுதாபத்தையும் அன்பையும் அவர் துன்பப் படுவோருக்குத் தம்மால் இயன்ற அளவு உதவி செய்வதன் மூலம் காண்பிப்பார். பெரிய பெரிய ஞான நூல்களின் வழியாக ஏற்படும் அறிவைவிட அவருடைய தினசரி வாழ்க்கையும் செய்கைகளும் என்னுடைய இளம் மனத்தில் மிக ஆழமாகப் பதிந்தன. அவர் போதிக்கும் வகையே மிகச் சுலபமானதாகவும் வேறு எவரும் கையாளாத தனிப்பட்ட முறையாகவும் இருக்கும்.

குழந்தைப் பருவத்தில் எனக்குச் சிறு பிராணிகளை வளர்ப்பது மிகவும் பிடிக்கும். கோழி, வான்கோழி முதலியவைகளை வளர்க்க என் தாயார் இடம் கொடுப்பார். மாத ஆரம்பத்தில் அவர் மளிகைச் சாமான் வாங்கச் செல்லும் சமயம், நான் வளர்க்கும் குஞ்சுகளுக்குத் தீனி வாங்குவதற்காக என்னையும் அழைத்துச் செல்வார். மாதம் முழுவதும் நான் விற்ற முட்டைகளின் கணக்கை எழுதி வைத்திருப்பேன். மாத இறுதியில் என்ன லாபம் ஏற்பட்டதென்று கணக்குப் பார்க்கச் சொல்வார். அந்த லாபத்தைத் தர்மத்திற்கென்று அவரிடம் கொடுத்துவிட வேண்டும். ஓர் அநாதைக் குழந்தையின் பள்ளிச் சம்பளம் போன்ற சிறிய தர்மங்களில் அதைச் செலவழிப்பார். நான் பெரியவனாகி ஆடிட்டர் வேலை செய்த காலத்திலும் பிரதி மாதமும் என்னுடைய சம்பளத்திலிருந்து அவருக்கு என்னுடைய "வரி"யைச் செலுத்த வேண்டும். இந்த "வரி" என்பது என்னுடைய சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட அம்சம் என்று வசூலிப்பதில்லை. அவருடைய தர்மத்திற்குத் தேவையானதைக் கணக்கிட்டு அதற்கு ஏற்றாற்போல் தாராளமாக வரியை விதித்து விடுவார்!!! எனக்குச் சுமார் இருபத்திரண்டு வயதானபோது வெய்யிற்கால விடுமுறை ஒன்றை அவருடன் கோடைக்கானலில் கழிக்க நான் சென்றிருந்தேன். அச்சமயம் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று மாதா கோயிலில் பிரசங்கத்திற்குப்பின் சீனாவில் பெரிய பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதென்ற விஷயம் கூறப்பட்டது. அன்று எங்களுடைய பகல் போஜனம் ஒரு பெரிய விருந்தாக இருந்தது.

அதற்குக் காரணம் எங்களுக்குத் தெரியவில்லை. அம்மாவைக் கேட்டதற்கு அவர் புன்சிரிப்புடன் "பிற்பாடு சொல்லுகிறேன்" என்றார். நாங்கள் சாப்பிட்டபின் சிரம பரிகாரம் செய்துகொண்டோம். மாலையில் தேநீர் பருகும் சமயம் அம்மா எங்களை அழைத்துச் சீனாவில் ஏற்பட்டிருக்கும், பஞ்சத்தையும், நாங்கள் அன்று உண்ட விருந்தையும் எடுத்துக்காட்டி, பஞ்ச நிவாரணத்திற்கு உதவிபுரியுமாறு சொன்னார். எங்கள் ஒவ்வொருவராலும் அப்பொழுது உடனேயே எவ்வளவு தொகை கொடுக்க முடியும் என்பதை அவரே கணக்கிட்டு, அவரவர்களின் பெயருக்கு எதிரில் அந்தத் தொகையை எழுதி அந்த ஜாபிதாவை எங்களிடம் நீட்டினார். என்னுடைய பெயருக்கு எதிரே ரூ. 50 போட்டிருந்தார்! அதை வசூலித்தும் விட்டார்!! இவ்விதம் நாங்கள் சுயமாகக் கொடுப்பதும் தவிர, எங்களுடைய நண்பர்களிடமிருந்தும் நாங்கள் நிதி திரட்டுமாறு செய்வார். தாய் அன்பை, எங்களை மேன்மேலும் தூண்டும் கருவியாக உபயோகித்தார். இது வீட்டில் கிடைத்த பழக்கம். வெளியிலோ திவ்ய சபை முறைக்கும், அதன் தேவாராதனைகளுக்கும், ஏசுநாதரின் போதனைக்கும் அதிக வித்தியாசம் இருப்பதை நான் பார்த்தேன். பதினாறு பிராயத்தில் எனக்கு "உறுதி பூசுதல்" நடக்கும் சமயம் எங்களுக்குப் போதிக்கப்பட்ட ஞான உபதேசங்கள் எவ்விதம் இருந்த போதிலும், "திவ்விய நற்கருணை" யின் விதிகள் எனக்குப் புரியவே இல்லை. இங்கிலாந்துக்கோயில் முறை ஒன்றைச் சேர்ந்த பிஷப்புப் பாதிரியார் தமது மோட்டார் ஓட்டியுடன்கூடத் தாராளமாக உட்கார்ந்து, "பிதாவின் மேஜை" யில் "திவ்ய நற்கருணை" பெறுவார். ஆனால், ஒரு ஸ்காட்லந்து பாதிரியாருடன், அவர் ஒரு பெரியோராக இருப்பினும், சர்வகலாசாலையின் சான்சலராக இருப்பினும், அதைப் பகிர்ந்து கொள்ள இசையார். ஆனால், இதே பிஷப்புப் பாதிரியார் இந்த ஸ்காட்லாந்துப் பாதிரியாரைத் தமது வீட்டிற்கு விருந்துண்ண அழைத்து, அவருடன் உண்பார். தமது மோட்டார் ஓட்டியுடன் சேர்ந்து உட்கார்ந்து உண்ணமாட்டார்.

மேலும், முதல் உலக யுத்தம் நடந்த சமயம் இங்கிலாந்தில் படிக்கச் சென்றிருந்த எனக்கு, ஸெயிண்ட் பால் கதீட்ரலிலோ வெஸ்ட் மினிஸ்டர் ஆபியிலோ யுத்தத்திற்கென்று விசேஷத் தேவாராதனைகள் நடக்கும் சமயம், அந்தச் சடங்குகள் எவ்வளவு படாடோபமாக இருந்தபோதிலும், உலக பிதாவும் சமாதான மூர்த்தியுமானவரைத் துதித்துவிட்டு, 'எமது எதிர்க்கட்சிக்காரனைத் துவம்சம் செய்யவேண்டு'மெனப் பிரார்த்திப்பது ஏற்றதாகப் படவில்லை. பிரசங்கத் தொட்டியில் நின்றுகொண்டு பட்டாளத்திற்கு ஆட்கள் சேர்ப்பதும் எனக்குச் சரியாகப் படவில்லை. எத்துணையோ போர்க்களங்களின் இரத்தம் தோய்ந்த கொடிகளும், போர் வீரர்களின் சமாதிகளும் இந்தத் தேவாராதனையின் புனித இடங்களில் இருப்பதும் எனக்கு அக்கிரமமாகத் தோன்றிற்று. ஏசுவின் போதனைகளுக்கும் திவ்விய சபை முறைகளுக்கும் இருக்கும் இவைபோன்ற இன்னும் பல முரண்பாடுகள், முறையான கிறிஸ்தவ மதத்தில் எனக்கு நம்பிக்கையே இல்லாமற் செய்தன. கிறிஸ்தவர் என்ற பெயருடன் வசிக்கும் மேலைநாட்டார் கீழைநாட்டார் இருவருடைய வாழ்க்கையும் என்னுடைய

அதிருப்தியை அதிகரிக்கவே செய்தது. இந்தியக் கிறிஸ்தவர் மேலைநாட்டாரின் முறையை மதத்தில் மாத்திரமல்ல, ஆகார ஆடை விஷயங்களிலும் பின்பற்றலாயினர். படுக்க இடமில்லாமல் திரிந்த அவரைப் பின்பற்றுகிறோமென்று கூறிக்கொள்ளும் இவர்களுடைய சிலுவை என்பது கடியாரச் சங்கிலியில் தொங்கும் தங்கச் சிலுவையே. ஏசுவின் போதனைப்படி உண்மையிலேயே நடப்பது இந்த இருபதாம் நூற்றாண்டில் சாத்தியமில்லை என்று எனக்குச் சொல்லுவார்கள். இதெல்லாம் கண்ட எனக்கு மதம் என்பது ஒரு கேலி எனப் படலாயிற்று. இங்கே கிறிஸ்தவர் என்பது சில குறிப்பிட்ட பழக்க வழக்கங்களுடைய ஒரு வகுப்பினர், நமது நாட்டிற்கு உரிய சொந்தப் பழக்க வழக்கங்களிலிருந்து பிரிந்து மேலைநாட்டு வழக்கங்களையும் நாகரீகத்தையும் பெருமையுடன் மேற்கொள்ளுகிறவர் என்பது ஆயிற்று.

இதுவரை எனக்கு இந்துக்களுடனோ, முஸ்லீம்களுடனோ அதிகப் பரிச்சயம் கிடையாது. அவர்களுடைய மதங்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஒரு சமயம் எனக்குக் காந்திஜியுடன் சம்பந்தம் ஏற்பட்டது. குஜராத்தில் பொருளாக்க முறையைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நடத்துமாறு அவர் என்னைக் கேட்ட சமயம் என்னுடைய ஆப்த கிறிஸ்தவ நண்பர்களில் சிலர் "புற ஜாதி" யினருக்கு உதவி செய்வது சரியல்ல என்று தடுத்தனர். ஆனால், கிறிஸ்தவர்களின் வாழ்க்கை எனக்கு உன்னதமானதாகப் படவில்லையாகையால் புறஜாதியினரின் வாழ்க்கையில் அவர்களைப்போல் எனக்கு அருவருப்பு உண்டாகவில்லை.

காந்திஜியின் வேலை முறையைப் பற்றி நான் அறிய ஆரம்பித்தபின், அந்தமுறை எனக்கு இளம் வயதில் போதிக்கப்பட்ட முறை போன்றதாக இருப்பதைப் பார்க்கவே, இந்த நூற்றாண்டிலும், இந்த நமது மானிட வாழ்க்கையிலும் கிறிஸ்துவின் போதனைப்படி நடக்க இயலுமென்பது எனக்குத் தெரியலாயிற்று.

ஏசுநாதர் தனது வாழ்க்கையிலும் போதனைகளிலும் காண்பித்த வழிக்கும், கிறிஸ்தவர் என்ற வார்த்தைக்கும் இருக்கும் சம்பந்தமே போய்விட்டபடியால் நான் இப்புத்தகத்தில் ஏசுநாதர் கூறியதை அனுசரிப்பவர்களை "ஏசுவைப் பின்பற்றுகிறவர்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறேன்—அவர்கள் ஹிந்துவோ, முகம்மதியரோ, சமணரோ அல்லது ஒருகால் கிறிஸ்தவர்களாக இருப்பவரோ, எவராயினும் சரி.

நான்கு சுவிசேஷங்களில் கூறப்பட்டிருக்கும் ஏசுநாதரின் வாழ்க்கையையும் போதனைகளையுமே நான் இப்புத்தகத்திற்கு ஆதாரமாகக் கொண்டிருக்கிறேன். அப்போஸ்தலர் வர்த்தமானங்களிலிருந்துகூட நான் அதிகம் எடுத்துஆளக்கவில்லை. நமக்கு இக்காலத்தில் வாழ்க்கை நடத்த ஏசுநாதரின் போதனைகள் மாத்திரம் போதாவிடில், அப்போதனைகளுக்கு உதவியாகச் சத்தியத்தை நாடவேண்டும். அதற்கு மாறாக இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு கிழக்கு ஆசியாவிலும் தெற்கு ஐரோப்பாவிலும் அக்காலத்திய நிலைமைக்கு ஏற்றபடி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஏசுவின் போதனைகள் நமக்குச் சத்தியமாகா. அவை நமக்கு வழிகாட்டிகளாகவே இருப்பவை.

இப்புத்தகம் வரைவதற்கு எனக்குச் சுயமாக இருக்கும் குறைவுகளுடன், ஜப்ல்பூர் சென்ட்ரல் ஜெயிலில் நான் பதினைந்து மாதங்கள் கழித்த சமயம் எழுதப்பட்டதால், ஆதாரங்கள் குறிப்பிட அதிக நூல்கள் கிடைக்ாத குறையும் சேர்ந்தது. என்னிட மிருந்தவை Authorised version of the Bible, The Modern Reader's Bible by R. G. Moulton, The New Testament, Translation by James Moffat and The New Testament Translation by E. J. Goodspeed. அனேகமாய் நான் புதிய ஏற்பாட்டிலிருந்து எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். ஆனால், சிற்சில சமயம் அதனுடைய மொழிபெயர்ப்பு குறையுடையதா யிருந்தால், இதர புத்தகங்களிலிருந்து எடுத்து உரைத்திருக்கிறேன். அவ்விதம் செய்திருப்பதை அங்கங்கே குறிப்பிட் டிருக்கிறேன்.

இப்புத்தகத்தி லடங்கிய சிந்தனைகளை, இதே மாதிரி தேடி அலையும் ஆத்மாக்கள் படித்து ஏதாகிலும் பயன் பெறக்கூடு மென்ற எண்ணத்தில் வெளியிடுகிறேன்.

காந்தியடிகள் தமது சொந்த அனுபவப் பொக்கிஷத்திலிருந்து எடுத்துரைத்திருக்கும் உற்சாக மூட்டும் வார்த்தைகளுக்கு என்னுடைய ஆழ்ந்த நன்றி.

ஜே. ஸி. குமரப்பா

# விஷய விளக்கம்

யூதர்களின் மதத்திற்கு உரிய பரிபாஷைச் சொற்களையும், மொழிக்கு உரிய அணி அலங்காரங்களையும் நீக்கிவிட்டு, மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான் இந்நால்வர்களின் சுவிசேஷங்களைப் படித்தோமானால் நாம் காண்பது ஒரு குருவின் மானிட வாழ்க்கையே; தமது அனுதாபத்தினு லும், ஞானத்தினாலும் மனிதரின் மனோபாவத்தை உணர்ந்து, அவரவர்க்கு ஏற்ற நற்போதனை செய்ய அதிகாரம் பெற்றிருப்பவரான ஒரு குருவின் வாழ்க்கையும் சொற்களுமே. மனிதரின் உள்ளத்தில் நடப்பதை எடுத்துச் சொல்லியே அறிய வேண்டுமென்ற அவசிய மில்லாத ஞானி அவர். வையமும் வானும் மறைந்தாலும் அவ்விதக் குருவின் போதனைகள் என்றும் அழியாமல் இருக்கும்.

ஏசுநாதரின் போதனைகளை முற்றும் அறிவதற்கு நமக்கு இந்த நான்கு வரலாறுகள்தான் அத்தாட்சிகளாக இருக்கின்றன. ஆகையால், நாம் இவைகளின் ஆதாரத்தைக் கொண்டு அச்சரித்திரத்தை அறிய முயலும் சமயத்தில் ஒரு பாஷைக்கும், அதன் சொற்களுக்கும் உள்ள எல்லைகளையும் உணர வேண்டும்.

ஆங்கிலத்தி லிருக்கும் சுவிசேஷங்கள் இரேக்க பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டவை. ஏசுநாதர் பேசின பாஷை இவ்விரண்டுமல்ல, மற்றொன்று. இந்த வரலாற்றில் கூறப்பட் டிருக்கும் சம்பவங்கள் நடந்து எத்துணையோ வருஷங்கள் கடந்த பின்பே இச் சுவிசேஷங்கள் எழுதப் பட்டன. மேலும் இவ்வாறு பற்பல மொழி பெயர்ப்புகளில் அவைகள் எழுதப்படும் சமயம், ஏசுநாதரின் கருத்திற்கு முற்றும் விரோதமான சில சொற்கள் ஏட்டுப் பிரதியை எழுதுவோரினால் சொந்தமாகச் சேர்க்கப்பட்டு நூலில் கலந்து விட்டன. குருவின் போதனைகளில் வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் பாராமல், நமது மனத்தில் பக்தியுடன் அவருடைய குரலைக் கேட்க எத்தனித்தோமானால் இந்தச் சிறிய விஷயங்களால் நமக்குப் பாதகம் ஏற்படாது. ஒருவருடைய சொற்களைவிட அவருடைய ஆத்ம சக்தி நமக்கு அதிகம் தெரிவிக்கும். ஏசுநாதரும் தமது வாய்மூலம் கூறும் சொற்களில் தமது நிரந்தரமான போதனைகள் முழுவதையும் அடக்கிவிட உத்தேசிக்க வில்லை. அவருடைய உபதேசம் முழுவதும் பெற்றுக்கொள்ளும் சக்தி அவருடைய சீடர்களுக்கு இல்லை. ஆகையாலேயே, "நீங்கள் சத்தியத்தைத் தேடிச் சென்றால் அதை அடைவீர்கள்" என்றார். ஆகையால் நாம் இவைகளை யெல்லாம் நன்கு உணர வேண்டும். அவருடைய சொற்களில் அவருடைய உபதேசங்கள் முழுவதும் அடங்கி இருக்கின்றன என்று எண்ணிவிடக் கூடாது. அந்தச் சொற்கள் காண்பிக்கும் வழியையே பின்பற்றிச் செல்லவேண்டும். சத்தியத்தைக் காண்பிக்க மந்திரமும் மாயமும் அவசிய மில்லை.

மேலும் அவருடைய வார்த்தைகளுக்கு அர்த்தம் தேடும் சமயம் அவருடைய காலம், அவர் சஞ்சரித்த நாடுகளாகிய கீழைநாடுகள், அவற்றின் நிலைமைகள் ஆகிய எல்லாவற்றையும் மனத்தில் வைத்துக்கொண்டால் நமக்கு உதவியா யிருக்கும். திவ்விய சபைகளின் மூலம் தற்காலம் நமக்கு அளிக்கப்படும் உபதேசங்களில் மேலைநாடுகளில் திவ்விய சபையின் இத்துணை வருஷத்திய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் சம்பவங்கள் பலவற்றின் சாயையும் கலந்திருப்பதால் நாம் ஏசுவின் உபதேசங்களின் உள்-சாரத்தைப் பெருமல் வெளித் தோற்றத்தை மாத்திரம் பெறுகிறோம். அனேக சமயம் மாதாகோயில் சம்பிரதாயங்கள் என்று ஏற்பட்டவைகளில் உபதேசங்களின் முக்கிய உண்மை இருப்ப தில்லை. ஏசுவை நாம் காணவேண்டு மென்றால் இவைகளின் கட்டுகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

கிழக்கு நாடுகளில் குருக்களும், போதகர்களும் தம்மை அவதார புருஷர்க ளென்று சொல்லிக்கொள்வது சகஜம். இதனால் அவர்கள் தெய்வம் என்ற அர்த்தம் ஏற்படாது. நான்காவது சுவிசேஷம் முழுவதிலும் ஏசுநாதர் அவதார புருஷராகவே வர்ணிக்கப்பட் டிருக்கிறார். அவர் நாமத்தில் விசுவாசமுள்ளவர்களுக் கெல்லாம் "கடவுளின் புத்திரர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் அதிகாரத்தை ஏசுநாதரே கொடுத்தார். (யோவான். 1—12.) நன்கு நோக்கினால் விசுவாசம் என்பது வெளிப்படையாய்க் காண்பிக்கும் பக்தியல்ல, ஒரு குருட்டு நம்பிக்கையுமல்ல; விசுவாசம் என்பது அவரவர் மனப்பூர்வமாக மனம், வாக்கு, சரீரம் மூன்றினாலும் பின்பற்றும் விஷயம் என்பது தெரியும். உண்மை விசுவாசம் செய்கைகளில் வெளிப்படும். "என்னிடம் விசுவாசமுள்ளவர்கள் நான் செய்யும் வேலைகளையும் இன்னும் மேற்பட்டவைகளையும் செய்வர்" என்கிறார் ஏசுநாதர். நமது பக்தியை அவருடையதைப் போன்றதான தூய வாழ்க்கையின் மூலம் வெளிப்படுத்துவதா, அல்லது வெறும் ஜபத்தை வாயினால் முணுமுணுப்பதன் மூலம் வெளிப்படுத்துவதா?

"நாமம்" என்றால் என்ன அர்த்தம்? இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நாமம் என்றால் ஒருவர் எந்தக் கொள்கைகளைப் போதிக்கின்றாரோ அவைகளைக் குறிப்பதாகும். "மஹாத்மா காந்திக்கு ஜே" என்று ஜனங்கள் ஒலிக்கும் சமயம் 105 பவுண்டு எடையுள்ள அந்தத் தேகத்தின் எலும்புக்கும் சதைக்கும் வெற்றி வேண்டுமென்று ஒலிக்கிறதில்லை யல்லவா? காந்திஜி பின்பற்றும் கொள்கைகள், அதாவது சத்தியமும் அஹிம்சையும் வெற்றியடைய வேண்டுமென் றல்லவோ சொல்லுகிறார்கள். அதேபோல் நாம் நமது வாழ்க்கை முழுவதையும் அவர்காட்டும் இலட்சியங்களுக்கு அர்ப்பணம் செய்தாலே நாம் ஏசுவின் விசுவாசிகள் என்பது ஏற்படும். இப்புத்தகத்தில் நான் ஏசுநாதரின் சொந்தக் குணங்களிலிருந்து அவருடைய போதனைகளின் அர்த்தத்தை விளக்க முயன்றிருக்கிறேன். ஆகையால் எந்த இடத்திலாகிலும் சொற்களின் எல்லைக்கு மேற்பட்டதாக வியாக்கியானம் இருந்தால் மேற்கூறிய விஷயங்களே அதற்குக் காரணம் என்பதைப் பணிவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.



## முதல் அத்தியாயம்

# நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசிகளும்

ஏசுவின் ஜனனத்தையும் அவர் போதனைகளையும் நன்கு அறிவதற்கு நாம் அவர் வசித்த காலம், தேசம், வர்த்தமானம் மூன்றையும் உணர வேண்டும்.

ஏசு ஒரு யூதராகப் பிறந்தார். முதற் புத்திர ரென்பதனால் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டு, யூதர்களின் சம்பிரதாயப்படி "நியாயப் பிரமாணம்" என்று அவர்களால் கொண்டாடப்பட்ட முறையினின்று சிறிதும் வழுவாமல் வளர்க்கப் பட்டார்.

யூதர்கள் அச்சமயம் ரோமர்களின் அரசாட்சியின் கீழகப்பட்டுத் துடித்துக்கொண் டிருந்த போதிலும், மிகவும் தன்மதிப்பும் கௌரவமும் கொண்ட ஜாதியினராக இருந்தனர். கடவுளின் காரியங்களைச் சரிவர நிறைவேற்றுவதற் கென்றே தாங்கள் அவரால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களென்றும் இப்ராஹிம் நாள்தொடங்கி இரண்டாயிரம் வருஷகாலமாய்க் கடவுளின் அருள் பெற்றிருப்பவர்க ளென்றும் கருதினர்; இதர தேசத்தவர்களைப் புறஜாதிய ரென்றும், தமது சத்துருக்களென்றும், தம்மிடமிருந்து மரியாதையோ உதவியோ பெறத் தகுதியற்றவ ரென்றும் கருதினர். இவ்வித மனப்பான்மையானது அவர்களைக் குறுகிய நோக்கமுடையவராகவும் அதிகாரத்தில் விருப்பமுள்ளவர்களாகவும் செய்யவே அவர்கள் நாளடைவில் சுயநலப்பற்று உடையவர்களும் தாம் செய்வதே சரி என்று நினைப்பவருமாக ஆனார்கள்.

**கடவுள்—எல்லாம் வல்லவர்.** அவர்கள் கடவுளைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணமும் இவ்வாறே இருந்தது. கடவுள் தமக்கே உரியவர், தங்களுடைய நன்மைக் கென்றே வெய்யிலும் மழையும் ஏற்படுத்துகிறவர், தமது எதிரிகளை அடக்கும் சேனாபதி, தகப்பனின் குற்றத்திற்காகப் பிள்ளையையும், பிள்ளையின் பிள்ளையையும் என்று மூன்றாவது நான்காவது தலைமுறை வரை தண்டிக்கும் சின வடிவினன், அவர்களுடைய அன்பர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாய் அருள் புரியும் கருணை வள்ளல் என்று கருதினர். ஆகையால் மிகப் பயத்துடனும், நடுக்கத்துடனும் கடவுளின் நாமமாகிய யகோவா என்பதைக்கூட உச்சரிக்க அஞ்சினவர்களாய் அவர்கள் கடவுளை வழிபட்டனர்.

**நியாயப் பிரமாணம்.** அவர்களுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு சமயமும் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டு மென்பது மோசேயால் விவரமாக விதிக்கப்பட் டிருந்தது. அந்தச் சாஸ்திர விதிகளை "நியாயப் பிரமாணம்" என்று அவர்கள் கூறினர். அந்த விதிகளைப் பின்பற்றாமல் சிறிதாகிலும் பிசகி நடந்தால் எவ்விதத் தண்டனை அளிப்ப தென்பதும் அப்பிரமாணத்தில் கூறப்பட் டிருந்தது.

பாபம். "கல்லில் எழுதப்பட்ட" இந்தப் பிரமாணத்தை மீறி நடப்பதையே பாபம் என்று யூதர்கள் கருதினர். (ரோமர் 5—13 யோவான் 3—4)

தீர்க்கதரிசிகள். இவ்விதம் கடவுள் கடூர சாஸனம் செய்கிறார். அவருடைய உத்திரவுப்படி நடக்காவிட்டால் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று ஏற்படவே, கடவுளுக்கும் ஜனங்களுக்கும் நடுவில் இருப்பவர்களான குருமார்களின் தேவை ஏற்பட்டது. அந்தக் குருமார்கள் கடவுளின் கோபத்தைத் தணிப்பதற் கென்று அனேகம் பிரார்த்தனைகள், பலிகள் முதலியவற்றை நியமித்து அவைகளின் மூலம் தமக்குச் சாதகம் ஏற்படுத்திக் கொண்டனர். இதனால் நியமனங்கள், விதிகள் முதலியவை வளர்ந்தன.

நியாயப் பிரமாணத்தை விளக்குவதற் கென்று சாஸ்திரிகள் ஏற்பட்டனர். பிரமாணத்தைச் சிறிதும் மீறாமல் நடப்பவன் தன்னுடைய நடத்தையில் பெருமை கொள்வான். மற்றவர்களைப் "பாவிகள்" என்றும் "அனுசாரமானவர்" என்றும் கூறுவான். அக்காலத்திய யூதர்கள் சாஸ்திரத்தின் சொற்களைப் பின்பற்றுவதில் முனைந்து சொற்களின் உயிரை இழந்து விட்டனர்.

இவ்விதச் சாஸனத்தில் வாழ்க்கை பாரமான தாகவும், நிறைவல் உண்டாக்குவ தாகவும் ஆயிற்று. தண்டனை விதிக்க அதிகாரம் படைத்தவர்களான குருமார்களிடம் ஜனங்கள் பயந்துகொண் டிருந்தனர். தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் சுய லாபத்திற்காகவுமே கடவுளை வழிபட லாயினர். உலகப் பாசமும் தனலாபத்தில் அதிக விருப்பமும் உள்ளவ ராயினர். இந்தக் குணங்கள் இக்காலத்திலும் யூதர்களிடையே காணப்படுகிற தென்றே உலகத்தவர் சொல்லுகின்றனர். மெஸய்யாவின் கீர்த்தியும் ஒரு லௌகிகச் சக்கரவர்த்தியின் கீர்த்தியாக மாறிற்று. வெளித் தோற்றத்திற்கும் தண்டனைக்கும் பயந்தே நேர்மையான வாழ்க்கை நடத்துவது என்பது ஏற்படலாயிற்று. மனிதருக்கு மனிதர் இருக்கும் சம்பந்தம் சட்டப்படி ஏற்பட்ட சம்பந்த மாகவும், "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்ற பழி வாங்கும் குணமுள்ள தாகவும் இருந்தது.

இவ்வித நிலையில் ஏசுநாதரின் வரவை அறிவிப்பவனாக யோவான் ஸ்நானகன் தோன்றி "ஏ, விரியன் பாம்புக் குட்டிகளே, வரும் கோபத்திற்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வழி காட்டினவன் யார்? மனம் திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள்" என்று பிரசங்கம் செய்யலானான். அவனே யூதர்களின் தீர்க்கதரிசிகளுள் கடைசித் தீர்க்கதரிசி. அதற்கு மேல் ஏசுநாதர் தோன்றிச் சத்தியத்தையும் கருணையையும் நிலை நாட்டினார்.

இரண்டாவது அத்தியாயம்

# "இதற்கே நான் ஜனித்தேன்"

(க) ஏசு நியாயப் பிரமாணங்களையும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளையும் நிறைவேற்றவே வந்தார், அழிக்க அல்ல. (மத்தேயு. 5—17)

யூதர்கள், வழியை வீடென்று எண்ணி, இகலோகத்தில் கழிக்கும் நாட்களை நிரந்தர வாழ்க்கையெனக் கருதிவிட்டனர். "இங்கே அழியா நகரம் இல்லை" என்பதை மறந்து விட்டனர்.

பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் வாக்குகளிலும் கூறப்பட்டிருக்கும் வழியாகச் சென்று முன்னேற்ற மடைவதற்கு மாறாக, அவர்கள் சேற்றில் அழுந்திவிடவே, ஏசு தோன்றி அவர்களைக் கைதூக்கி விட்டு நல்ல பாதையில் நிறுத்தி, கடவுளுடன் அவர்கள் ஐக்கியமானவர் என்று போதித்து, பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் ஆரம்பித்த வேலையைப் பூர்த்தி செய்ய உதவினார். இயேசு தமது அவதாரத்தின் காரணம் இதுவே என்று கருதினார்.

**கடவுள் — தந்தை.** யூதர்கள் தம்மைப் பற்றியும், பிரமாணத்தைப் பின்பற்றுகிறோம் என்று தமது ஆசார வழியைப் பற்றியும் கொண்டுள்ள இறுமாப்பை ஏசுநாதர் அகற்ற முயன்றார். பாபம் செய்வோரை மன்னிப்புப் பெற முயலும்படி அவர் அழைத்தார். (மத்தேயு. 9—13) இதைச் செய்வதற்கு அவர், கடவுள் ஒரு வகுப்பினரை மாத்திரம் காப்பாற்றுபவர் என்றும், ஒரு வகுப்பினரிடம் மாத்திரம் அன்புடையவரென்றும் யூதர்கள் கொண்டிருந்த குறுகிய ஜீவனற்ற எண்ணத்தைத் தகர்த்து, கடவுள் உலக முழுவதன்பாலும் அன்பு கொண்ட ஜகத்பிதா, "உனக்கும் தந்தை, எனக்கும் தந்தை, உனது கடவுள், எனது கடவுள்," என்ற விரிந்த நோக்கு உடையதாகச் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. அவர்கள் கொண்டிருந்த "மகாவல்லவரும் ருத்ரரூபியுமான கடவுள்" என்ற எண்ணம் ஏசுநாதரின் போதனையினால் "பரமண்டலத்திலிருக்கும் நமது பிதா" என்ற அன்பும் அபயமும் அளிப்பதான எண்ணமாக மாறிற்று.

இவ்வித மனப் [illegible]மை ஏற்படவே, ஆடம்பரமான ஆராதனை வழிபாடுகளுக்கு அவசியமில்லாமல், குருமார்கள் தமக்கென்று ஏற்படுத்திக் கொண்ட அரணனது அழிவு அடையலாயிற்று. தகப்பனுக்கும் பிள்ளைக்கும் போன்ற சம்பந்தம் கடவுளுக்கும் மனிதனுக்கும் உண்டென்றால், இவ்விருவர் இடையில் மத்தியஸ்தர்களுக்கு என்ன அவசியம்?

"அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒரு கேள்வியும் கேட்கமாட்டீர்கள்......நீங்கள் பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வது எதுவோ அதை என் நாமத்தில் அவர் உங்களுக்குத் தருவார். உங்களுக்காக மன்றாடுவேனென்று நான் உங்களுக்குச் சொல்லவில்லை. பிதா தாமே உங்களை நேசிக்கிறார்". (யோவான் 16—23, 26, 27). பலி கொடுப்பதும், பஸ்மங்கள் படைப்பதும் அல்ல, ஆன்ம நேயத்தோடும் உண்மையோடும் வழிபடுவதே நமக்குரிய முறை (யோவான். 4. 23)

தொண்டு - யோவான் ஸ்நானகனின் காலம் வரை பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு வெளியிலிருந்து நிர்ப்பந்தம் அவசியமாக இருந்தது. (மத்தேயு, 11—12). ஏசுநாதர் இதற்கு மாருக ஆத்மக் கட்டுப்பாட்டினுலும் ஆத்ம வளர்ச்சியினுலும், மனிதருக்கு மனிதர் இருக்கும் உறவுமுறையில் தியாக உணர்ச்சியை உண்டாக்கிக் கொள்வதனுலும் ஒருவருடைய வாழ்க்கையில் கட்டுப்பாடு இருக்குமாறு செய்தார்.

அக்காலத்தில் பிரமாணத்தின் சாஸனம் மிகப் பலமாக இருந்தபடியால் அதுவே முக்கியம், அப்பிரமாணங்களை நிறைவேற்றவே மனிதன் பிறந்திருக்கிருன் என்று எண்ணும்வகையில் யூதர்களின் வாழ்க்கை இருந்தது. ஏசுநாதர் மீண்டும் மீண்டும் வெளிப்படையாகச் செய்யப்படும் வழிபாடுகளை எதிர்த்து, மனிதருடைய நலத்தையும் உண்மையின் உயர்வையும் கருதாமல் செய்யப்படும் உயிரற்ற ஆசாரங்களை எதிர்த்துப் போராடினுர்.

அவர் மீண்டும் மீண்டும் நோய்ப்பட்டவரை ஓய்வு தினத்தன்று குணப்படுத்தினுர் என்பதற்காக யூதர்களின் குருமார்கள் அவரைத் திட்டினுர்கள். பிரமாணத்திற்கு விரோதமாக அவர் இதைச் செய்கிருர் என்று அவர்களுக்குத் தோன்றினபடியால் அவரை இதற்காகக் கொல்வதற்குக் கூட அவர்கள் எத்தனித்தனர். (மத்தேயு 12—14. லூக்கா 13—14. 14—3, யோவான் 9—16). சாஸனங்களையும் சட்டங்களையும்விட மனிதன் முக்கியம் என்பதை ஏசுநாதர் நிலைப்படுத்தி, செய்கையல்ல பாபம், செய்கையைச் செய்ய விரும்பும் ஆவியே முக்கியமானது, அந்த ஆவியாகிய ஆத்மா அசுத்தமாக இருந்தால் வெளி வழிபாடுகள் சிறிதும் பயனில்லை என்பதை விளக்கினுர். (மத்தேயு 15—18, 19)

வழிபடும் முறைகளில் மாத்திரமல்ல, வாழ்க்கையிலும் கூட நியாயப் பிரமாணத்தின் சொல்லை மாத்திரம் அனுசரித்தால் போதாது, அதன் கருத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். தனது சிறுபிராயம் முதல் நியாய வழியிலேயே நடந்த ஐச்வர்யவான் ஏசுவிடம் வந்து தான் நித்திய ஜீவனை அடைய இன்னும் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டதற்கு ஏசுநாதர், அவ்வாலிபன் சொற்களை மாத்திரம் பின்பற்றுகிருன், அவனுடைய மனத்தில் இன்னும் ஆசையும் பாசமும் இருக்கின்றன என்று அறிந்து, அவனுடைய உடைமைகள் எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுக்குமாறு கூறினர். இதை அந்த ஐச்வர்யவானுல் நிறைவேற்ற இயலவில்லை. அவனுடைய குறைவு அது. "அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனுக இருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டபொழுது துக்கத்துடன் போய்விட்டான்" என்று கூறப்பட்டிருக்கிறது. (மத்தேயு 19—16 - 22) நியாயப்பிரமாணத்தின்படி நோக்கினுல் அவ்வித மனிதன் ஏதும் தவறு செய்யவில்லை என்றே ஏற்படும். ஆனுல் ஏசுவின் புது நிபந்தனைகளின்படி பார்க்கப் புகுந்தால் அவனுக்குக் குறைவு இருந்தது.

ஏசுநாதரை ஒரு சமயம் ஒரு சாஸ்திரியார் நியாய சாஸ்திரத்தில் எந்தக் கற்பனை முக்கியமானதென்று கேட்டார். அதற்கு ஏசு, "உன் ஆண்டவராகிய கடவுளிடம் உன் முழு இதயத்தோடும், உன் முழு ஆத்மாவுடனும், உன் முழு மனத்துடனும் அன்பு கூரவேண்டும்" என்ருர். இதுவே முதன்மையானதும் பெரியதுமான கற்பனை. இரண்டாவது,

"உன்னிடத்தில் நீ அன்பு கூர்வதுபோல் உன் அயலானிடத்திலும் அன்பு கூரவேண்டும்" என்பதுவே. "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப் பிரமாணம் முழுதும், தீர்க்கதரிசனமும் அடங்கி இருக்கின்றன" என்றார். (மத்தேயு 22—37 - 40) மேலும் நற்சமாரியன் கதையில் (லூக்கா 10—30 - 35) அயலானுக்கு நாம் ஜாதி, மதம், வகுப்பு வித்தியாசம் பார்க்காமல் உதவி செய்ய வேண்டியது என்பது தெரிகிறது. அன்பின் மூலமும், நாம் பிறருக்குச் செய்யும் தொண்டின் மூலமும் கடவுளை வழிபட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. வேத பாரகர்களுடையவும், பரிசேயர்களுடையவும் நீதியைவிட நமது அன்பு அதிகமாக இராவிட்டால் நாம் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க இயலாது. (மத் 5—20)

(உ) சத்தியத்தைக் குறித்துச் சொல்லவே ஏசு அவதரித்தார். (யோவான் 18—37)

அவரே சத்தியமும் ஜீவனும் (யோவான் 14—6) அவரே ஆதி, அவரே உலகத்தை ஆள்பவர். இதையே நான்காவது சுவிசேஷத்தின் முதல் நான்கு பாக்களும் கூறுகின்றன. "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை கடவுளுமாக இருந்தது. ஆதியிலே கடவுளோடு இருந்தது அவரே. சகலமும் அவர் மூலமாய் உண்டாயின. உண்டானதொன்றும் அவரை அல்லாமல் உண்டாக வில்லை. அவரில் ஜீவன் இருந்தது. ஜீவனானது மனுஷருக்கு வெளிச்சமாயிருந்தது." (குட்ஸ்பீட் மொழி பெயர்ப்பு) மெய்க் கடவுளை அறிவதே நித்திய ஜீவன். (யோவான் 17—3) சத்தியத்தை அறிந்து கொண்டால் நாம் சுயாதீனராவோம். (யோவான் 8—32) பாபத்தினின்று விடுபடுவோம். நியாயப் பிரமாணத்தின் சாஸ்திரியான மோசேதான் குற்றஞ்சாட்டுகிறவன் (யோவான் 5—45). பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பவர், நாம் செய்வது நேர்மை, சரியானது என்பதற்காக அவ்வண்ணம் நடக்காமல், அவ்விதம் செய்யாவிட்டால் தண்டனை விதிக்கப்படும் என்ற காரணத்திற்காகக் கீழ்ப்படிந்தனர். மனிதர் சுய விருப்பப்படி செய்யவும் நினைக்கவும் இயலாதவ ராயினர். பிறந்தது முதல் இறக்கும் வரை ஒருவனுக்கு ஏற்பட்ட விதிகளைக் கண்மூடித்தனமாக ஓர் இயந்திரம் போலப் பின்பற்றுவது என்று ஏற்பட்டிருந்தது. சத்தியத்தின் உயிர் நமது உள்ளத்தில் ஏற்பட்டாலோ, அது நமது வாழ்க்கையின் கடிவாளத்தைத் தனது கையில் எடுத்துக் கொண்டாலோ அவ்விதம் கண்மூடித்தனமாக நாம் பிரமாணத்தைப் பின்பற்ற வேண்டாம். நமது அந்தர்யாமி கூறும் வண்ணம் நாம் நடக்கலாம். பலாத்காரப் படுத்தும் வெளிக் கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமல், ஆத்மக் கட்டுப்பாட்டினால் ஏற்படும் ஞான சக்திக்கு அடங்கி வாழலாம். பிரமாணமே நமக்கு அதிகாரி என்று எண்ணினால் பாபம் ஏற்படும் என்ற கொள்கைக்கு அடிமையாகி விடுகிறோம். அதனால், பயமும் க்ஷாத்திரமும் மனத்தில் உண்டாகின்றன. சத்தியத்தின் ஆட்சியோ என்றால் அன்பின் மூலம் வேலை செய்கிறது. மனிதன் போலீஸ்காரனுக்கும் தண்டனைக்கும் பயந்து திருடாமல் இருப்பது என்றில்லாமல், பிறருடைய உடைமையைத் திருடித் தான் லாபம் பெறுவது தவறு என்ற தர்ம சிந்தையினால் திருடாமல் இருப்பான். இவ்விதமான சத்தியத்தின் உயிரை நாம் பெற்றோமென்றால், பிறகு எதைச் செய்யலாம்

எதைச் செய்யக்கூடாது என்று வழிகாட்டப் பெரிய சாஸ்திரப் புத்தகங்கள் வேண்டியதில்லை, சாஸ்திரிகளும் வேண்டியதில்லை. சத்தியம் என்ற சகாயரே நமக்கு எல்லாமும் போதித்து, (யோவான் 14—26) ஏசுநாதர் கூருமல் விட்ட சத்தியங்களையும்கூடப் போதிப்பார். (யோவான் 16—12, 13.)

வெளிப்பட்ட ஆட்சிக்குக் கண்மூடித் தனமாகக் கீழ்ப்படிவது கஷ்டம். அவ்விதம் கீழ்ப்படிவதும் ஒன்றும் பெருமைப்படக்கூடிய விஷயம் அல்ல. ஆனல், நமது அந்தர்யாமியை-நமது மனச் சாட்சியைப் பின்பற்றுவது, அவ்விதம் பின்பற்றுவதால் முட்பாதை வழியாகப் போக வேண்டியிருந்தாலும், திருப்தியை அளிக்கும். ஆகையால் ஏசுநாதர் கஷ்டப் படுவோரையும், பிரமாணத்தின் சாஸனத்திற்குக் கீழ்ப்பட்டு வாழ்க்கையின் சுமை தாங்கமுடியாமல் இருப்பவரையும் அழைத்துத் தம்மை அடைந்து ஆத்மசாந்தி பெறுமாறு சொல்லு ‍ ‍ ‍ ‍ ர். அப்பிதாவின் மொழியை ஏற்று, அவருடைய ஆவியின் உதவியைப் பெறுவோருக்கு, அவரால் காண்பிக்கப் பட்ட ஆவியின் வழியே செல்வோருக்கு வாழ்க்கையின் சுமை எளிதாகும்.

இவ்விதம் ஏசுநாதர் தம்மை அடைந்தவ களைப் பிரமாணத்தின் சாஸன விதிகளின் மூலம் ஏற்படும் ஆத்ம மரணத்திலிருந்து விடுவித்துத் தமது அன்பினலும் அருளினலும் பாபத்திலிருந்து காப்பாற்றுகிருர். (ரோமர் 5—14, 7—6, 8—2. காலத்தியர் 5—18.)

(கூ) அவரை நம்பி இருப்பவர்களுக்கு நித்திய ஜீவனை அளித்து (யோவான் 6—38,) அவர்கள் கடவுளுடன் ஐக்கியமாகும் வண்ணம் செய்யவேண்டும் என்பதற்கே ஏசு அவதரித்தார்.

“அவர்கள் ஒன்ருக ஐக்கியமாகட்டும்; பிதாவே, நீர் என்னிடத்திலும், நான் உம்மிடத்திலும் ஐக்கியமாக இருப்பது போல் அவர்களும் நம்மிடத்தில் ஐக்கியமாகட்டும்.” என்று அவர் பிரார்த்திக்கிருர். நித்திய ஜீவன் என்பது நாம் இங்கே அனுபவிக்காமல் பிற்காலத்தில் அனுபவிக்கப் போகும் ஒரு வஸ்து வல்ல. அதை இங்கேயே இப்பொழுதே பெறலாம். “மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், விச்வாசமாக இருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவன்.” (யோவான் 6—47.)

“என் வார்த்தைகளைக் கேட்டு, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவன் நித்திய ஜீவனை உடையவன், அவன் தீர்ப்புக்காளாகான், அவன் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் வந்தாயிற்று.” (யோவான் 5—24) இந்த மனித சரீரத்திலிருக்கையிலேயே, ஆத்மா பிதாவுடன் ஐக்கியமாவதே நித்திய ஜீவனை அடைவதாகும். அவரிடம் விசுவாசம் என்பது வெறும் வாய் உச்சரிப்பு அல்ல. “என்னிடத்தில் விசுவாசம் வைக்கிறவன் நான் செய்யும் கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரியவைகளையும் செய்வான்” என்கிருர் ஏசுநாதர்.(யோவான் 14—12.) ஆகையால், விசுவாசம் என்று சொல்லப்படுவது உண்மையானதா அல்லவா என்பதைக் கண்டுகொள்ள இதுவே திட்டம். விசுவாசிகளுக்கு ஒரு இலட்சியமாக இருக்கும் விதம் ஏசு செய்த காரியங்கள் எவை? யோவான் ஸ்நானகன் தனது சீடரை அனுப்பி “வருகிறவர் நீர்தானே?” என்று கேட்டதற்கு ஏசுநாதர் அவர்களிடம் தாம் செய்யும் வேலைகளை யோவானிடம் அறிவிக்கும்படி சொன்னர். “குருடர் பார்வை அடைகிருர்

கள். சப்பாணிகள் நடக்கிறார்கள். குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள். மரித்தோர் எழுப்பப்படுகிறார்கள். தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது." (மத்தேயு. 11—5) விசுவாசம் இவ்விதம் வேலையாக மாறினால்தான் உண்மை விசுவாசிகள் "பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள். அந்நியனா யிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள். வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலில் இருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்." என்று பிதா சொல்வதைக் கேட்க எதிர் பார்க்கலாம். (மத்தேயு, 25—35, 39) "இந்த மிகச் சிறியரான ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 25—40) ஆகையால், கடவுளைப் பயத்திலும் பீதியிலும் ஆராதித்து வழிபடுவதைக் காட்டிலும் நமது பக்தியானது எளியவருக்கு அன்புடன் தொண்டு செய்வதில் வெளிப்பட வேண்டும். அவ்விதத் தொண்டில் நமது சரீர வாழ்க்கையும், சுபாவ உணர்ச்சிகளும் உயர்வு பெற்று, நாம் நமது சக்தியைப் பிறருடைய குறைகளைத் தீர்ப்பதற்கென்றே செலவழிப்பதன் மூலம் உண்மைச் சந்தோஷத்தை அடைவோம்; அதுவே சத்திய வாழ்க்கை.

(சு) நாம் ஜீவனைப் பெறவும், அபரிமிதமாய்ப் பெறவுமே ஏசு அவதரித்தார். (யோ. 10—10)

பிறருக்கு உதவி செய்வதற்கென்று நமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து நாம் வாழ்ந்தால் நமது வாழ்க்கை இன்னும் நிறைவுடையதாகவும் சிறந்ததாகவும் ஆகும். நமது குடும்பம் என்று நம்முடன் பிறந்த ஒரு சிலரைக் கருதும் தாழ்ந்த குணம் நீங்கி, உலக முழுவதும் இருக்கும் கோடிக் கணக்கானவரை நமது அன்பு சூழ்ந்து நமது வாழ்க்கை மேலான ஆத்மாவின் குணத்தை அடையும்.

இந்த மானிட உலகம் மிகத் துச்சமானதாகும். ஒருவனுடைய ஜீவன் அவனுடைய செல்வப் பெருக்கத்தில் இல்லை. (லூக்கா 12—15) தனது ஆயுட்காலத்தைத் தனது சௌக்கியத்திற்கும் சந்தோஷத்திற்கும் என்றே செலவழிப்பவன் உண்மை வாழ்க்கையை இழப்பான். பிறருடைய வாழ்க்கையில் சிறிது துக்க நிவாரணமும், சிறிது சந்தோஷமும் ஏற்படுத்துகிறவன் தனது நித்திய ஜீவனை அடைவான். (மத்தேயு. 16—25) "ஒருவன் உலகம் முழுவதும் ஆதாயப் படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக எதைக் கொடுப்பான்?" (மத்தேயு. 16—26.)

நல்ல காரியங்கள் செய்தால் அதற்கு வெகுமதி உண்டு என்று பழைய ரீதியில் இருந்தது. ஆனால், ஏசு நமது கடமையை வெகுமதிக்காகச் செய்யக்கூடாது, அது நமது கடமை என்பதற்காகவே செய்ய வேண்டும் என்று நமக்குச் சொல்லுகிறார். (மத்தேயு 5—45, 46.)

"உங்களுக்குக் கட்டளை யிடப்பட்ட யாவற்றையும் செய்து முடித்த பின்பு, நாங்கள் பிரயோஜனமற்ற அடிமைகள், செய்யக் கடமைப்பட்டிருந்தவைகளைத்தானே செய்தோம் என்று சொல்லுங்கள்" என்றார்.

(லூக்கா. 17—10.) திராட்சைத் தோட்டத்துக்காரன் கதையில் (மத்தேயு. 20—1 - 16.) நாம் நமது வேலைக்குத் தக்க கூலியையும் எதிர் பார்க்கக் கூடா தென்கிறார். தாலந்துக் கதையில் (மத்தேயு. 25—14 - 30.) ஒவ்வொருவரையும் தன்னால் இயன்ற அளவு, தனக்குக் கடவுள் அளித்த சக்திக்கு ஏற்றவாறு உழைக்குமாறு சொல்லுகிறார். அவ்விதம் செய்தால் நாம் கொடுப்பது குறைவாகவோ, மேற்பட்டதாகவோ, எவ்வித மிருந்தாலும் நாம் நமது கடமையைச் செய்தவ ராவோம். ஏசுவே செய்ய வேண்டியது செய்யப்பட்டது என்ற விஷயத்தில் திருப்தியை அடைகிறார். "என்னை அனுப்பினவருடைய சித்தத்தைச் செய்து அவருடைய வேலையை முடிப்பதே என் போஜனம்." (யோவன். 4—34.) பரலோகத்தி லிருக்கும் நமது பிதாவைப் போலும், பூரண சற்குணரா யிருக்குமாறு அவர் நம்மைத் தூண்டுகிறார். (மத்தேயு 5—48.)

முன் கூறியவற்றி லிருந்து ஏசு அவதரித்ததன் காரணம் கடவுளே பிதா என்றும், மனித ரெல்லாம் சகோதர ரென்றும் காண்பித்து அதன் மூலம் மனிதருக்கு ஓர் ஆத்ம மேன்மை இருப்பதைத் தெரியப் படுத்துவதற் காகவே என்று ஏற்படுகிறது. நாம் அன்புடனும் பணி செய்வதற் கென்றும் பிறருடன் பழக வேண்டுமென்று போதித்தார். நமது தேகத்தை மாத்திரம் அழிக்கக் கூடியவர்களிடம் நாம் பயப்பட வேண்டிய தில்லை என்பதைக் காண்பித்தார். நாம் கடவுளின் விருப்பப்படி நடப்ப தென்று, நம்மைக் கடவுளின் கையில் அர்ப்பணம் செய்துகொண்டு, நமது இந்திரியங்களை அடக்கக் கற்றோ மென்றால், மனிதரால் இயற்றப்பட்ட விதிகள் உண்மையின் ஆவிக்கு எதிரிடையாக இருக்கும் சமயம் அவைகளைப் புறக்கணித்து நடக்கலாம் என்பதை அவர் தமது வாழ்க்கையின் மூலம் காண்பித்தார். பலனை இச்சிக்காமல், பிதாவின் கட்டளையை நிறைவேற்றி, நமது கடமைகளைச் செய்யவேண்டியது. இவ்விதம் தீர்க்க தரிசிகளின் பிரமாணம் என்ற கருவினின்றும் வெளியேறி, கருணையும் உண்மையுமான வெளி ஆகாயத்தை ஏசுநாதர் அடைந்தார்.

## மூன்றாவது அத்தியாயம்

## "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"

சென்ற அத்தியாயத்தில் கிறிஸ்து அவதாரத்தின் காரணத்தை ஆராய்ந்தோம். இந்த அத்தியாயத்தில் மோசேயின் பிரமாணத்தை அவர் சீர்திருத்தின சமயம் அவர் வெளியிட்ட சில கட்டளைகளை ஆராய்வோம். ஒரு செய்கையைக் காட்டிலும் அதைச் செய்யும் எண்ணம், காரணம், வகை ஆகிய மூன்றிலும் ஏசு அதிகக் கவனம் செலுத்துகிறார். ஒரு மனிதன் நியாயப்படி ஒரு குற்றமும் செய்யவில்லை என்றாலும், ஏசுநாதரின் கொள்கைப்படி அவன் பாபம் செய்தவனாகலாம். செய்கையை மாத்திர மல்ல, பாபத்திற்கு மூலகாரணமாகிய மனத்தையே அவர் கட்டுப்படுத்த முயன்றார். ஐச்வர்யவானுக்கு அவர் கொடுத்த விடையிலிருந்து கீழே

குறிப்பிட் டிருப்பவைகளையே அவர் முக்கியக் கற்பனைகளாகக் கருதிய தாகத் தெரிகிறது. (மத்தேயு. 19—18, 19)

1. கொலை செய்யாதே.
2. விபசாரஞ் செய்யாதே.
3. களவு செய்யாதே.
4. பொய்ச் சாட்சி சொல்லாதே.
5. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ண வேண்டும்.
6. உன்னிடத்தில் நீ அன்பு கூர்வதுபோல் அயலானிடத்திலும் அன்பு கூர் என்பவைகளே.

ஏசு இக் கற்பனைகளையே உயர்ந்தவைகளாகச் செய்து மலையின்மேல் செய்த உபதேசத்தில் கூறியுள்ளார். (மத்தேயு. 5—17, 48) இந்த அத்தியாயத்தில் மோசேயின் பிரமாணத்திற்கு எதிராக ஏசு கூறியிருக்கும் ஐந்து புது கற்பனைகளை ஆராய்வோம்.

(க) தன் சகோதரன் மேல் கோபம் கொள்ளும் எவனும் நியாய விசாரணைக்கு ஆளாவான். (மத்தேயு. 5—22)

கொலைக்குச் சரியாகக் கோபம் கூறப்பட் டிருக்கிறது. கோபம் காரணம், கொலை அதனுடைய பலன் ஆகும். ஆகையால், சமூகத்திற்கு விரோதமான அந்தத் தீச்செய்கைக்கு வேர் போன்றதான காரணத்தையும் அதற்குச் சமமானதாக ஏசு மதிப்பிடுகிறார். இவ்விதத் திட்டப்படி பார்த்தால் நம்மில் யார் கொலைசெய்யாதவர்?

இது மிகவும் கடூரமான கற்பனையாகக் கருதப்பட்டது. ஆகையால் சுமார் ஐந்தாம் நூற்றாண்டின் சமயம் ஒரு நல்ல மனமுடைய எழுத்தாளன் வேதப் புத்தகத்தில், "சகோதரன் மேல்" என்று இருப்பதற்கு அடுத்து, "நியாய மில்லாமல்" என்ற வார்த்தையைச் சேர்த்து எழுதினான்.* இதனால் அக் கற்பனையே அர்த்தமற்ற தாயிற்று. நம்மில் எவர்தான் நியாய மில்லாமல் கோபிக்கும் பைத்தியக்காரர் ஆவர்? பொதுப்படக் கூறின், நாம் எப்போதும் சரியாகத்தானே இருக்கிறோம்? எதிராளி அல்லவோ தவறு செய்கிறான். பிரிட்டன் தற்காப்பிற் கென்று ஜெர்மனியுடன் போராடச் சென்றால், ஜெர்மனியும் தற்காப்பிற் கென்று பிரிட்டனுடன் போராட வருகிறது. தனி மனிதரே ஒருவரை ஒருவர் கோபித்துக் கொள்ளக் கூடா தென்றால், ஒரு தேசம் மற்றொரு தேசத்துடன் எவ்விதம் போராட முடியும்? கணக்கற்ற கொலைகளைச் செய்ய இயலும்? அல்லது இவ்வித நாசத்திற்குக் குருமார்களின் ஆசீர்வாதங்களைப் பெற இயலுமா? ஆகையால், அரசாள்பவரின் உதவியைப் பெறும் நிமித்தம் இந்தச் சொல் மிகச் சாதகமாக இருப்பதால் சபை அதிகாரிகளாலும் இவ்விதம் சேர்த்திருப்பது அங்கீகரிக்கப் பட்டது. உலக அனுபவம் பெற்றவர்களான இந்தப் பண்டிதர்கள் ஏசுவின் வாயை அடைத்தார்கள். ஜனங்களுக்குப் பொய்க் காரணங்களைச் சொல்லி அவர்களுக்குக் கோபம் உண்டாக்காவிடில் பெரிய யுத்தங்களை நடத்த இக் காலத்திலும் இயலாது. இந்த

* தமிழ் வேதாகமத்தின் 1939-வது வருஷப் பதிப்பில் "நியாயமில்லாமல்" என்ற வார்த்தை இல்லை. இவ்வாசிரியர் இவ்விடம் கூறுவதை அது ருசுப்படுத்துகிறது.—தமிழாக்கியவர்.

வார்த்தையைச் சேர்த்துக் கொண்டால், ஏதாவது நியாயத்தைக் காண்பித்து, பிறகு அது ஏசுவின் கட்டளை என்று கூறிப் போரை நடத்தலாம். என்ன திறமை! இரண்டு சொற்களைச் சேர்த்து ஏசுவின் திட்டத்தையே அர்த்தமற்றதாகச் செய்து விட்டார்களே! லூதரின் மொழி பெயர்ப்பிலோ, அல்லது வேறு நல்ல மொழி பெயர்ப்புகளிலோ இந்த வார்த்தை இல்லை என்று அறிகிறேன். தற்காலத்திய புது ஆங்கில மொழி பெயர்ப்புகளிலும் இல்லை. எவ்வித மிருப்பினும் போதகரின் ஆவிக்கு அது முற்றும் விரோதமானது.

விசாரணை போன்ற மனப்பான்மையையும் க்ஷாத்ரம், அருவருப்பு, ஏளனம் ஆகிய மனப்பான்மைகளையும் நாம் முற்றும் துறக்க வேண்டும் என்பது ஏசுநாதரின் கருத்து. மோசேயின் கற்பனை யாகிய "கொல்லாதே" என்பதை இவர் இவ்வண்ணம் உயர்வு செய்து, கோபிப்பதற்கு மாருக நாம் நமது விரோதிகளிடம் அன்பு காண்பித்து, நம்மைச் சபிப்பவர்களை ஆசீர்வதித்து, நம்மை எதிர்ப்பவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிருர்.

(உ) ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன்னுடைய இதயத்தில் அவளோடு விபசாரஞ் செய்தாயிற்று. (மத்தேயு. 5—28.)

ஏசுநாதர் பெண் சேர்க்கையைப் பற்றியும் அது சம்பந்தமான எல்லா விஷயங்களைப் பற்றியும் கொண்டுள்ள அபிப்பிராயம் இந்த வார்த்தையில் அடங்கி யிருக்கிறது. நமது சரீரமும் அதன் தேவைகளும் நமது மனத்திற்குக் கட்டுப்பட வேண்டும். சரீரம், கேவலம் மிருக சுபாவம் கொண்டது. நாம் மிருகங்களுக்கு மேற்பட்டவர், கடவுளின் புத்திரர் என்பதைக் காண்பிக்க நாம் மறுபடி பிறந்தாக வேண்டும். இவ்விதம் மறுபடி பிறப்பது என்பது இரத்தத்தி லல்ல, மாமிசத்தி லல்ல, கடவுளின் வகையில் பிறக்க வேண்டும். சேர்க்கை, கேவலம் மாமிச சம்பந்தமானது.

இயற்கையில் ஆணும் பெண்ணும் உற்பத்திக் கென்றே புணருகிருர்கள். ஆனல், மாமிசத்தில் அமிழ்ந்திய மனிதன் இந்த இயற்கைச் செய்கையை, உற்பத்தியை விரும்பாத சமயத்திலும், கேவலம் தனது சந்தோஷத்திற்கென்று செய்கிருன். இதனுல் மனிதன் மிருகத்திலும் கேடு கெட்டவனுகிருன். ஏசுவின் கொள்கைப்படி நோக்கினுல் கர்ப்பத் தடைக்கு இடமில்லை. தனது ஆசையின் திருப்திக் கென்று எவனும் தனது மனைவியையோ, வேறு ஸ்திரீயையோ அணுகக் கூடாது. விவாகம் என்ற பந்தனம் இக்கொள்கையை மாற்றுது. விவாகமான கணவனும் மனைவியும் குழந்தைகளைப் பெறுவதற் கென்றே சேரலாம்; இதர திருப்திக்காக அல்ல. அவ்வித உறவே உண்மையான பிரம்மசரிய மாகும். ஆகையால், விவாகமான மனிதனும் தன்னுடைய மனைவியை இச்சையோடு பார்த்தால் அவளுடன் தன் இதயத்தில் விபசாரம் செய்தவனுகிருன். இங்கே கூறப்பட்ட பாபம் பிரமாணப்படி பாபமல்ல; சமூக விதிப்படி பாபமல்ல; கடவுளின் கருத்திற்கு விரோதமானது என்பதாலேயே பாபம். விவாகம் என்ற கட்டு ஆசை என்கிற பாப விஷயத்தை ஓர் உயர்ந்த விஷயமாக மாற்றுது. மேலும் இந்த எண்ணமே பாபம் ஆகும். செய்கையைச் செய்தால்தான்

பாபம் என்பதல்ல. கடவுளால் அளிக்கப்பட்ட தேகம் கடவுளின் காரியத்தைச் செய்வதற்கே. நமது ஆசையை நிறைவேற்றிக்கொள்வது அவருடைய காரியத்தைச் செய்வதல்ல.

இவ்விதத் திட்டத்தை ஏசு விதித்திருப்பதால், உண்மை அன்பு இருப்பவர்களிடை மாத்திரமே விவாகம் ஏற்படும் என்பதும் விதியாகிறது. இச்சைக்காக விவாகம் செய்துகொள்வது சரியல்ல. "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்கவேண்டாம்" என்றார் ஏசு. (மத்தேயு. 19—6.) விவாக ரத்து என்பது மனிதரால் ஏற்பட்ட சட்டம். அதற்கும் ஆவி சம்பந்தத்திற்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லை. ஆவி சம்பந்தத்திற்கு அவசியமான அன்பு இல்லாவிட்டால் ரிஜிஸ்தர் பத்திரம் ஒரு விவாகத்தை ஏற்படுத்தாது. ரத்துப் பத்திரம் பெற்றாலும், பெறாவிட்டாலும், அன்பு இல்லாத விவாகம் ரத்துச் செய்யப்பட்டதே.

ஏசு, மோசேயின் விவாக ரத்துச் சட்டத்தைத் தடுத்துக் கூறும் சமயம், "எவனாகிலும் விபசாரத்தின் நிமித்தமே யன்றித் தன்னுடைய மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன், தான் தவறு செய்வதுடன், அவள் விபசாரஞ் செய்யக் காரணமாகிறான்." என்று கூறியுள்ளார். இதனால், ஏசுநாதர் மறுவிவாகம் செய்யும் கணவனையும் விபசாரஞ்செய்பவனென்றும், தனது மனைவி மறுபடி மணந்து அவள் விபசாரஞ் செய்ய அவன் காரணமாகிறான் என்றும் குற்றஞ் சாட்டுகிறார்.

ஏசுவின் சிடர்களுக்கு இந்தப் போதனை கடினமானதாகப் பட்டது. ஆகையால் அவர்கள், "மனைவிக்கும் புருஷனுக்கும் உள்ள காரியம் இப்படி இருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல." என்றனர். (மத்தேயு. 19—10)

எப்போதும் பிறரை மன்னிக்க வேண்டும் என்று போதித்தவரும், விபசாரம் செய்த ஸ்திரீயைப் பார்த்து, "நானும் உனக்குத் தீர்ப்பு இடுகிறதில்லை, நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறினவருமான ஏசுநாதரின் இலட்சியங்களுக்கு விவாக ரத்து அருசியான விஷயம்.

விவாக ரத்து என்பது மனிதரின் பலவீனத்தைக்கண்டு மோசேயினால் ஏற்படுத்தப்பட்ட சட்டமே தவிர ஆதியிலிருந்து அவ்விதம் இல்லை என்று ஏசு சொல்லுகிறார். (மத்தேயு. 19—8.)

**(ரு) "உங்கள் பேச்சில் ஆம் என்பதை ஆம் எனவும், இல்லை என்பதை இல்லை எனவும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினதெல்லாம் தீமையால் விளைவதேயாம்." (மத்தேயு. 5—37.)**

யூதர்களின் ஆட்சியில் பொய்ச் சாட்சி சொல்வது அதிகமாய் இருந்தது. ஏசுநாதர் இதைக் கண்டித்து மனிதருக்குக் கௌரவமும் மதிப்பும் கொடுக்க முயலுகிறார். நாம் சொல்வது உண்மை என்று படவேண்டுமென்றால் அதற்குச் சத்தியங்கள் செய்து மிகைப்படுத்திக் கூறுவதாகிலும், அதைச் சேர்ந்தவற்றை ஒளித்து வைத்துக்கொண்டு குறைவாகக் கூறுவதாகிலும் கூடாது. நாம் என்ன கருதுகிறோமோ, அதைச் சொல்ல வேண்டும். சொல்வதைக் கருத வேண்டும். நாம் அதற்கு மேற்பட்டதாக அலங்காரங்கள் செய்ய முயன்றால் உண்மையைத் தாண்டிச் செல்லும் படியாகும்.

(ஈ) "தீமையை எதிர்த்து நிற்க வேண்டாம்." (மத்தேயு. 5-39.)

மோசேயின் நிர்த்தாட்சண்ய சட்டமாகிய "ஒருவன் செய்த தீங்கிற்குப் பிரதி அதே விதமான தீங்கு அவனுக்குச் செய்யப்பட வேண்டும்," "உன் கண் அதைப் பார்த்து இரக்கப்பட வேண்டாம். உயிருக்கு உயிர், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் போகட்டும். மிகுந்திருப்பவர் பயந்து அதற்குமேல் அவ்விதப் பாபம் செய்யாம லிருக்கட்டும்" என்ற விதிக்கு இது எதிரான கட்டளை யாகும்.

தீமையை எதிர்க்காதே என்பதற்கு அர்த்தம் நாம் சமூகத்தில் செய்யப்படும் எல்லாத் தீமைகளையும், அநீதிகளையும் நிறுத்தாமல் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்பதல்ல. ஏசுநாதரின் செய்கையைக் கவனிக்காவிட்டால் நமக்கு ஏசுவின் இவ்வார்த்தை அர்த்தமற்ற தாகும். பரிசேயரும் ஆயக்காரரும் செய்து வந்த அநீதிகளைப் போராடி வெல்வதிலேயே அவர் தமது வாழ்க்கை முழுவதையும் கழித்தார். ஆகையால் மேற்கூறிய கற்பனையின் தாத்பர்யம் பிரதி - தண்டனையும் இம்சையும் கூடாதென்றே அவர் சொல்வதாகும். * இந்த வார்த்தையை நாம் விரித்துக் கூறினால்: "மிகப் பெரிய காரணம் இருந்தால்கூட உன் அயலானைத் துன்பப்படுத்தாதே" என்பதாகும். தீதினை நாம் பிரதித் தீது செய்து எதிர்க்கக் கூடாது. ஆத்ம-கஷ்டத்தினாலும், பொறுமையாலும், பெருந்தன்மையாலும் அடக்க வேண்டும். நாம் நமது உரிமையைக் கொண்டாடாமல், நமக்குச் செய்யப்பட்ட தீங்கினால் மனம் கோணாமல், நல்ல மனத்துடன் எதிராளியைச் சந்திக்க வேண்டும்.

ஒரு பெண்ணின் கற்புக்குத் தீங்கு ஏற்படும் சமயம் "தீமையை எதிர்க்காதே" என்பது அவள் தன்னைக் கற்பழிப்பதற்கு உடன்படவேண்டும் என்று அர்த்த மல்ல. ஒரு தேசத்தை மற்றொரு தேசம் வென்று அடிமைப்படுத்தி அரசாண்டு வந்தால், அடிமையான தேசம் தன்னை மீட்டுக்கொள்ள முயலக் கூடாது என்பதல்ல. இவ்வித அர்த்தம் ஏசுவின் ஆவிக்கு முற்றும் மாறானது. பெண் தனது கற்பைத் தனது உயிரைக் கொடுத்தாகிலும் காக்கலாம்; ஆனால் தனக்குத் தீங்கு இழைப்பவனுக்குத் தீங்கு செய்யவோ, பழி வாங்கவோ, தண்டிக்கவோ அவள் கருதக் கூடாது. கடவுள் அளித்த சுதந்தரத்தைப் பிறர் பறிமுதல் செய்ய வந்தால் அதை அஹிம்சையின் மூலம் எதிர்க்கலாம். அஹிம்சையின் மூலம் எதிர்ப்பது எதிராளி தீங்கு செய்யாமலிருக்கும் வண்ணம் அவனைத் தடுப்பது—பலாத்காரமாய் எதிர்ப்பது எதிராளிக்குத் தீங்கு செய்து அவனை ஒழிக்க முயலுவதாகும்.

இவ்விடத்தில் தற்காலத்தில் அஹிம்சையும் சத்தியமும் போதிப்பவரான காந்திஜி இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்லும் சில வார்த்தைகளைக் குறிப்பிடுவது ஏற்றதாகும். அவர் ஏற்படுத்திய சில விதிகள் இவை:—

"எதிர்க்கப்படுபவர்கள் எதிர்ப்பவர்க்கு எவ்வித உதவியும் செய்யக் கூடாது. அவர்கள் சிறிதும் சம்மதியாதவர்களாய் இருக்க வேண்டும்."

* தமிழ் வேதாகமப் புத்தகத்தில் "தீமையால் எதிர்க்காதே" என்று ஒரு பாடம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆசிரியரின் கருத்திற்கு அது மிக ஏற்றதாக இருக்கிறது.—தமிழாக்கியவர்

26 N46

"இம்சிப்போருக்கு நாம் கீழ்ப்படியக் கூடாது. அவர்களுடைய உத்தரவின்படி செய்யக் கூடாது."

"அவர்களிடமிருந்து தயவுகள் எதிர்பார்க்கக் கூடாது. அவர்கள் கொடுக்கும் லஞ்சத்தை வாங்கக் கூடாது. ஆனால், அவர்களிடம் வைரம் வைக்கக் கூடாது. அவருக்குத் தீங்கு எண்ணவும் கூடாது."

"நமது நிலத்தை அவர்கள் எடுத்துக்கொள்ள விரும்பினால் நாம் அதைக் கொடுக்க மறுத்து, அவர்கள் எடுத்துக்கொள்ளாமல் தடுக்கும் முயற்சியில் உயிரை வேண்டுமானாலும் விட்டுவிட வேண்டும்."

"அவர்களுக்கு வியாதி ஏற்பட்டோ, அல்லது அதிக தாகமிருந்தோ, நமது உதவியை நாடினால், நாம் உதவி செய்ய மறுக்கக் கூடாது."

தற்காலத்திய "வறண்ட பூமி-தந்திரம்" என்ற யுத்த தந்திரத்தைப் பற்றிக் காந்திஜி சொல்லுகையில் "எதிரியை எதிர்ப்பதற்காகவோ, நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவோ, உயிரையும் பண்டங்களையும் நாசம் செய்வதில் வீரமுமில்லை, தியாகமுமில்லை. நிர்ப்பந்தம் ஏற்பட்டு, நான் என்னுடைய வயல்களையும்வீட்டையும் விட்டுவிட்டுப் போக நேரிட்டால், அவைகளை அழிப்பதைக் காட்டிலும் எதிரி பயன்படுத்திக் கொள்வதே மேல் என்று விடுவேன். இவ்விதம் விடுவதில் வீரமும் தியாகமும் இருக்கின்றன. பயத்தினால் அவ்விதம் விட்டுவிட்டுப் போகாமல், எவரையும் எனக்கு விரோதி என்று எண்ணாமல், நாம் புசிப்பதைப் பிறர் புசிக்கட்டுமே என்ற இரக்க குணத்தினால் விட்டுப் போவதில் வீரமும் தியாகமும் இருக்கின்றன. என்னுடன் சண்டையிடும் என் சகோதரன் நல்ல தண்ணீரைக் குடிக்கக் கூடாது என்று கிணற்று நீரில் விஷத்தைப் போடுவதில் வீரமில்லை. நான் அவனுடன் போர் செய்வதாகவே இருக்கட்டும். அப்போதும் நீரில் விஷமிடுவதில் தியாகமில்லை. தியாகம் என்பது நம்மைப் பரிசுத்தமாக்க வேண்டும். ஆனால், இவ்வித நாசம் செய்வதோ, நாம் நமது முகத்தின் பேரில் கோபித்து மூக்கை வெட்டிக் கொள்வதாகும். வீடு, நிலம், வாய்க்கால் எல்லாவற்றையும் அவ்விதமே விட்டுவிட்டுப் போவதில் வீரம் இருக்கிறது. ஏனென்றால், அவைகளைப் பயன் படுத்தி, என் உணவை உண்டு, என்னுடைய விரோதி என்னையே துரத்த வாலாம். அதில் தியாகம் இருக்கிறது. ஏனென்றால், சத்துருவினிடம் கருணை காண்பிப்பது என்னைப் பரிசுத்தமாக்கி மேன்மைப் படுத்துகிறது."

காந்தியடிகள் கூறிய இவ் வார்த்தைகள் ஏசுவின் அடுத்த கற்பனைக்கு வழிகாட்டுகிறது.

109318

(ரு) "உங்கள் சத்துருக்களிடம் அன்பு கூருங்கள்" (மத்தேயு. 5—44.)

யூதர்கள் தங்களுடைய ஜாதியினரை யெல்லாம் தமது அயலா ரென்றும், இதரர்களைப் புறஜாதியரென்றும், தமது கடவுளாகிய யெகோவாவின் சத்துருக்களென்றும் கருதிவந்தனர். ஆகையால், யூதர்களின் கற்பனையானது "அயலானிடம் அன்பு செலுத்து, எதிரியைப் பகை." "தந்தையையும் தாயையும் கனப்படுத்து" என்றிருந்தது. ஏசு இவ்விதக் குறுகிய பாசங்களை விசாலமானதாகச் செய்து, எல்லா மனிதரையும் ஒருவன் தனது அன்பிற்குப் பாத்திரமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று

செய்கிறார். நமது வாழ்க்கை உண்மையில் மேன்மை பெற்றதாகி, நமது அன்பு உலகம் முழுவதையும் சேர்த்துக்கொள்வ தென்றால், நமது பிதாவின் சிருஷ்டியாகிய மனிதவர்க்கம் முழுவதுமே நமது குடும்பமாகிறது. சிவப்பு, கறுப்பு, வெளுப்பு, மஞ்சள் ஆகிய எல்லா ஜாதியினரும் நமது சகோதரர்கள். இந்தக் குடும்பத்திற்குள் நமக்குப் பகையாளி இல்லை. எல்லா உறவும் அன்பின்மூலம் கொண்டாடப் படுவதாகும். நாம் சில செய்கைகள், ஏற்பாடுகள் முதலியவற்றை விரோதித்துச் சண்டையிட்டு அவைகளை அழிக்க முயன்றாலும், மனிதருடன் நமக்குப் பகைமை இல்லை. நம்மை வெறுப்பவருடனும் நாம் நல்ல வகையில் நடந்துகொள்ள வேண்டும். நமக்குத் தீங்கு இழைப்பவருக்காகவும் நாம் பிராத்தனை செய்துகொள்ள வேண்டும்.

ஏசு தமது வாழ்க்கையில் இந்த உயர்ந்த இலட்சியங்களைப் பின்பற்றி நமக்கு வழி காண்பித்திராவிட்டால் இவ்விதக் கஷ்டமான முறையைப் பின்பற்றுவது இயலாது என்று இவ்விஷயம் விட்டுவிடப்பட் டிருக்கும். பெரிய பாதிரியின் வேலையாளாகிய மால்சன் இவரைக் கைது செய்யவந்த சமயம் ஏசுநாதர் அவனுடைய காது நோயைக் குணப்படுத்தினார். இவரை ஜனங்கள் அடித்து இவர்பேரில் காறி உமிழ்ந்த சமயம் இவர் அதை எதிர்க்க வில்லை. சிலுவையி லிருக்கையில் தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

இவ்விதம் நட்சத்திரங்கள் போன்ற உன்னத இலட்சியங்களை நமது வாழ்க்கையில் பின்பற்ற முயன்றோமானால் நமது அயலானிடம் குற்றம் சொல்ல முடியுமா? நமது குற்றங்களைக் கண்டு நாம் உருகுகையில் பிறரைப்பற்றிச் சொல்ல இயலாது. நமது கண்களிலிருக்கும் உத்திரம் நமது சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை மறைக்கும். ஆயக்காரரைப் போல் நாம் நமது கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் மார்பில் அடித்துக்கொண்டு, "கடவுளே, பாவியாகிய எனக்கு இரங்கும்" என்று சொல்வோம். (லூக்கா. 18—13.)

இந்தக் கற்பனைகள் மிக மேன்மையானவைகளாக இருப்பினும், ஆத்ம முன்னேற்றம் என்ற கடலின் கரைகளைக் காண இவை மாத்திரம் போதா. ஏசுவே கடைசி அவதாரம், அவர் கூறிய கற்பனைகளுக்கு மேற்பட்டவை இல்லை என்று எண்ணுபவர் அவருக்குத் தீங்கு செய்பவராவர் பெரிய போதகர்கள் தமது சீடர்களின் சக்திக் குறைவினால் தடை பெறுகிறார்கள். அவ்விதப் போதகர்கள் பெரிய கொள்கைகளைக் காண்பித்து, "இவ்வழியே சென்று சத்தியத்தை இன்னும் ஆழமாக ஆராயுங்கள்" என்றே சொல்லக் கூடும். சீடர்களுக்குச் சில விஷயங்களைப் போதிப்பது மாத்திரம் அல்ல, போதகர்களின் கடமை; சத்தியமும், ஞானோதயமும் பெற வேண்டுமென்ற ஒரு பெரிய தாகத்தைச் சீடர்களுக்கு உண்டாக்கி, சரியான வழி சென்று அவைகளைத் தேடும்படி செய்யவேண்டும். அதற்கு மேல் சீடர்கள் தத்தம் சக்தியைக் கொண்டே முன் செல்ல வேண்டும். பெரிய விஞ்ஞானியாகிய ந்யூடன் கண்டு பிடித்த அளவில் பௌதிக சாஸ்திரம் நிற்கிறதோ? நமது விஞ்ஞானிகள் மரத்திலிருந்து பழம் விழுவதைப் பார்த்த வண்ணம் நிற்கிறார்களோ? ஐன்ஸ்டெயின் இன்னும் பெரிய

விஷயங்களைத் திறந்து விடவில்லையா? ஆசார்யா பி. ஸி. ரே. அவர்கள் தாம் கண்டறிந்த விஷயங்களால் மாத்திரம் சமூகத்திற்கு உதவி புரிந்திருக்கிறார் என்பதில்லை; தமது வழியில் மேலும் போகக்கூடிய விஞ்ஞானிகள் பலரைப் பழக்கி இருப்பது இன்னும் பெரிய உதவியாகும். ஏசுவும் அவ்விதமே ஆவர்.

தற்காலத்தில் நாஸிகள், யூதர்களிடம் காண்பிக்கும் விரோதம் போன்றதாய், ஏசு காலத்தில் யூதர்கள் இதர ஜாதியினரைவிடத் தாங்கள் மேம்பட்டவர் என்ற செருக்கினால் குறுகிய மனப்பான்மை கொண்டு பலாத்கார முறைகளைப் பின்பற்றினர். ஏசுவிற்கு இருந்த சில சீடர்களும் எழுதப் படிக்கத் தெரியாத செம்படவர்களே. மூன்று வருஷங்களுக்குள் ஏசுநாதர் அவர்களுக்குப் போதித்த அறிவே ஓர் ஆச்சரியகரமான செய்கை; இவர் போதித்த கற்பனைகளும் இலட்சியங்களும் மிகப் புரட்சிகரமானவை. ஆகையால், இவர் போதிக்கக் கூடியது முழுவதையும் அச் சீடர்களால் கிரகிக்க முடியவில்லை என்பதில் ஆச்சரியமென்ன? "நீங்கள் சத்தியத்தின் உயிரைப் பெற்றீர்களென்றால் இன்னும் மேன்மேலும் ஞானோதயம் ஏற்படும்" என்று சொல்லிவிட்டு அவர் பிரிய வேண்டிய தாயிற்று. அவருடைய சீடர்களின் சக்திக் குறைவினால் அவருடைய போதனை தடைப்பட்டது. (யோவான். 16—12, 13.) அவர் போதித்தவைகளே முழு ஞானம் என்று நாம் கருத இயலாது.

ஏசுவின் வாக்கு நிறைவேற வேண்டுமென்றால் அவரைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிறவர்கள் சத்தியத்தின் புதுப் புது அம்சத்தைப் போதகர் காண்பித்த வழியே சென்று அறிய வேண்டும். மனிதனின் பிறவிக் குணத்தினால் அவன் முன்செல்லாவிடில் பின்செல்லும்படி ஏற்படுகிறது. ஒரே நிலையில் இருக்க இயலாது. மனிதனுக்குக் கொடுத்திருக்கும் சக்தியை அவன் உபயோகிக்க வேண்டும். முன்னேற்ற மடைவதற்கு இது மிகவும் அவசியம். தாலந்துத் கதையில் தாலந்துகளைப் புதைத்துப் பத்திரப் படுத்தி வைத்திருந்த வேலையாள் நிந்திக்கப் படுகிறான். (மத்தேயு. 25—24, 30) ஏசுவின் போதனைகளே முழு ஞானம் என்று சொல்லும் திவ்யசபை முறையைப் பின்பற்றுபவர் அவ்வேலையாளின் நிலைமையில் இருப்பவராவர். சத்தியத்தின் ஆவி, மனிதரை அழைத்துச் செல்வதற்கு மாறாகத் திவ்யசபையின் வழி அவர்களை அழைத்துச் செல்வதானது மனிதருக்கு நாசத்தையே உண்டாக்குகிறது. கோயில் அதிகாரிகள் புது விஷயங்கள் வந்தால் அவைகளைத் தீது என்றும், நாஸ்திகம் என்றும் கூறித் தந்திரமாகவும் கடூரமாகவும் தலை எடுக்கவொட்டாமல் அழுத்தி விட்டனர். இதனாலேயே ஏசுநாதரின் போதனைகளிலிருந்து அதிகமாகப் பிற்போக்கும் குறைவும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அத்தாட்சியாக ஐரோப்பாவின் ரணகளத்தைப் பார்க்கலாம்.

திவ்விய சபையில் வலிமையையும் தீவிரமும் பெற்ற வெஸ்லியின் இங்கிலாந்தும் லூதரின் ஜெர்மனியும் ஒன்றோடொன்று மோதி உலகத்திலேயே மனிதர் இதுவரை கண்டிராத மகாகோர யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன. ஏசுவின் போதனைகளாகிய, "கோபம் கொள்ளாதே!" "தீமையால் எதிர்க்காதே!" "உன் சத்துருக்க

ளிடம் அன்புகொள்"—ஆகியவைகளுக்கு இடம் எங்கே இருக்கிறது? சமாதானத்தின் சக்கரவர்த்தி அவதரித்து இரண்டாயிரம் வருஷங்களான பிறகும் அவரைப் பின்பற்றும் சபைகள் செய்யும் வேலைகளின் பயன் இதுவே! அச்சமயம் நமது பரமண்டலப் பிதாவின் புத்திரர்கள் நாம் யாவரும் என்று போதிக்கப்பட்டோம். இன்று நாஸி ஜெர்மனியில் முன் காலத்திய யூதர்களைப்போல் பன்மடங்கு ஜாதிச் செருக்கு இருக்கிறது: இந்தத் தாழ்விற்குக் காரணம் ஏசுவின் போதனைகளே முழு ஞானம் என்று எண்ணுவதாகும். அவ்வித மனப்பான்மையினால் முன்னேற்ற மடையும் பாதை அடைபட்டு விடுகிறது. சத்தியத்தின் உயிரைப் பின் பற்றுங்கள் என்று போதகர் சொன்னதற்கு, சத்திய உயிரின் ஸ்தானத் தில் சபை தன்னை நியமித்துக்கொண்டது. ஆனால், அப்பெரிய வேலை யில் மிக மோசமாய் நடந்துகொண் டிருக்கிறது. ஏசு நமது பிதாவுடன் நாமே நேரில் சம்பந்தம் வைத்துக்கொள்ளுமாறு போதித்தார். (மத்தேயு. 6—6. யோவான். 16—26, 27) இறுதியில் பிதாவுடன் ஐக்கியமாவதால் நித்திய ஜீவனைப் பெறுமாறு சொன்னார். (யோவான். 6—20, 21.) ஆனால், திவ்ய சபை கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இருந்து கொண்டு, தமது கடமைகளை மிகத் தவருகச் செய்ததால், இக்கதி, ஐரோப்பா முழுவதும் ரணகளமான இக்கதி, ஏற்பட்டிருக்கிறது. விஞ் ஞானமும் மொலாச்சியின் வேலையாளாக அடிமைப் படுத்தப்பட்டு நாசத்திற் கென்று விபரீத ஆயுதங்களைத் தயாரிக்கிறது. கடவுளைப் பெருமைப் படுத்த அவர் நமக்குத் திறமையை அளித்தார். ஐரோப்பாவின் போர்க் களம் அவருடைய பெருமையையா கூறுகிறது? பழி, பகை, பேராசை என்பதே எங்கும் வியாபித்திருக்கிறது. மனிதரிடையே அன்பை எங்கே காண்பது? தாங்கள் சரியான வழிகாட்டிகளாக இல்லாமலிருந்ததனால் ஏற்பட்டிருக்கும் இத் தீங்கை நிவர்த்திக்கத் தேவாலயங்கள் என்ன செய் கின்றன? அவை தமது திருக்கைகளைக் கூப்பிக் கடவுளை வேண்டி, இன் னும்மேன்மேலும் கொடூர ஆயுதங்களையும் வழிகளையும் அருளி எதிர்ச் சார்பிலிருக்கும் கடவுளின் பிள்ளைகளைக் கொல்லுமாறு வேண்டுகின்றன. இதையே நாம் எங்கும் காணலாம். லண்டனிலிருந்தும், பெர்லினிலிருந்தும் கிளம்பும் கந்தகப் புகைக்குமுன் ஸோதோமும், கமோராவும் வெறும் கைவிளக்குப் புகைகளே. எருசலத்தைப் பார்த்துக் கண்ணீர்விட்ட ஏசுநாதர் இப்போது நம்மிடை உயிரோடு இருப்பாரே யாகில், "மிகச் சிறி தான இந்தக் கற்பனைகளில் ஒன்றை மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் எவனும் பரலோக ராஜ்யத்தில் எல்லாரினும் சிறியவன் எனப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவன் எவனோ அவன் பரலோக ராஜ்யத்தில் பெரியவன் எனப்படுவான்." (மத்தேயு. 5-19) என்று கூறியவர் இச்சமயம் இரத்தம் சிந்தும் நெஞ்சுடன் "ஐரோப்பா, ஐரோப்பா! சாதுவான ராஜ்யங்களை அமுத்தி அவர்களின் இரத்தத்தை உறிஞ்சி ஜீவிப்பவர்களே! எனது போதனைகளை மாற்றியும், தவருகச் செய்தும், அறியாதவர்களை ஏமாற்றி லாபம் பெறுபவர்களே! கோழி தனது குஞ்சுகளைச் சேர்ப்பது போன்று உங்களை நான் எத்துணை முறை என் கூட்டினில் சேர்க்க முயன்றேன்! நீங்கள் இசைய வில்லையே!

உங்கள் நாடுகள் நாசமாகிவிட்டனவே! காண்பீர்!" என்று துக்கிக்காரோ?

ஏசுவின் சக்தி சாதாரண சக்தி அல்ல. அவருடைய சக்தி மேன்மேலும் வளரும் சக்தி. அவருடைய போதனைகளை எவ்விதம் விருத்தி செய்வது, இதர புது போதனைகளை எவ்விதம் அவைகளுடன் சேர்ப்பது என்று கேட்கலாம். அவைகளைப் பிற்பாடு ஆராய்வோம். இங்கே ஒரே ஓர் உதாரணம் மாத்திரம் கூறுவோம். யூதர்கள் தமது ஜாதியினரிடம் கொண்ட அன்பை எல்லா ஜாதியினரிடமும் கொள்ளுமாறு ஏசு போதித்தார். புத்தபெருமான் மனித ஜாதியினரிடம் மாத்திரமல்ல, எல்லா உயிருள்ள பிராணிகளிடமும் அன்புகொள்ள வேண்டும் என்றார். ஜைனர்கள் மரம் செடிகளிடம்கூட அன்பு செலுத்தினர். ஏசுவின் போதனைகளில் இவையும் அடங்கி இருக்கவில்லையா? ஆனால் நாம் அதை விஸ்தரித்து அறிந்தோமில்லை. நமது அயலானுக்கு அருவருப்பு உண்டானாலும் நாம் பசுவின் இறைச்சியையும் பன்றி இறைச்சியையும் உண்பதை விடவில்லை. ஏசு கண்டித்த பிரகாரம் யந்திரக்கல்லைக் கழுத்தில் கட்டிக்கொண்டு கடலில் போடப்படுவோராக மாட்டோமா? இறைச்சி தின்னும் இன்பத்தைவிட வாழ்க்கையின் தூய்மை பெரிதல்லவா? மனிதர் நமது நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கும் நமது பிதாவை மகிமைப்படுத்த அல்லவோ நமது ஒளி பிரகாசமாக ஒளிர வேண்டும். இதை ஏசுநாதர் போதித்தாரல்லவா?

## நான்காவது அத்தியாயம்

# "இந்த நெறியில் பிரார்த்தனை செய்யுங்கள்"

மனிதரையும் கடவுளையும் ஒன்று சேர்ப்பது பிரார்த்தனை. பிரார்த்தனையின் மூலம் மனிதன் கடவுளுடன் தன்னை ஐக்கியப் படுத்திக்கொள்ளுகிறான். கடவுளின் இஷ்டத்தைச் செய்ய விரும்புகிறவன் சதா அவரை நினைக்க வேண்டும். மனத்திலும், நாவிலும், இலட்சியங்களிலும் அவரைத் துதித்து ஜபம் செய்வதாக இருந்தாலே, "உங்கள் இருதயங்கள் பெருந்தீனியினாலும், வெறியினாலும், லௌகிகக் கவலையினாலும் ஒருபோதாகிலும் பாரமடையாதபடி உங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். இல்லையானால் அந்த நாள் திடீரென ஒரு கண்ணியைப்போல் உங்கள் மேல் வரும். எப்பொழுதும் ஜபம் பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா. 21—34, 36) என்று ஏசுநாதர் எச்சரித்த ஆபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடும். ஜபத்தின்மூலம் மனிதன் கடவுளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளுகிறான். தனது பலத்தைப் பெறுகிறான். உயிரற்ற இரும்புக் கூண்டுகளாகிய டிராம் வண்டியையும், எலெக்டிரிக் வண்டிகளையும் வேகமாகப் போகச் செய்வதற்கு அவைகளுக்கு மின்சார சக்தியை அளிக்கும் கம்பிகளைப் போன்றது ஜபம். அக் கம்பியுடன் சம்பந்தம்

ஏற்பட்டாலே அந்த வண்டிகள் செல்லும். இல்லாவிடில் அவை வெறும் கூண்டுகளே.

பிரார்த்தனை என்ற ஆங்கில வார்த்தைக்கு ஏதோ வேண்டுதல், பெற முயலுவது, யாசகம் என்ற அர்த்தமே இருக்கிறது. ஜபம் என்ற பொருளை அளிக்கக் கூடிய நேரான வார்த்தை இல்லை. ஆகையால், சபைப் பிரார்த்தனைகளில் நமது தேவைகளை யாசிப்பதே பெரிய அம்சமாக இருந்து வருகிறது. உண்மை ஜபமே என்பது தியானத்தை அடிப்படையாகக் கொண்டதாய், கடவுளுடன் முழு பக்தியுடன் சம்பந்தம் ஏற்படுத்தி, அவரிடமிருந்து சக்தி பெறும் வழியாகும். அவருடைய கருத்தை நிறைவேற்றவும், நாம் பணிசெய்யவும் உதவி வேண்டுமென்று பிரார்த்திக்கலாம். வேறுவித வேண்டுதல்கள் சரியல்ல.

ஏசு தமது சிஷ்யர்களுக்குப் போதித்த ஜபம் மிகவும் மேன்மையானது. அதை நாம் கவனிக்க வேண்டும். இதர விஷயங்களைப் போலவே "பரமண்டல மந்திரம்" என்று தவருகச் சொல்லப்படும் இந்த ஜப விஷயத்திலும் சபை அதிகாரிகள் கேவலம் வார்த்தைகளைப் பின்பற்றி உட்கருத்தை, அதாவது அவ்வார்த்தைகளின் உயிரை இழந்துவிட்டனர். பிதாவைக் குறித்து நாம் தியானிக்கும் சமயம், எந்த எந்த விஷயங்களைக் குறித்துத் தியானம் செய்யவேண்டு மென்ற விஷயத்தின் ஒரு சுருக்கமான அட்டவணையை, தமது போதனைகளின் சுருக்கமான பட்டியலை ஏசு குறிப்பிட்டார். அதைப் பரமண்டல மந்திரமென்று கருதுவது வேதப் புத்தகத்தை எடுத்து அதில் அடங்கிய ஆகமங்களின் பெயர், முறை முதலியவைகளின் அட்டவணையை, ஆரம்பம் முதல் வாசித்து, மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான், கொரிந்தியர், கொலோசேயர் என்று யோவானின் தரிசனம் வரை படித்துவிட்டு வேதப் புத்தகத்தையே அடி முதல் இறுதிவரை படித்துவிட்டோம் என்று கருதும் பேதைமைக்கு ஒப்பாகும். இதற்குச் சாஹித்யம் ஏற்படுத்திக் குருமார்கள் முதலில் "பிதாவே" என்று பல்லவி ஆரம்பிக்கவும், விசுவாசிகள் பின்பாட்டுப் பாடவும் சில பெரிய சபைகளில் வழிபாடு முறை ஏற்பட்டிருக்கிறது !!! ஜபம் செய்யும் வகையையும் ஏசு நமக்குக் கூறியிருக்கிருர்.

1. மனுஷர் காணும்படி ஜபம் செய்ய வேண்டாம்.
2. அறைக்குள் போய்க் கதவைப் பூட்டி மறைவில் செய்ய வேண்டும்.
3. வீண் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்லவேண்டாம்.
4. சொந்தத் தேவைகளை யாசகம் செய்யவேண்டாம். ஏனென்ருல் உங்களுக்கு இன்னின்னது தேவை என்பதை அவர் அறிந்திருக்கிருர். ஏசு இவ்வாறு விதித்திருந்துங்கூடச் சபைப் பிரார்த்தனைகள் வேறு வகையாக நடைபெறுகின்றன.

பரமண்டல மந்திரம் (மத்தேயு. 6—9 - 13) என்பது ஏழு படிகள் அல்லது அத்தியாயங்கள் அடங்கியது. அப் படிகளை ஆராய்வோம். முதலில் பரப்பிரம்மத்தின் துதியும், கடவுளின் சிருஷ்டியும் ரட்சணையும் தியானிக்கப்படுகின்றன; இரண்டாவதாக அவருடையசித்தமும், சத்தியமும், நிரந்தர விதிகளும், சிந்திக்கப்படுகின்றன; மூன்ருவதாக நாம் நம்மைக் கடவுளின் கட்டளைக்கு அடிப்பட்டவர்களாக்கிக் கொள்வது; அதற்குமேல் அவ்விதம்

கடவுளுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட வாழ்க்கையின் வெளித் தோற்றமாகிய வேலைகள் கவனிக்கப்படுகின்றன; இறுதி மூன்றிலும் இவ்வித வாழ்க்கைக்குத் தேவையான திடம், பரிசுத்தம், ஸ்திரபாவம் மூன்றையும் அருளவேண்டுமென்று வேண்டுதல். இவைகளே ஜபத்திற்கு இன்றியமையாதவை. இவை ஒவ்வொன்றின் தத்துவங்களை விளக்கினால் எத்துணையோ பெரிய பெரிய புத்தகங்கள் நிறைந்து விடும்.

நாம் இங்கு அவற்றை விஸ்தரிக்காமல், சிறிதே குறிப்பிட்டு ஒவ்வொன்றிலும் எத்துணை விஷயங்கள் அடங்கி இருக்கின்றன என்பதை மட்டும் குறிப்பாகச் சொல்லுவோம்.

(1) "பரமண்டலத்திலிருக்கும் பிதாவே!"

இந்தப் பிதாவின் குணத்தை விளக்குவதே ஏசுநாதர் அவதாரத்தின் முக்கியக் காரணமாக இருந்ததென்பதை நாம் இரண்டாம் அத்தியாயத்தில் விளக்கியுள்ளோம். சிருஷ்டியின் கர்த்தாவாகிய கடவுள் எல்லாருக்கும் தந்தை. இதைக் கூறின், மனிதரின் சகோதரத்துவத்தையும் கூறுவதாகிறது; ஆகையால், ஏசு எல்லா மனிதரையும் வெவ்வேறு தொழுவத்தினராயினும், ஒரே மந்தையைச் சேர்ந்தவராக்கி (யோவான். 10—16) ஒரு மேய்ப்போனுக்குக் கீழ்ப்படுபவராக்கவும் முயன்றார் என்பது ஏற்படுகிறது.

இதனில் அடங்கியிருக்கும் விஷயங்களைப்பற்றிச் சிந்தித்தால் இந்நாட்களில் நமக்குப் பல சிக்கலான கேள்விகள் உண்டாகும். ஒரே பிதா என்றால் மனித வர்க்கம் முழுவதும் ஒரே குடும்பத்தினர்; ஏற்றத் தாழ்வு அற்ற சகோதர சகோதரிகள். எல்லாரும் ஒற்றுமையுடன் ஜீவிக்க வேண்டியவர் என்பது ஏற்படுகிறது. எந்தக் காரணமாக இருப்பினும், நமது சகோதரருடன் நாம் போரிடலாமா? எல்லாரும் தம்மிடம் உள்ளதைப் பொது நன்மைக்குப் பயன்படுத்த வேண்டாமா? அதற்கு மாறாக இப்பொழுது உலகெங்கும் இருக்கும் உறவு முறைகளில் கடவுளைப் பிதா என்று அழைப்பது நிந்தையல்லவா?

சகோதர உறவு முறைக்கு வேண்டிய நிபந்தனைகள் யாவை? ஏசுவே இதைப் பற்றின விதிகளைக் கூறியிருக்கிறார். அதில் முதன்மையானது எல்லா ஜீவன்களிடத்தும் அன்பு—உங்கள் சத்துருக்களிடத்தில் அன்பு கூருங்கள். உங்களை இம்சைப் படுத்துகிறவர்களுக்காக ஜபம் செய்யுங்கள். இப்படிச் செய்தால் பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவிற்குப் பிள்ளைகளா யிருப்பீர்கள். அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரிய ஒளி பரவச் செய்து, நீதியுள்ளவர்கள்மேலும் நீதியில்லாதவர்கள் மேலும் மழை பெய்யச் செய்கிறார்." (மத்தேயு. 5—44, 45)

நாம் இவ்விதம் செய்வதற்குப் பிரதியாக நமது உரிமையும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "அவரை ஏற்றுக் கொண்டவர் எத்தனை பேரோ அத்தனை பேருக்கும், அவர் நாமத்தில் விசுவாசமுள்ளவர்களுக்கும், கடவுளின் பிள்ளைகளாகும் உரிமை கொடுத்தார்." (யோவான். 1—12)

இரண்டாம் அத்தியாயத்தில் மூன்றும் பகுதியில் நாம் ஏற்கெனவே "விசுவாசம்" என்பதன் குணங்களைக் கூறியுள்ளோம். "நாமம்" என்

பதன் அர்த்தத்தை இப்போது ஏசு கூறின "பிரார்த்தனை" யின் அடுத்த வார்த்தைகளிலிருந்து விளக்குவோம்.

பின்னர் நமது கடமைகள் கூறப்படுகின்றன. "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர் எவரோ அவரே எனக்குச் சகோதரரும் சகோதரியும் தாயுமாம்." (மத்தேயு. 12—50)

நாம் மிருக குணத்தைவிட்டு ஆவியின் மேலான குணத்தை அடைந்து இயேசு செய்த வேலைகளையும் இன்னும் மேலானதையும் செய்து அவருடன் ஐக்யமாக வேண்டுமென்பதே, கடவுளின் சித்தம் என்று முன்பே ஆராய்ந்துள்ளோம்.

நமது ஐக்கியத் தன்மை ஏற்படுவதற்கு உதவியாகக் கீழ்க்கண்ட வாக்கியங்கள் இருக்கின்றன. "பரலோகத்தில் இருக்கும் உங்கள் பிதா பூரண சற்குணரா யிருப்பதுபோல் நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்." (மத்தேயு. 5—48)

"உங்கள் பிதா இரக்கமுள்ளவராக இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களா யிருங்கள்." (லூக்கா. 6—36)

இறுதியில் கடவுளின் குழந்தைகளாய் நாம் நமது இலட்சியமாகிய நித்ய ஜீவனைக் கீழ்க்கண்ட விதம் அடைய வேண்டும்.

"அவர்கள் எல்லாரும் ஒன்றாக யிருக்கவும், நீர் என்னிலும் நான் உம்மிலும் இருக்கிறதுபோல அவர்கள் நம்மில் இருக்கவும்." (யோவான். 17—21)

சிருஷ்டியின் ஆதிமூலத்தை நாம் நமது பிதா என்று உறவு கொண்டாடினோமென்றால், அதே சிருஷ்டியில் உற்பத்தியாகி இருப்பவையான மிருகங்கள், பறவைகள் ஆகியவை நமக்கு உறவு முறையாகின்றன அல்லவா? அவைகளைக் கொன்று விழுங்குவது சகோதரக் கொலை ஆகாதோ? மனிதரைப் புசித்தால்தானோ நர மாமிச பக்ஷிணி என்ற பாபப் பெயர்?

**(2) உம்முடைய நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக.**

கடவுளே அன்பு, கடவுளே சத்தியம். இதை நினைக்கையில் நமது மனத்தில் தோன்றுபவையான என்றும் அழியா நிரந்தர விதிகளையும் அவைகளைத் தேவ புருஷர் பின் பற்றி நமக்கு விளக்கிக் காட்டியதையும் நாம் பக்தியுடன் போற்றுவோமாக. ஏசுநாதரின் வாழ்க்கையின் மூலமும் (யோவான் 17—6) அவருடைய போதனை, உபதேசம், விதிகள், முதலிய வற்றின் மூலமும் (அப்போஸ்தலர் 5—28, 42.) கடவுளின் நாமம் விளங்குகிறது. மூன்றாவது அத்தியாயத்தில் நாம் ஏசுநாதரின் சில போதனைகளை ஆராய்ந்தோம். பக்தியுடன் போற்றுவது என்பதற்கு அர்த்தம் இவைகளை ஒரு தங்க விமானத்தில் வைத்துத் தேவாலயத்தில் ஆவாகனம் செய்து பூஜிப்பது என்று ஆகாது. சமயம், அசமயம் ஆகிய எக்காலமும் இவைகளை வாயால் உச்சரிப்பது என்பதும் ஆகாது. அவைகளை மனத்தில் பதித்துக் கொண்டு, நமது வாழ்க்கையில் அவைகளைச் செய்து நிறைவேற்ற நம்மை அர்ப்பணம் செய்து கொள்வதுதான் ஏற்றது ஆகும்.

"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதாலே என் பிதா புகழப்படுவார்." (யோவான் 15—8.)

" பரமண்டலத்தில் இருக்கிற உங்கள் பிதாவின் மகிமை விளங்கத் தக்கதாக உங்கள் ஒளி பிரகாசிக்கக் கடவது." (மத்தேயு 5—16.)

நமது வாழ்க்கை ஏசுநாதருக்கு மகிமை தருவதாக இருக்கிறதா? நம்மைச் சுற்றி இருப்பவர் நாம் அவர்களிடை இருப்பதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறரா? இதை நாம் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும்.

(3) உம்முடைய இராச்சியம் வருவதாக

இது எம்மாதிரி இராச்சியம்? இது எங்கே இருக்கும்? இதன் முக்கியமான குணங்கள் யாவை?

அக்காலத்தில் யூதர்களிடையே மெசையா பூமியில் அவதரித்தால் இதர அரசர்களின் மேல் அதிபதியாக ஒரு சக்ரவர்த்தியாக-அரசாள்வார் என்ற கொள்கை இருந்தது. ஏசுநாதர் யூதர்களுடன் பேசும் சமயம் இதைக் குறிப்பிடுகிறர். (மத்தேயு 8—11, 12. 21, 13) ஆனல் அந்த இராச்சியம் இவ்வுலகத்தின் தன்மையுள்ளதல்ல என்கிறர். (யோவான் 18—36) தம்மைப் பின்பற்றுவோருக்கு அவ்வித இராச்சியத்தை அளிப்பதாகக் கூறுகிறர். (லூக்கா 12—32, 22—29) மேலும், அந்த இராச்சியம் இதோ இங்கே என்றும் அதோ அங்கே என்றும் இல்லை, " உங்களுக்குள் " இருக்கிறது என்றர். (லூக்கா 17—21) அந்த இராச்சியத்தையும் நீதியையும் தேடச் சொல்லுகிறர். (மத்தேயு 6—33.)

அந்த இராச்சியத்திற்கும் இப் பூலோக இராச்சியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை ஏசுநாதர் விளக்குகிறர் :—

(க) இந்த இராச்சியங்களில் பலவந்தமாய் ஆளப்படுகிறது, அதிகாரம் செலுத்தப்படுகிறது. ஆனல் கடவுளின் இராச்சியத்தில் ஊழியம் செய்வதே பெரிதாகக் கருதப்படும். லூக்கா (22—25 - 27) ஏசுநாதரே ஊழியம் கொள்ளும்படிக்கு வராமல் ஊழியம் செய்யும்படிக்கும் அநேகரை மீட்கும் பொருளாகத் தமது ஜீவனைத் தரும்படிக்கும் வந்தார். (மத்தேயு 20—28.)

(உ) செல்வமும் ஆடம்பரமும் கொண்டவையே இகலோக இராச்சியங்கள். ஆனல் ஏசுநாதர் ஒருவனுக்கு எவ்வளவு ஆஸ்தி இருந்தாலும் ஆசைகளினல் அவனுடைய ஜீவன் உண்டாயிராது என்று எச்சரிக்கிறர், லூக்கா 12—15.) " உங்களுக்கு உண்டானவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள். உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும் " என்றர். (லூக்கா 12—33, 34) நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. (மத்தேயு 8—20.)

(ஙு) ஆடம்பரமும் பெருமையும் இல்லாவிட்டால் அரச மாளிகையில் வாழ விருப்பமுண்டாகுமோ? ஆனல் ஏசுநாதர் நம்மை விநயத்தைப் பழகிக் கொள்ளுமாறு சொல்லுகிறர். (மத்தேயு 23—11, 12. மாற்கு 9—34, 35.) போதகராகிய அவர் தம்முடைய சீடர்களின் கால்களைக் கழுவி நமக்கு வழி காண்பிக்கிறர். (யோவான் 13—14)

" உம்முடைய இராச்சியம் வருவதாக " என்று நாம் செபம் பண்ணும் சமயம், இம்மாதிரியான அரசன் வந்து நமது உள்ளத்தில்

அவருடைய இராச்சியத்தை, எளியதானதும் தாழ்மையான விநயகுண முடையதுமான பிறருக்கு ஊழியம் செய்யும் இராச்சியத்தை, ஏற்படுத்தி அரசாள நாம் நமது மனத்தைத் திறந்துவிடக் காத்து நிற்கிறேமோ? அவருடைய பணியைச் செய்வதிலேயே நமது சக்தி முழுவதையும், திறமை முழுவதையும் செலவு செய்யவும் உபயோகப்படுத்தவும் அளிக்க நாம் உண்மை உள்ளத்துடன் காத்திருக்கிறேமோ?

(4) **உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவது போல் பூமியிலேயும் செய்யப்படுவதாக.**

முன் வாக்கியத்தைப்போல் இதுவும் கடவுளின் சித்தத்திற்கு நம்மை அர்ப்பணம் செய்துகொள்ளுவதே.

முன்பு உரைத்தது உண்மையில் தன்னை அர்ப்பணம் செய்து கொள்வதற்கு. இப்போது கூறப்பட்டது அவ்விதம் அர்ப்பணம் செய்யப்பட்ட வாழ்க்கையைச் செய்கையின்மூலம் வெளிப்படுத்துவதற்கு வேண்டிய சக்தியைப் பிரார்த்திப்பதாகும். கடவுளின் விருப்பம் எவ்விதமானதென் பதை ஏசுவின் வாழ்க்கை நமக்குக் காண்பிக்கிறது. நாம் நமது சகோதரர்களாகிய மனிதரிடம் அன்பு கொள்ள வேண்டும். அந்த அன்பு எளியோருக்குத் தொண்டு செய்வதில் செலவழிக்கப்பட வேண்டும். (மத்தேயு 25—35, 36) கடவுளின் வேலையை இவ்வுலகில் செய்வதற்கு நாமேதான் பொறுப்பாளிகள். அவருடைய சித்தம் நடக்க வேண்டுமென்று நாம் உண்மையில் விரும்பினால் அதை நாம் செய்ய வேண்டும். பரமண்டலத்தில் அவருடைய சித்தத்திற்கு எதிராக நடப்பவரில்லை. ஆனால் இவ்வுலகில் மனிதரின் சுயநலப் பற்றும், துர்க்குணமும் கடவுளின் திட்டம் சரிவர நடக்காமல் குறுக்கிட்டு நிரந்தரமான விதிகளையும், ஒழுங்குகளையும் நாசம் செய்கின்றன. இது பாவம். நாம் சத்தியத்தின் உயிரால் வழிகாட்டப்பட்டு ஆத்மக் கட்டுப்பாட்டுடன் அவருடைய சித்தத்தின்படி நடக்க முயன்றால் இத் தீமைகளை அகற்ற நாம் உதவி பெறுவோம்.

கடவுளின் சித்தம் பூமியில் நடந்தால் சமூகத்திலோ, அரசாட்சியிலோ, பொருள் முறையிலோ அநீதிகள் இரா. ஆகையால், அவ்வித அநீதிகள் நடக்கும் இடத்தில்தான் நமது இருப்பிடமும் வேலையும் இருக்கின்றன. அவ்வித இடங்களில் உழைத்தே நாம் நமது ஆத்மாவைப் பெறுவதற்கென்று நமது சரீரத்தை இழக்க வேண்டும்.

கடவுளின் சித்தம் நடக்கும் இடத்தில், (1) சமூக ஏற்றத் தாழ்வு, மேன்மை, கீழ்மை, தொண்டைமான், தோட்டி, வெளுப்பு, கறுப்பு, ஜாதி வித்தியாசம் - இவைகள் இருக்குமா? (2) பொருள் முறையில் வித்தியாசமான பணக்காரர், ஏழை சுரண்டுபவர், சுரண்டப்படுபவர் சொந்தக்காரர், அடிமை என்பவை இருக்குமா? பஞ்சமும் நோயும், கொடுங்கோலும் இருக்குமா? (3) தேகத்திற்குத் தீமை தரும் வஸ்துக்களை விற்க முயலுவது இருக்குமா? குடி வகைகளும் கஞ்சா வகைகளும் விற்கப்படுமா? (4) ஒரு தேசம் மற்றொரு தேசத்தின்மீது ஆக்கிரமித்து அதிகாரம் செலுத்துமா? (5) தேசங்களிடையே போர் எற்படுமா?

இவைகளைப் போக்க நாம் என்ன செய்கிறேம்? கடவுளின் சித்தம் பூமியில் செய்யப்பட வேண்டும் என்று நாம் வெளி வார்த்தையாகச்

சொல்லாமல் உண்மையில் விரும்பினால், அவருடைய சித்தத்திற்கு விரோதமான இவ் விஷயங்களை யெல்லாம் நீக்க முயல வேண்டும். இந்த முயற்சிக்கு நம்மை நாம் அர்ப்பணம் செய்துகொள்ள வேண்டும். அவ்வித நிலைமையை ஏற்படுத்த இது கல்வி, இது ஆஸ்பத்திரி, இது தர்மசாலை என்று நாம் தனித்தனிப் பைகளில் தனித்தனி விஷயமாகப் போட இயலாது. தொட்டில் முதல் சமாதி வரை வாழ்க்கையில் ஏற்படும் எல்லா விஷயங்களையும் பார்த்து ஆதரிக்காத மதத்தை ஒரு மதம் என்று சொல்வது பொருத்தமாகாது. கடவுளின் சித்தத்தைச் செய்வது நமது நோக்கமென்றால் மத விஷயம் தனிப்பட்டது என்று நாம் கோடு வரைய இயலாது. மதத்திற்கும், அரசியலுக்கும், கல்விக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்ல இயலாது. பூலோகம் முழுவதும், அதிலிருக்கும் எல்லா விஷயத்திலும் கடவுள் இருக்கிறார். அவருடைய சித்தம் எல்லா விஷயத்திலும் இருக்கிறது. ஆகையால், கடவுளின் சித்தத்தைப் பூமியில் நிறைவேற்ற வேண்டுமென்றால் நாம் எல்லா விஷயங்களையும் சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும்.

ஏசு தம்மை அனுப்பினவரின் சித்தத்தைச் செய்வதற்கும் அவருடைய வேலையை முடிப்பதற்குமே அவதரித்தார். (யோவான். 4—34) நாமும் அவ்விதமே கடவுளின் தூதர்களாக இருக்க முயல வேண்டாமா? அவ்விதம் முயன்றாலே கடவுளின் சித்தம் பரமண்டலத்தில் இருப்பது போல் பூலோகத்திலும் நிறைவேறும்.

"சுவர்க்க வாசலில் உன்னுடைய ஜாதி, மதம், சொத்து முதலியவற்றைப் பற்றி கேட்கமாட்டார்கள். நீ பூமியில் என்ன செய்தாய் என்பதையே கேட்பார்கள்" என்பது அரபிய வசனம்.

(5) "நாளை வேண்டிய ரொட்டியை இன்று எங்களுக்குத் தாரும். (மோபத்தின் மொழி பெயர்ப்பு.)

இந்த வேண்டுதலை ஆராய்வதற்கு முன் அத்தாட்சி பெற்ற மொழி பெயர்ப்பில் கூறப்பட் டிருக்கும் "அன்றன்று எங்களுக்கு வேண்டிய ரொட்டியை இன்று எங்களுக்குத் தாரும்," என்ற வார்த்தைகளைப் பற்றி ஒன்றிரண்டு விளக்கம் அவசியமாக இருக்கின்றன. இந்த வேண்டுகோளைப் போதிப்பதற்குச் சற்று முன்பே ஏசுநாதர் தமது சீடர்களிடம் ஜபம் செய்யும் சமயம் வீண் வார்த்தைகளை அலப்ப வேண்டாம், "உங்கள் பிதாவைக் கேட்கு முன்னமே உங்களுக்கு இன்னின்னது தேவை என்பதை அவர் அறிந்திருக்கிறார்" என்றார். மேலும் உணவிற்காகவும், உடலுக்காகவும், பாடுபடுவதை வீண் என்று விளக்கி, "எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்பட வேண்டாம். இவற்றை யெல்லாம் புற ஜாதியர் நாடித் தேடுகிறார்கள். இவை யெல்லாம் உங்களுக்குத் தேவை என்று உங்கள் பரம பிதா அறிவார். முதலாவது, கடவுளுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்போது இவை யெல்லாம் உங்களுக்குக் கூடவே கொடுக்கப்படும். ஆகையால், நாளைய தினத்திற்காகக் கவலைப்படாதிருங்கள். நாளைய தினம் தனக்காகக் கவலைப்பட்டுக் கொள்ளும்." (மத்தேயு. 6—31 - 34.)

இவ்விதம் போதித்துவிட்டு உணவிற்கென்று ஜபம் செய்யுமாறு அவர் கூறுகிறா ரென்பது பொருத்தமற்றதாகும். நகைப்பிற்கிடமானதாகும்

இந்த வார்த்தைகள் சரியாக மொழி பெயர்க்கப்படவில்லை என்றே படுகிறது. டாக்டர் மோபத், "நாளைய ரொட்டியை இன்று எங்களுக்குத் தாரும்" என்று மொழி பெயர்த்திருக்கிறார். "நாளை" என்பதை "வரும் நாள்" என்றால் ஏற்றதாக இருக்கும். யூதர்களிடை "வரும் நாள்" என்பது "கடவுளின் நாள்" என்ற அர்த்தமாகும். (ஜர். 23—5. 31—31) அதாவது இனி ஏற்படப்போகும் பரலோக வாழ்க்கை "இன்று" என்பது இகலோக வாழ்க்கை யாகும். இவ்வித அர்த்தத்துடன் வாசித்தால் "பரலோகத்திற்கு ஏற்றதான ரொட்டியை (ஆகாரத்தை) இவ் வுலகில் எமக்குத் தாரும்" என்றாகிறது.

மேலும், "ரொட்டி" (ஆகாரம்) என்பது நமது இந்த உடலைக் காப்பாற்றும் ஆகாரமல்ல. ஏசுநாதரே கூறுகிறார்— "மனிதன் ரொட்டியினால் மாத்திரம் ஜீவிப்பதில்லை; கடவுளின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் ஜீவிக்கிறான்" என்று. ஆகையால் இங்கே சொல்லப்படும் ஆகாரம் கடவுளின் வாய்மூலம் வரும் அருள் மொழியே. "வானத்திலிருந்து வருகிற மெய்யான ஆகாரத்தை உங்களுக்குக் கொடுக்கிறவர் என் பிதாவே. பரத்திலிருந்து இறங்கி உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்கிற ஆகாரமே கடவுள் அருளிய ஆகாரம்" என்று ஏசு கூறிய அந்த ஆகாரமே இங்கே குறிப்பிடப்படுகிறது. (யோவான். 6—32, 33). ஆகையால், இந்த வார்த்தைகளின் தாத்பர்யம், "இனி வரப்போகும் வாழ்க்கைக் குரியதாக நாம் கற்பனை செய்யும் இலட்சியங்களையும் கருத்துக்களையும் இவ் வாழ்க்கையிலேயே நாம் பெறுவோமாக." என்று ஏசுநாதர் காண்பிக்கும் பரிபூரண வாழ்க்கையைப் பெறுவதற்கான ஆத்ம சக்தியை வேண்டுவதாகும்.

மிகவும் குறைவான கல்வியறிவுடைய செம்படவர்களாகிய தமது சீடர்களுக்கு ஆத்மாவைப்பற்றிய விஷயங்களை விளக்கும் சமயம் ஏசு உடலுக்கும் அதன் வேலைகளுக்கும் பொருத்தமான சொற்களையே உபயோகிக்கிறார். ஆகையாலேயே "நானே பரத்திலிருந்து இறங்கின ஜீவனுள்ள ஆகாரம்." "இந்த ஆகாரத்தில் புசிக்கிறவன் என்றென்றைக்கும் ஜீவிப்பான். நான் கொடுக்கும் ஆகாரமோ உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்கிறார். (யோவான். 6—48, 50, 55) சமாரிய ஸ்திரீயிடம், "இந்தத் தண்ணீரில் குடிக்கிற எவனும் மறுபடி தாகமடைவான். நான் கொடுக்கும் தண்ணீரில் குடிக்கிறவனோ ஒருகாலும் தாகமடையான். நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஊறுகிற நீரூற்றாகும்" என்றார். (யோவான் 4—13,14.) மேலும், "ஜீவாகாரம் நானே. என்னிடம் வருகிறவன் பசி அடையவே மாட்டான். என்னில் விசுவாசம் வைக்கிறவன் ஒருகாலும் தாகமடையவே மாட்டான்" என்கிறார். (யோவான் 6—35.) அதற்குமேல் தாம் சொன்னதை விளக்குகிறார். "என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் நிலைத்திருக்கிறான்; நானும் அவனில் நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்ப, நான் பிதாவினால் ஜீவித்திருக்கிறதுபோல, என்னைப் புசிக்கிறவனும் என்னால் ஜீவிப்பான். பரத்திலிருந்து இறங்கிவந்த ஆகாரம்

இதுவே—இதைப் புசிக்கிறவன் நித்திய ஜீவனை உடையவன்." (யோவான். 6—56-58.) ஏசுநாதர் இதே எண்ணத்தைக் "கடைசி போஜன" சமயத்திலும் சொல்லுகிறார். நாம் உட்கொள்ளும் ஆகாரம் முழுதும் ஜீரணமானால் இரத்தத்தின் வழியாக நமது உடலில் கலந்து, அதற்குமேல் நமது தேகமாகவே மாறுகிறது. அதற்கும் நமது தேகத்திற்கும் வித்தியாச மில்லாமல் ஆகிறது. அதே விதம் நாம் ஏசுவின் போதனைகளை—ஜீவாகாரத்தை—முழுதும் உணர்ந்து அதை நன்றாகக் கடைப் பிடித்தோமானால், அவரையே பின்பற்றிக் கடவுளின் சித்தத்திற்கே நம்மை அர்ப்பணம் செய்து கொள்வதற்கு ஏற்ற ஆத்ம முன்னேற்றத்தை அடைவோம். இறுதியில் நாம் நமது தனித் தன்மையை இழந்து கடவுளுடன் ஒன்றாக ஐக்கியப்படுவோம். (யோவான். 17—21, 23, 26.)

இவ்விதம் கடவுளுடன் ஐக்கியப்படுவதற்கு ஏசு போதித்ததைத் திவ்ய சபையில் ஒரு நகைப்பிற் கிடமான செய்கையாக இன்றும் "திவ்ய நற்கருணை" சமயம் நடத்தப்படுகிறது. ஏசுவின் மொழிகள் அவ்வண்ணமே எடுத்துக் கொள்ளப்பட்டு, ரொட்டியும் சாராயமும் அச்சமயம் வழங்கப்படுகின்றன. சில தேவாலயங்களில் இத்துடன் நில்லாமல், பாதிரிகளின் மந்திர பலத்தினால் இந்த ரொட்டியும் சாராயமும் உண்மையில் ஏசுநாதரின் மாமிசமும் இரத்தமுமாக மாறிவிடுகின்றன என்றுகூடச் சொல்லுகிறார்கள். ஏசுநாதர் கூறிய உவமான வார்த்தைகள் எவ்வளவு தவறாக அர்த்தம் கொள்ளப்பட் டிருக்கின்றன!! சத்தியத்தையும் அன்பையும் கடைப்பிடிக்கிறோம் என்று சொல்லி என்ன கோரச் செய்கைகள் செய்யப்படுகின்றன!! ஏசுவின் திட்டங்களை ஏற்பதனால் உண்டாகும் ஆத்ம மேன்மையும், சத்தியத்தின் உயிரைப் பிடித்துச் சென்று சுயநலமற்றுப் பணிசெய்து, கடவுளுடன் இறுதியில் ஐக்கியப்படுவதுமாகிய யாவும் இந்தச் செய்கையில் முழுதும் மறைந்து விடுகின்றன.

பிறருக்குப் போதிக்க வருவதற்கு முன்னர் ஏசு சிலகாலம் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்வதன் நிமித்தம் வனாந்தரத்தில் உபவாசமிருந்தும் தியானம் செய்தும் கழித்தார். அச்சமயம் தேவதூதர் வந்து அவருக்குச் சிச்ருஷை செய்தாரென்று கூறப்பட் டிருக்கிறது. (மத்தேயு. 4—11) அதற்குமேல் அவர் ஆத்ம வல்லமையுடையவராய்த் திரும்பினார். (லூக்கா. 4—14) இது அவர் கடவுளிடமிருந்து பெற்ற ஆகாரத்தினால் ஜீவித்து, கடவுளுடன் ஐக்கியமான முக்கிய அம்சம். "அவர் நீதியின்மேல் பசி தாகம் உடையோர் பாக்கியர். அவர்கள் திருப்தி அடைவார்கள்." என்கிறார். (மத்தேயு 5—6)

நாம் கடவுளின் ராஜ்யத்தைத் தேடுவது என்பது, நம்மைச் சத்தியத்தின் ஆவியைப் பெற்றவர்களாய், நமது வேலையைச் செய்யச் சக்தி யுடையவர்களாகச் செய்யவேண்டும். நமது இகலோக வாழ்க்கை நமக்குத் துச்சமாகப்படும் விதம் நாம் கடவுளிடமும் அவருடைய சித்தத்திலும் ஐக்கியப்பட வேண்டும். பிதாவுடன் ஒன்று என்று நம்மைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்விதம் ஏற்பட்டாலே நாம் கடவுளின் ராஜ்யத்தைத் தேடுகிறோம் என்பது உண்மை யாகும்.

(6) எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னித்திருக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

நாம் நம்மைப் பற்றி மிக ஆழ்ந்த சோதனை செய்து, ஏசு நியமித்த திட்டத்திலிருந்து நாம் எங்கேயாவது பிசகி இருக்கிறோமா என்று கண்டு கொள்வதற்காகவே இந்தப் பிரார்த்தனை. இவ்விதம் சதா சோதித்துப் பார்த்துக் காவலுடன் இருந்து நாம் சத்தியத்தின் உயிரைப் பிடித்துப் பரிபூரணத் தன்மையை அடைய முயல வேண்டும்.

ஏசுநாதர் காண்பித்திருக்கும் திட்டத்தைக் கொண்டு நாம் நம்மை அளந்து பார்த்தோமானால், நமது குற்றங்கள் நமக்கு மிகப் பெரியனவாகத் தோன்றும். அவ்வித நிலையில் பிறரைக் குற்றம்சாட்ட நம்மால் இயலாது. நாம் கோபம்கொண்டு, ஏசுவின் திட்டத்தின்படி கொலை செய்தவர்களுக்குச் சமமானவராஞல், மற்றொரு சகோதரன் கோபத்தில் ஒரு கொலை செய்தானென்று அவனைத் தண்டிக்க எவ்விதம் மனம் ஏற்படும்? நாம் நமது உள்ளத்தில் வேறொரு பொருளின் பேரிலோ, பதவியின் பேரிலோ, ஆசை வைத்திருந்தோமென்றால், நமது ஆசை அப்பொருளைத் திருடினதற்குச் சமானமானதாயிற்றென்றால், தினது பசியைத் தணித்துக் கொள்வதற்கென்று பிறருடைய பைசாவைத் திருடினவனைத் திருடனென்று நாம் எவ்விதம் சுட்டிக் காட்ட முடியும்? நமது ஆத்ம அறிவு அதிகமாக அதிகமாக, நமது மனத்தின் பச்சாத்தாபமும் அதிகமாகும். நாம் அதிகம் தெரிந்திருக்க, இவ்விதம் குற்றம் செய்கிறோமே என்று எண்ணித் தெரியாதவன் செய்யும் தவறு கண்டு நாம் கோபம்கொள்ள மாட்டோம்; அதற்காகத் தண்டிக்கவும் முயல மாட்டோம். கடவுளிடம் நம்மைத் தாழ்த்திக் கொண்டு, நாம் பிறரை மன்னிக்க வேண்டும். ஆனால் இதற்காக நாம் முன்னேறிச் செல்வதை நிறுத்தக் கூடாது. ஏசு தம்மைத் துன்புறுத்திச் சிலுவையில் அறைந்தவரையும் மன்னிக்குமாறு கடவுளிடம் பிரார்த்தித்தார்.

(7) எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று இரட்சியும்.

இதற்கு முந்தின பகுதியில், நாம் ஏற்கெனவே செய்த வேலையை ஆராய்ந்து அதிலுள்ள குறைவுகளைக் கவனிக்க வேண்டும் என்பது சொல்லப் பட்டது. இதில் நாம் நமது பலவீனங்களையும் தவறுகளையும் உணர்ந்து எதிர் காலத்தில் குற்றம் செய்யாமல் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது பற்றிக் கூறப்படுகிறது. உப்பரிகையில் ஏறி நாம் செல்லப் போகும் பாதையை நோக்க வேண்டும். எப்போதும் கவனத்துடனும் தியானத்துடனும் இருக்க வேண்டுமென்று ஏசுநாதர் சொல்லுகிறார். ஒருவனுடைய வாழ்க்கை என்பது அவன் அவ்வப்போது செய்யும் சிறு சிறு தீர்மானங்களைக் கொண்டது. நாம் எப்போதும் விழித்திராவிட்டால் நம்மிடமிருக்கும் தாமஸ குணம் நம்மைத் தவறான வழியில் இழுத்து வீழ்த்தி விடும். ஒவ்வோர் அடி எடுத்துவைக்கும் போதும் நாம் நமது வழி காட்டியாகிய நட்சத்திரத்தை நோக்க வேண்டும். ஏசுநாதரே நமது வெளிச்சம். "என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடக்கவே மாட்டான். ஜீவ வெளிச்சத்தை அடைந்திருப்பான்'' என்று ஏசுநாதர் கூறியிருக்கிறார்.

(யோவான். 8—12.) இருளில் நடக்கிறவன், தான் போகிற இடம் இன்னதென்று அறியான்." (யோவான். 12—35.)

அடுத்த அத்தியாயத்தில் வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் சோதனைகளில் சிலவற்றை ஆராய்வோம்.

## ஐந்தாவது அத்தியாயம்

# "அப்பாலே போ, சாத்தானே"

மனிதனுக்குச் சுய இச்சை என்பது இருக்கிறது. அவன் தனது இந்திரியங்களைத் திருப்தி செய்துகொள்ள முயலும் வழியில் சென்றால் அது அவனுடைய நலத்திற் கென்று கடவுளால் ஏற்படுத்தப்பட்ட பாதையிலிருந்து மாறுபட்டதாக இருக்கலாம். இந்திரியங்களின் திருப்திக்காக முயலுவதற்கும், கடவுளின் வேலையைச் செய்ய முயலுவதற்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளே வாழ்க்கையின் சோதனைகள். நமது இச்சைகளைக் கட்டுப்படுத்திக் கடவுளின் சித்தத்தின்படி நடக்குமாறு பழக்குவதே சோதனைகளினின்றும் நம்மை விடுவித்துக் கொள்ளும் வழி.

ஏசு வனாந்தரத்தில் தம்மைப் பக்குவப் படுத்திக்கொண்டு மறுபடி மானிடரிடையே வர இருக்கும் சமயம் அவருக்கு மூன்று சோதனைகள் ஏற்பட்டன. (மத்தேயு. 4—1 - 11.) அவ்விதச் சோதனைகள் ஏசுவிற் கென்று பிரத்யேகமாய் ஏற்பட்டவை அல்ல. நாம் ஒவ்வொருவரும் இந்த வாழ்க்கை என்னும் நாடக அரங்கில் நமது சிறிய பகுதியை நடிக்க ஏற்ற முறையைப் பொறுக்கும் சமயம் நமக்குச் சோதனை ஏற்படுகிறது. ஆகையால் ஒவ்வொரு வாலிபனும் யுவதியும், ஒவ்வொரு மனிதனும் ஸ்திரியும் ஏசுநாதர் தமது வாழ்க்கைச் சோதனைகளை எவ்விதம் அகற்றினர் என்பதைக் கவனித்துப் படிக்க வேண்டும்.

### 1. கற்கள் அப்பங்க ளாகட்டும்

நாற்பது நாட்கள் உபவாசித்து ஏசுநாதர் பசித்து இருக்கையில் சோதனைக்காரன் அவரிடம்வந்து, "நீர் தெய்வ குமாரனே யானால் இந்தக் கற்கள் அப்பங்க ளாகும்படி சொல்லும்" என்றான். அவரோ, "மனுஷன் ஆகாரத்தினால் மாத்திரமல்ல, கடவுள் வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்றார். (மத்தேயு. 4—2 - 4.)

நதி ஓடும் இடங்களிலும், மலைப்பாறைச் சந்துகளிலும் உருண்டையாகத் தேய்ந்து இருக்கும் கற்களைப் பார்க்கையில் வீட்டில் சமைத்த அப்பம் போலிருக்கும், ரொட்டிபோலிருக்கும். ஆகையாலேயே இயேசு இதே உவமானத்தைக் கூறி, "தன்னிடம் ரொட்டியைக் கேட்கும் மகனுக்குக் கல்லைக் கொடுக்கும் மனிதன் உங்களில் எவனாகிலும் உண்டோ?" (மத்தேயு. 7—10.) என்று கேட்கிறார். மேற் பார்வைக்கு நமது பசியைத் தணிக்கும் பொருள் போன்றிருக்கும் இவை, உண்மையில் உயிரைப் பாதுகாக்க ஏற்றவையல்ல என்பதும் இவைகளின் வெளித்

தோற்றம் வெறும் மாயை என்பதும் தெரியவரும். அனேகம் வாலிபர்கள் தமது உத்தியோகத்தைப் பொறுக்கும் சமயம் தனலாபம் அதிகமிருக்கும் வேலையை மிகத் திருப்திகரமான தென்று பொறுக்குகிறார்கள். தனத்தினால் அதிக சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொள்ளலா மென்பது அவர்கள் கருத்து. தேக சௌக்கியத்தினால் மாத்திரம் நமது வாழ்க்கை திருப்திகரமான தாகுமா? உலகத்தில் இருப்பவற்றை நமது சொந்த லாபத்திற்கென்று சுரண்டலாமா? லாபம் ஒன்றையே உத்தேசித்து வியாபாரம் செய்யும் வணிகன், வருமானத்தை உத்தேசித்துச் சிகித்சை செய்யும் வைத்தியர், பேடண்டுகளின் மூலம் தான் சம்பாதிக்கக்கூடிய திரவியத்தை உத்தேசித்து உழைக்கும் விஞ்ஞானி, தான் வாங்கக்கூடிய பணத்தை உத்தேசித்து வாதாடும் வக்கீல், தன்னுடைய ஊதியத்தை எண்ணி உழைக்கும் உபாத்தியாயர், எவ்வித இலட்சியமும் இல்லாமல் தமது சம்பளத்தை உத்தேசித்து உழைக்கும் இஞ்சினீர் அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர் ஆகிய எல்லாரும் வாழ்க்கையில் அவரவர் துறையில் கற்களை அப்பமாகச் செய்கிறார்கள். கடவுள் அளித்த திறமையைச் செலவழித்து அதற்கு மாறாகத் திருப்தியளிக்காத பொருளைப் பெறுகிறார்கள். அவ்வித மனிதர்கள் தமது தேக சௌகரியங்களை மாத்திரம் நாடித் தமது குடும்பத்திற்கு வெளியே நோக்காமல் இந்த முதல் சோதனைக்கு ஆளாகிறார்கள். அவர்களுடைய தேகத்தின் தேவைகள் கிடைத்து விடுகின்றன. நல்ல வீடு, ஒரு மோட்டார், ஒரு ரேடியோ, ஒரு களைப்பு, இதே நிலையிலிருப்பவர்களான மனத்திற்குகந்த சில நண்பர்கள் ஆகியவை கிடைத்து விடுகின்றன. இதுதான் அவர்களுடைய உலகமே. இதைப் பெறவே அவர்கள் முயலுவது.

அவ்வித வாழ்க்கை குறுகினதாகவும், சுயநலப் பற்றுள்ளதாகவும், கேவலம் இந்திரியங்களின் திருப்திக்கென்றே ஏற்பட்டதாகவும் இருக்கும். அவ்வித வாழ்க்கையினுடைய இலட்சியம் நிறையப் பொருள்களைச் சேர்ப்பதாகும். மதியற்ற பணக்காரன் கதையில் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாகக் கட்டி தனதானியம், பொருள்கள் யாவையும் சேர்த்துவைத்து, "ஆத்துமாவே, உனக்காக அனேகம் வருஷங்களுக்கு, அனேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட் டிருக்கின்றன. நீ சுகவாசியாய்ப் புசித்துக் குடித்துக் களிப்பாய் இரு" என்று தனக்குள் சொல்லிக் கொள்ள, கடவுளோ அவனிடம், "மதிகேடனே, இந்த இராத்திரியிலேயே உன் உயிரை உன்னிடமிருந்து எடுத்துக் கொள்வார்கள். அப்பொழுது நீ சேர்த்துவைத்தவைகள் யாருடையனவாகும்" என்றார். தமக்கென்று இகலோகப்பொருளைச் சேர்த்து வைத்துக்கொண்டு கடவுளிடம் சொத்து எதுவும் இல்லாம லிருப்பவர்கள் அவ்விதமானவர்களே. இம் மண்ணுலக வாழ்க்கை சாஸ்வதமற்றது என்பதை நாம் உணர வேண்டும். இங்கே நிரந்தரமான வீட்டை நாம் கட்டிக்கொண் டிருக்க இயலாது. பேதுரு போன்ற சீடர்கூட மறுரூப மலையில் இருக்கையில் அச்சமயத்திய ஆனந்தத்தில் மயங்கி அது நிரந்தரமாக இருக்கவேண்டு மென்று ஆசைப்பட்டார். (மத்தேயு. 17—4.) அச்சோதனை அவருக்கு ஏற்பட்டது.

இவ்வுலக வாழ்க்கைக்கு உரிய விஷயங்களில் நாம் ஊன்றி விடுகிறோமா? "ஆகாரத்தினால் மாத்திரம் மனிதன் ஜீவிக்கவில்லை." என்று நாம் போதிக்கப் படுகிறோம். தனத்தினால் ஏற்படும் திருப்தி ஒன்றுதானோ வாழ்க்கையில் முக்கியம்? நன்கு பாதுகாக்கப்பட்ட அருமை நாய்க்குட்டிகள் போலவோ நாம் வாழ்வது?

இந்தச் சோதனை ஏசுநாதருக்கும் ஏற்பட்டது. அவருக்கு உள்ள தெய்வீக சக்தியைக்கொண்டு அச்சமயத்தில் சொந்தப் பசியைத் தணித்துக் கொள்வதற்கு முயன்றாரோ? கல்லை அப்பமாகச் செய்து உண்ண முயன்றாரோ? இல்லை. அவ்விதம் செய்ய வெறுப்புடன் நிராகரித்து விட்டு, கடவுளின் இச்சையையும் அவருடைய வேலையையும் செய்வதிலேயே தமது திருப்தியைப் பெற்றார். தமது பசி தாகங்களைத் தணித்தார். (யோவான். 4—34.) நாம் வேறு விதமாகச் செய்யலாமா? உலகப் பொருளுக்கு ஊழியஞ் செய்து, நமது ஆத்மத்தை ஒரு குவளைக் கஞ்சிக்கு விற்று, சாப்பிட்டுக் குடித்து, சந்தோஷமாக இருப்பதற்காகவே ஜீவிப்பதா? நித்திய ஜீவனுக்கென்று நிலைத்திருக்கும் போஜனத்திற்காக உழைக்காமல், அழிந்துபோகிற போஜனத்திற் காகவோ உழைப்பது? (யோவான். 6—27.) பரலோகத்திலிருந்து கிடைக்கும் ஆகாரத்தைவிட்டுக் கூழாங்கற்களைப் பெற முயலுவோமா? அல்லது பழமையாகப் போகாத பணப்பைகளையும் பரலோகத்திலே குறையாத ஐச்வர்யங்களையும் சம்பாதிக்க முயலுவோமா? அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. (லூக்கா. 12—33.) நமது இலட்சியம் கடவுளின் இராச்சியமும் அவருடைய சித்தமுமே என்று பொறுக்கி எடுக்க நமக்குச் சக்தியைக் கடவுள் அளிப்பாராக. அதற்குமேல் இந்த விஷயங்கள் தம்மில் நமக்குக் கிடைக்கும்.

2. உப்பரிகையின் மீது இருந்து குதித்தும் காயம் படாமலிருப்பது.

அப்பொழுது பிசாசு அவரைத் திருநகரத்திற்குக் கொண்டுபோய்த் தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி, "நீர் தெய்வ குமாரனே யானால் கீழே குதித்து விடும்; அவர் உம்மைக் குறித்துக் கட்டளை யிடுவார்; உமது பாதம் கல்லில் படாதபடி அவர்கள் உம்மைத் தங்கள் கையில் ஏந்திக்கொள்வார்கள்" என்று எழுதியிருக்கிறது. என்றான்.

இந்த இரண்டாவது சோதனை முதற் சோதனையைவிட மேற்பட்டது. முதற் சோதனை உடலைப்பற்றியது. மிருக குணத்தைப் பரீட்சிப்பதாகும். இதுவோ நமக்கு இருக்கும் சில புத்தித் திறமைகளை நன்றாக உபயோகிப்பதில் ஏற்படும் திருப்தியைப் பொறுத்தது. ஒரு மோட்டார் வண்டி செய்கிறவர் தமது வண்டியின் அழகிலும் சக்தியிலும் பெருமைப்படலாம். ஒரு வைத்தியன் தனது சௌக்யப் படுத்தும் திறமையில் கர்வப்படலாம். ஒரு விஞ்ஞானி தாம் கண்டறிந்த இயற்கையின் இரகசியங்களைப்பற்றிச் சந்தோஷிக்கலாம். ஒரு வக்கீல், குற்றவாளியான கட்சிக்காரனைக் கூடத் தப்பிவைக்கக்கூடிய தமது வாக்குத் திறமையைப்பற்றி இறுமாப்பு அடையலாம். ஒரு பாதிரி பிரசங்கம் செய்யக்கூடிய தமது ஞானத்தைப்பற்றி மகிழ்ச்சி அடையலாம். இஞ்ஜினீர் ஒருவர் இயற்கையின் சக்திக்குக் கடிவா

எம்போட்டு அதை ஜனங்களுக்குப் பயன்படுத்திக் கொடுக்கக்கூடிய தமது சக்தியைப்பற்றிப் பெருமைப்படலாம். ஒரு சர்க்கார் உத்யோகஸ்தர் தாம் நேர்மையுடன் வேலைசெய்வதுபற்றித் திருப்தி அடையலாம்.

இதெல்லாம் ஓரளவு இருப்பது நல்லதுதான். ஆனால் இவை மாத்திரம் போதா. முதற்கூறிய மிருகத் திருப்தியைவிட்டு இது மனிதருக்குத் தமது புத்தித்திறமையைச் சரிவர உபயோகிப்பதனால் ஏற்படும் ஓர் உயர்ந்த திருப்தியாக இருக்கிறது. நாம் கேவலம் பணத்திற்காக அல்லாமல், கீர்த்திக்கும் பெயருக்கும் என்று உழைக்கலாம். ஆனால் அவ்விதமிருப்பதும் கடவுளின் திட்டத்தின்படி நடப்பதல்ல.

பின் என்ன செய்வது? தமது திறமையை ரூபாய்க்கு என்று விற்கக்கூடா தென்றால், வேலையைச் சரியாகச் செய்கிறோம் என்ற பெருமைக்கும் மனச்சந்தோஷத்திற்கும்கூட அதை விற்கக்கூடாதா?

எல்லாருக்கும் தோன்றக்கூடிய சிக்கலான இந்தப் பிரச்னைக்கு ஏசு விடை கூறுகிறார். தனது வாழ்நாள் முழுவதும் மோசேயின் கற்பனைகளைக் கடைப்பிடித்துச் சரிவர நடந்துவந்த ஐச்வர்யவானிடம், "உன்னிடம் ஒரு குறைவு உண்டு. நீ போய் உனக்கு உண்டானவைகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்தில் உனக்கு ஐச்வர்யம் இருக்கும். அப்பால் வந்து என்னைப் பின்பற்று" என்றார். (மாற்கு. 10—21.) ஒரே பார்வையில் அந்த வாலிபனின் இறுமாப்பை ஏசுநாதர் அறிந்து கொண்டார். அவனுடைய வாழ்க்கை தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்கு உதவியளிக்காத வாழ்க்கை, தேங்கிக்கிடக்கும் குட்டைத்தண்ணீர் போன்றது என்று அறிந்துகொண்டார். ஆகையால் அவ்வாழ்க்கையை இரப்போருக்கு அன்னமிட்டு, பரவிய வாழ்க்கையாகச் செய்யுமாறு ஏசு கூறினார். நமது திறமைகளை நாம் கீர்த்திக்கும் புகழுக்கு மென்று செலவிடாமல் நமக்குப் பிரதியை எதிர்பாராமல், எளியவருக்கு உதவி புரிவதில் செலவழிக்க வேண்டும். நமக்கு இருப்பவைகளில் தர்மம் செய்யுமாறு ஏசு கூறுகிறார். (லூக்கா 11—41.) நமது வாழ்க்கை முழுவதையும் அவருக்கு அர்ப்பணம் செய்தாலே அவருக்குத் திருப்தியளிக்கும். நாம் நமது திறமையையும் சக்தியையும் சேர்த்துச் சும்மா வைத்திருக்கவும் கூடாது, நாம் செய்யும் வேலைகளில் பெருமைப்படவும் கூடாது. நம்மால் இயன்றது முழுதும் செய்து, அதற்குமேல், நாம் பிரயோஜனமற்ற அடிமைகள், செய்யக் கடமைப் பட்டிருந்தவைகளைத் தானே செய்தோம் என்று எண்ணவேண்டும் (லூக்கா 17—10.) நமது மமதையை நம்மால் அடக்க இயலுமா? நமது செய்கைகள் இதரர் பார்த்து அதைப் புகழவேண்டும் என்று செய்யப்படுகிறதா? விஞ்ஞானம், கலை, இந்திரியத் திருப்திகள் இவைகள் கேவலம் தம்மில் ஒரு முடிவு அல்ல. மனிதனும் அவனுடைய திறமைகளும் கடவுளின் சிருஷ்டியில் ஒரு அம்சமே. இவற்றைத்தனித்துப் பாவிக்கக்கூடாது. ஆகையால் கடவுளைச் சேர்ந்ததைக் கடவுளுக்கே கொடுப்போமாக.

### 3. உலகத்து இராச்சியங்களின் மகிமை

ஏசுவை மிகவும் உயர்ந்த மலைமேல் கொண்டுபோய் உலகத்து சகல இராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக்

காண்பித்து, "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் இவைகள் எல்லாவற்றையும் உமக்குத் தருவேன்" என்று பிசாசு சொன்னது. அப்பொழுது ஏசு, "அப்பாலே போ, சாத்தானே, 'உன் ஆண்டவராகிய கடவுளைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்' என்று எழுதி யிருக்கிறதே" என்றார்.

ஜனங்களுக்கு உபதேசம் செய்யப் புறப்படும் சமயம் ஏசுநாதர் தாம் அவ்வேலையை எந்த முறையில் செய்யலாம் என்று ஆலோசித்திருந்தார். அக்காலத்திய யூதர்கள் தமது மெஸையாவின் இராச்சியம் வரப்போகிறதென்று அதற்கு அறிகுறியான சின்னங்களை எதிர்பார்த்து இருந்தனர். ஏசுநாதர் தமது தெய்விக சக்தியினால் மந்திர ஜாலங்கள் முதலியவை செய்து யூதர்களைத் திருப்திசெய்து தமது வசமாக்கி இருக்கலாம். முந்தின சோதனையில் அந்த வழி வேண்டாமென்று நிராகரித்தார். அதற்குமேல் ரோமர்களைத் துரத்திவிட்டு ஒரு இராச்சியத்தை ஏற்படுத்தித் தமது ஜாதியர் பேரில் அரசாட்சி செய்யலாம் என்ற இந்தச் சோதனை அவருக்கு ஏற்பட்டது. இதுவும் அவருக்குப் பிடிக்கவில்லை. கடவுளை மாத்திரமே அவர் தொழ விரும்பினர்.

முதல் இரண்டு சோதனைகளும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய தனி வாழ்க்கையைப் பற்றி ஏற்படுவ தாகும். ஆனால் அவன் தனிப்பட்டவனல்ல, ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவன். முதலில் அவன் தனது உடலுக்கென்று, கேவலம் மிருகம்போலும் ஜீவிக்காமல் இருக்கிறனா என்பதும், இரண்டாவதில் தனது புத்தியையும் திறமையையும் சரியான வழியில் உபயோகித்து வருகிறனா என்பதும், மூன்றாவதில் தான் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவனென்று அவன் உணர்ந்து தனது வாழ்க்கையுடன் சமூக வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்ளுகிறனா என்பதும் சோதிக்கப்படுகின்றன.

இதரர்களின் வாழ்க்கையையும் தனது அதிகாரத்திற்கு உட்படுத்தி அவர்களுடைய ஆயுளைத் தனது இஷ்டம்போல் கட்டளையிட மனிதனுக்கு விருப்பமுண்டாகிறது. நமது சமூக உணர்ச்சியானது நமக்கு ஆசை காட்டி நம்மைச் சோதிக்கிறது.

இதரர் வாழ்க்கையின் பேரில் அதிகாரம் என்பது கேவலம் மிருக வல்லமையினால் கிடைக்கலாம்; அல்லது பணத்தின் தந்திரத்தினால் கிடைக்கலாம்; அல்லது அரசியல் நுட்பத்தினால் கிடைக்கலாம். அலக்ஸாண்டர் உலகம் முழுவதும் ஜயிக்க விரும்பினான். ஜப்பான் சைனாவை வசப்படுத்தி அதை விருத்திசெய்ய விரும்புகிறது. முஸோலினிக்கு அபிஸினியாவை "நாகரிக"ப்படுத்த விருப்ப முண்டாயிற்று. தென் அமரிக்க நாடுகளில் கடனும் ஈடும் கொடுத்து நியூயார்க் நகரம் தனது அதிகாரத்தை அங்கே நிலுத்த முயலுகிறது. நாஜி சங்கக் கூட்டத்தின் மூலம் ஹிட்லர் ஜர்மன் ராஜ்யத்தைத் தனது கைக்குள் வைத்துக்கொண் டிருக்கிறர். நம்மில் பலர் அவ்விதப் பெரிய பெரிய ஆட்சிக்கு விரும்பாமல் இருக்கலாம். ஆனால் உள்ளூரில் நம்மைப் பிறர் மெச்சவேண்டு மென்ற எண்ணத்துடன் ஒருகால் முயற்சிகள் செய்யலாம்; பள்ளிக்கூடக் கமிட்டி நமது கைக்கீழ் உழைக்க வேண்டும், பஞ்சாயத்து அல்லது ஜில்லா

போர்டு அல்லது மாகாண சட்டசபையை நாம் ஆளவேண்டும் என்று விரும்பலாம். எதுவாக இருப்பினும் அந்த விருப்பத்திற்குக் காரணம் என்ன? நம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வதா அல்லது சுயநலமற்ற சேவையா? நமது உண்மையான உள்ளம் கடவுள் ஒருவருக்கே தெரியும். நாம் வெளிவேஷம் போடக் கூடாது. இது மிக நுட்பமான சோதனை. ஏசுவின் சீடரான யாக்கோபும் யோவானும்கூட ஒரு சமயம் ஏசுவின் வலது பாரிசத்திலும் இடது பாரிசத்திலும் உட்கார்ந்து, அவருடைய மகிமையைப் பகிர்ந்துகொள்ள விரும்பி, இச்சோதனையில் அகப்பட்டுக் கொண்டனர். (மாற்கு. 10—37) இந்த அபாயம் அதிகம் இருக்கிறது. நாம் பொருளுக்காக ஆசைப்படாமல் இருக்கலாம். சுயநலத்திற்கென்று மாத்திரம் உழைக்காமல் இருக்கலாம். ஆனால் பிறரின் புகழ்ச்சியும், பிறரை ஆதரிப்பதனால் நமது மமதைக்கு உண்டாகும் சந்தோஷமும் நம்மை உழைக்கச் செய்யலாம். எந்தக் காரணமாக இருந்தாலும் அதற் கேற்ற பலன் தான் நமக்குக் கிடைக்கும்.

ஏசுநாதர் கடவுளை வழிபடுவது, அவருடைய திருப்பணியைச் செய்வது என்ற ஒரு காரணத்திற்காகவே உழைத்தார். அந்த உழைப்பின் பலனை என்ன ஏற்பட்ட போதிலும் அதைப் பொருட்படுத்த வில்லை. ஒருகால் அவ்வித வேலையினால் கீர்த்தியும் தனலாபமும் ஏற்படலாம். இது மிக அபூர்வம். அனேகமாய் அவ்விதப் பணி நம்மை அதிகாரவர்க்கத் தினருடன் எதிர்த்துப் போராடும் நிலைமையையே உண்டாக்குகிறது. யோவான் ஸ்நானகன் தனது கடமையைச் செய்ததனால் தனது தலையை இழந்தான். ஏசுநாதர் தனது தலையைக் கீழேவைக்க இடமில்லாமல் அலைந்து, ஆயக்காரராலும் பரிசேயர்களாலும் துரத்தப்பட்டு, இறுதியில் தனது உயிரைச் சிலுவையில் இழந்தார்.

அவரைப் பின்பற்றிச் சென்றால் நமக்குச் சுகவாழ்க்கை கிடைக்கு மென்று ஏசு கூறவில்லை. அதற்கு மாறாகத் தமது சிலுவையையே அளிக்கிறார். "உங்களைக் கொல்லுகிற எவனும் தான் கடவுளுக்குத் தொண்டு செய்கிறதாக நினைக்குங் காலமும் வருகிறது." (யோவான் 16–2) "என் நிமித்தம் உங்களை நிந்தித்து இம்சை செய்து, எல்லாவிதத் தீமைகளை யும் உங்கள் பேரில் பொய்யாகச் சொல்லுவார்களானால் நீங்கள் பாக்கிய வான்கள். சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாகும்." (மத்தேயு. 5—11, 12.)

நாம் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றி, நமக்காகக் காத்திருக்கும் முட்கிரீடத்தை மகிழ்ச்சியுடன் ஏற்று, இப்பணிக்கென்று கஷ்டப்பட நாம் எடுக்கப்பட்டோமே என்று திருப்தியே கொள்ளலாம். நாம் கடவுளின் சித்தத்திற்கு நம்மை அர்ப்பணம் செய்துகொண்டால், வாழ்க்கையில் சோதனைக்கு உட்படாமல் இருக்க நமக்குச் சக்தியை அவர் அளிப்பார்.

கீழ்வரும் அத்தியாயத்தில் ஏசுவைப் பின்பற்றுகிறவர்கள் செல்ல வேண்டியதாகிய முட்பாதையைக் கவனிப்போம்.

## ஆருவது அத்தியாயம்

# " நான் உங்களை ஏவுகிறேன் "

ஒரு தனிப்பட்ட மதத்தை ஏற்படுத்த வேண்டு மென்று ஏசு விரும்ப வில்லை. " இஸ்ரவேல் வீட்டாரில் காணமற்போன ஆடுகளிடம் அனுப்பப் பட்டேனேயன்றி வேறல்ல" என்றார். (மத்தேயு. 15—24.) அதாவது அவர் யூத மதத்திலிருந்த துர்வழக்கங்களைக் களைந்து, அதைக் கடவுள் நியமித்த வழியில் அமைத்து, மேலும் பலரை அம்மதத்தில் சேர்ப்பதனால் அதற்குப் பலத்தை உண்டாக்குவதே தமது வேலை என்று நினைத்தார். ஒருவனைத் தமது மார்க்கத்தில் சேர்ப்பதற்காகச் சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரியும் பரிசேயரையும் வேதபாரகரையும் அவர் மிகப் பலமாகக் கண்டித்தார். (மத்தேயு. 23—15.) அவர் தமது சீடர்களிடமும் புறஜாதியரின் இடங்களுக்குப் போகாமலும், பட்டணங்களில் பிரவேசியாமலும் காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போகுமாறு சொன்னார். (மத்தேயு. 10—9.) மனிதன் சுய வளர்ச்சியினால் பரிபூரண நிலை அடைந்து கடவுளின் குமாரனாகி, பிறகு கடவுளிடமே ஐக்யமாவதற்கு ஏற்றது அல்லாமல் அதற்கு விரோதமாக இருப்பவைகளான பழக்க வழங்கங்களை எல்லாம் அவர் மிகவும் எதிர்த்துப் போராடினார். ஒருவன் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும் அளவே மதத்தினால் நன்மை என்பது அவருடைய கருத்து. அவர் ஆரம்பித்த இந்த வேலைக்கே தங்களை அர்ப்பணம் செய்துகொண்டு இதைத் தொடர்ச்சியாகச் செய்து வரக்கூடிய உதவியாளர்கள் ஏசுவிற்குத் தேவை. இந்த இடுக்கமான வாசலில் புகுந்து நெருக்கமான வழியே செல்வது மிகவும் பிரயாச மென்றும் அது அனேகரால் இயலாது என்றும் அவர் அறிவார். அழிவிற்குப்போகும் விரிந்த வாசலுடைய அகல வழியில் போக அவர்கள் விரும்புவார்கள். (மத்தேயு. 7—13.) அழைக்கப்பட்டவர் அநேகர், தெரிந்தெடுக்கப் படுபவரோ சிலரே. (மத்தேயு. 22—14.) அவருக்கே பொறுக்கின சீடர்கள் பதினொரு பேர்கள் மாத்திரமே இருந்தனர். எழுபது பேர்களை மாத்திரமே பிரசாரத்திற் கென்று அவர் அனுப்பினார். ஆகையால் தேசம் முழுவதும் உண்மைக் கிறிஸ்தவர்களாக வேண்டு மென்று எதிர்பார்ப்பது வீண். திவ்விய சபைகள் தங்களுடைய தனிக் கிறிஸ்தவ முறையைப் பின்பற்றுபவராக எல்லாரையும் செய்ய முயன்று, அதன் பலனை ஏசு காண்பித்த நெருக்கமான பாதையை விஸ்தாரமாக எல்லாருக்கும் சௌகரியமானதாகச் செய்துவிட்டன. இவ் விதம் செய்வது ஏசுநாதரின் கொள்கைகளையே மாற்றிச் சாரமற்றதாகச் செய்தோ, அடியோடு புறக்கணிக்கும்படியாகவோ ஆகிவிட்டது.

இந்த அத்தியாயத்தில் ஏசுநாதர் தம்மை அனுசரித்துச் சிலுவையைத் தூக்கித் தன்பின் வருபவர்களுக்கு இலட்சியமாக எடுத்துக் காண்பித்த கொள்கைகளை ஆராய்வோம்.

**தொண்டு.** தமது ஆட்களுக்கு அரச வாழ்க்கையும், ஆட்படைகளும் அளிப்பதாக ஏசுநாதர் கூறவில்லை. அவர் தமது நிபந்தனைகளைத் தெளி

வாகச் சொல்லுகிறார். "உங்கள் கச்சையில் பொன் வெள்ளி செம்புக் காசு இவற்றைச் சம்பாதித்து வைத்துக்கொண்டு போகவேண்டாம். வழிக்குப் பை, இரண்டு அங்கி, பாதரட்சை, தடி ஒன்றும் வேண்டாம். வேலையாள் தன் ஆகாரத்திற்குப் பாத்திரன். எந்த ஊருக்கு அல்லது கிராமத்துக்குப் போனாலுஞ் சரி, அங்கே தகுந்த மனிதன் யாரென்று விசாரித்து அறிந்து அவ்வூரை விடுமளவும் அவனுடன் தங்கி இருங்கள்." (மத்தேயு. 10—9, 11.) ஆகையால் அவருடைய ஆள் என்பதற்கு அடையாளம் வெல்வெட்டில் பதித்த தங்கச் சிலுவை அல்ல, பிச்சை எடுக்கும் ஓடே. "வீட்டுக்கு வீடு போகவேண்டாம். நீங்கள் எந்த ஊர் சென்றாலும் அங்கே உங்களை ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்களுக்குக் கொடுப்பவைகளைப் புசித்து அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைக் குணமாக்கி, கடவுளின் இராஜ்யம் உங்களுக்குச் சமீபத்திலிருக்கிற தென்று அவர்களுக்குச் சொல்லுங்கள்." (லூக்கா 10—7, 8.) விருந்தோம்பல் என்பது நல்லது. ஆனால் அதனால் வேறு இன்னும் மேலான காரியங்களில் செலவிடக்கூடிய காலம் வீணாகி விடுகிறது. மார்த்தாள் தனது விருந்தினர்களை உபசரிப்பதிலேயே ஈடுபட்டிருப்பதைப் பார்த்துக் கண்டித்த ஏசுநாதர், அவளுடைய தங்கை மரியாள் வீட்டு வேலையை விட்டுவிட்டு அவருடைய காலடியில் உட்கார்ந்து அவர் பேசுவதைக் கேட்டதற்காக அவளைச் சிலாகித்து அவள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். (லூக்கா. 10-42).

நல்ல வாழ்வு என்பதனால் மனிதருக்கு நல்லதே என்றாலும் அதிலுள்ள சோதனைகள் பல. குளிர்காலத்து இரவில் கரி நெருப்பில் குளிர்காய விரும்பியதால், மிக பக்தனான பேதுருகூடத் தனது ஆசானை அல்ல என்று மறுக்க நேரிட்டது. (யோவான். 18—18.) அதிகாரிகளிடம் நட்புடனிருந்து அவர்கள் அளிக்கும் உபசாரங்களைப் பெற்றுக்கொள்வதில் மிக அபாயமிருக்கிறது. செல்வமிகுதியினால் நாம் பலனற்றவர்களாக ஆகிவிடாமலிருக்குமாறு எச்சரிக்கப்படுகிறோம். (மத்தேயு. 13—22 லூக்கா. 21—34.) ஏசுநாதரைப் பின்பற்றுவதனால் நமக்குப் பொருள் நஷ்டம் ஏற்பட்டு அவ்வித நஷ்டத்தினால் நாம் நமது வேலையைச் செய்ய இயலாமல் போகலாம். கதரேனர் நாட்டில் பன்றிகள் நாசமடைந்து நஷ்டம் ஏற்பட்டதால் ஏசுவையே வேறு தேசம் போகுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர். (மத்தேயு. 8—34.) ஏசுவின் பணியைச் செய்வதால் நமக்குப் பொருள் லாபம் ஏற்படுமென்று நாம் எதிர்பார்க்கக் கூடாது.

கௌரவநிலை. கோடிக்கணக்கான சராசர ஜீவராசிகளின் வேலைகள் யாவும் கடவுளின் நியமப்படி நடப்பதைப் பார்க்கையில், ஒரு மனிதன் எம்மாத்திரம்!! பொடியிலும் பொடி, தூசியிலும் தூசி. கணக்கிட முடியாத நிரந்தர கால அளவில் இவனுடைய அற்ப ஆயுள் எம்மாத்திரம்!! காலையில் பூத்து மாலையில் வாடும் புஷ்பத்தின் வாழ்க்கை போன்றதே. இந்தப் பெரிய அண்டத்தில், மனிதரின் திறமையும் செய்கையுமல்ல, கடவுளின் இஷ்டமே ஒவ்வொரு கணமும் நிறைவேறி வருகிறது. திராட்சைத் தோட்டக்காரனின் உவமானக் கதையில் ஏசு கூறிய விதம் (மத்தேயு. 20—1-16.) நாம் இருக்கும் நிலையும் நமது திறமையும் நாம் சம்பாதித்தனவல்ல, கடவுளின் அருளினால் ஏற்படுவன. ஆகையால் இந்த விஷயத்தில் நாம்

கர்வப்படவோ பெருமைப்படவோ இடமில்லை. கிறிஸ்துவின் வேலையாட்கள் வணக்கமுடையவர்களாய் இருக்க வேண்டும். தம்மைக் குரு (ரபீ) என்றோ, போதகர் என்றோ சொல்லிக்கொள்ளக் கூடாது. (மத்தேயு. 23—8, 10.) ஆகையால் பிதா என்றோ சாமியார் என்றோ பட்டங்கள் வைத்துக்கொள்ளக் கூடாது. ஏசுநாதர் தமது சீடர்களின் கால்களைத் தாமே கழுவினார். (யோவான். 13—14, 15.) அரச மாளிகைகளில் அதிகாரிகள் நடந்துகொள்வது போலவும் இராமல் அவர்களுடைய சிஷ்யர்களில் பெரியவனாக இருக்க விரும்புகிற எவனும் எல்லாருக்கும் அடிமையாக இருப்பான் (மார்க். 10—44.) என்று ஏசுநாதர் கூறினார். தாம் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும், அனேகரை மீட்கும் பொருளாகத் தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்ததாகச் சொன்னார். ஆகையால் ஏசுவின் பணியைச் செய்பவர்கள் அவருக்குச் சமமாகக் கடவுளின் பிள்ளைகளாகலாம். (யோவான். 1—12.) ஏசு தமது பிதாவில் இருப்பதுபோல் இவர்கள் அவரிலும் அவர், இவர்களிலுமாக ஐக்கியமாகலாம். (யோவான். 14—20.) ஏசு தமக்கென்று ஒரு தனிப்பட்ட தெய்வீகத் தன்மை சொல்லிக் கொண்டதாக ஒரு தவறான அபிப்பிராயம் பரவிவருகிறது. அவர் தாம் கூறிக்கொள்வதற்குக் காரணம் தாம் கடவுளின் கிரியைகளைச் செய்வதே என்கிறார். (யோவான். 10–33–38.) ஆகையால் கடவுளின் கிரியைகளைச் செய்யும் எவரும் கடவுளின் குமாரர் ஆவர்.

பணி செய்ததனால் புகழ்ச்சி ஏற்பட்டால் அதையும் பெருமையுடன் பணிக்கு ஈடாக ஏற்கக் கூடாது. "நீங்களோ உலகத்துக்கு உரியவர்களல்ல......நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து எடுத்தேன். அந்தக் காரணத்தினாலே உலகம் உங்களைப் பகைக்கிறது......அவர்கள் என்னை இம்சைப் படுத்தினார்களானால் உங்களையும் இம்சைப் படுத்துவார்கள்." (யோவான், 15—19, 20.) இந்தப் பகைமைக்குக் காரணம் இருக்காது.

பணி செய்ததன் காரணத்தினால் உலகத்தோரின் புகழ்ச்சிக்கு உரியவர் ஆகலாம். அவ்விதப் புகழ்ச்சி நாம் உத்தேசித்த பாதையிலிருந்து நம்மை விலகுமாறு செய்யலாம். ஆகையால் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஏசு ஐயாயிரம் பேர்களுக்கு ஆகாரம் அளித்ததும், ஜனங்கள் தமது உற்சாக மிகுதியினால் அவரைப் பலவந்தமாக அரசராக்க முயன்றனர். "அவர் தம்மை ராஜாவாக்கும்படி பிடித்துக் கொள்ளப் போகிறார்களென்று ஏசு அறிந்து மறுபடியும் தனியே விலகி மலையில் போய்விட்டார்." (யோவான். 6—15.)

இருந்தும் அன்புகொண்டு செய்யப்படும் உபசாரத்தை இயேசு பெற்றுக்கொண்டார். மரியாள் அவரது பாதங்களுக்கு வாசனைத் தைலம் பூசின சமயம் அதை அங்கீகரித்தார். இவ்விதம் செய்தது தமது சந்தோஷத்திற்காக அல்ல. மிகவும் துன்பப்பட்டவளின் துயரத்திற்கு ஒரு போக்கு ஏற்படுத்திக் கொடுக்கவே. அவளுடைய நலத்திற்காகவே இதை ஏற்றுக் கொண்டார். (லூக்கா. 7—47, 48.) மீண்டும் எருசலேமுக்குள் அவர் நுழையும் சமயம் சீடர் கூட்டமெல்லாம் சந்தோஷங்கொண்டு மிகுந்த சத்தமாய்க் கடவுளைத் துதிக்கையில் பரிசேயரில் சிலர் அவர்களைக் கண்டிக்குமாறு

ஏசுவிடம் சொன்னார்கள். ஆனால் ஏசு இவ்வித அன்பும் ஸ்துதியும் தமது காரியத்திற்கு நன்மையையே உண்டாக்குமென்று உணர்ந்து அவ்விதம் செய்ய மறுத்தார். (லூக்கா. 19—39, 40.)

பற்றுதலில்லாமை: ஏசுவின் பணியைச் செய்பவர்கள் தமது குடும்ப க்ஷேமத்திற்கு மேற்பட்டதாகத் தமது கடமைகளை நினைக்க வேண்டும். தமது தாயையோ, தகப்பனையோ, மகனையோ, மகளையோ தனது கடமைக்கு மேற்பட்டதாக நினைப்பவன் அவரைப் பின்பற்ற அருகனல்ல. (மத்தேயு. 10—37.) அவருடைய சிஷ்யரில் ஒருவன் தனது தகப்பனுக்குச் செய்யவேண்டிய கிரியையைப் பூர்த்தி செய்துவிட்டு வர அனுமதி கேட்ட சமயம் ஏசு அதற்கு உடன்படவில்லை. (மத்தேயு. 8—21, 22.) இதனால் நாம் நமது குடும்பப் பொறுப்பு முழுவதையும் உதறிவிட வேண்டுமென்பது அர்த்தமல்ல. பிள்ளையின் கடமையைச் சரிவரச் செய்வதற்கு ஓர் ஆதர்சமாக ஏசுவே சிலுவை ஏறிய சமயம் தாம் அன்புகூர்ந்த சீடனிடம் தமது தாயாரைப் பாதுகாக்குமாறு ஒப்புவித்தார். (யோவான். 19—26, 27.)

இவ்விதக் குறுகலான பாதையில் நமது சிலுவையைத் தூக்கிச் செல்ல நாம் சித்தமாக இருக்கிறோமா? இவ்விதக் கஷ்டமான வாழ்க்கையை மேற்கொண்டால் கிடைக்கக் கூடியது இறுதியில் பிதாவுடன் ஐக்கியமும் நித்திய ஜீவனுமே. (மத்தேயு. 19—29.)

பரிசோதனை: நாம் ஏசுநாதரைப் பின்பற்றுகிறவர்களா அல்லவா என்பது தேவாலய ஜனன பத்திரத்தில் பெயரைப் பதிவு செய்து கொள்வதனால் ஏற்படுவதல்ல. ஏசு தம்மைப் பின்பற்றுகிறவர்கள் என்பதற்கு அடையாளமாகச் சில குறிகளைச் சொல்லி இருக்கிறார். "ஆண்டவரே ஆண்டவரே என்று என்னிடம் சொல்கிற ஒவ்வொருவனுமல்ல, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவனே பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பான்" என்கிறார் அவர். (மத்தேயு. 7. 21.) "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு கூர்ந்தால் நீங்கள் என் சீடரென்று எல்லாரும் அதனால் அறிந்து கொள்வார்கள்." (யோவான். 13—35.) இவ்வித அன்பும் சத்தியத்தில் பற்றும் இருந்தால் ஏசுவின் குரலைக்கேட்போம். (யோவான். 18, —37.) "அவர் குரலைக்கேட்டு அவருடைய வார்த்தையில் நிலைகொண்டிருந்தால் வாஸ்தவத்தில் அவர் சீடர்." (யோவான். 8—31.) மேலும் அவர் கூறுகிறார்: "நீங்கள் என்னைத் தெரிந்தெடுக்க வில்லை. நான் உங்களைத் தெரிந்தெடுத்தேன். நீங்கள் போய்க் கனி கொடுக்கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும் நான் உங்களை ஏற்படுத்தினேன். (யோவான். 15—16.) நீங்கள் மிகுந்த பலன் அளிப்பதனால் எங்கள் பிதா மகிமைப் படுவார், எனக்கும் சீடராயிருப்பீர்கள்." (யோவான். 15—8.) உண்மை அன்பு. செய்கையில் வெளிப்படும். தான் பெற்ற குழந்தையைப் பாதுகாக்க ஒரு தாயை நிர்ப்பந்திக்க வேண்டுமோ? தான் பசித்திருந்தும் தனது கையிலிருக்கும் அன்னத்தைத் தாயார் குழந்தைக்கு ஏதும் பிரதி எதிர் பாராமல் கொடுப்பாளல்லவா? அதேவிதம் நமது அன்பும் செயலில் காண்பிக்கப் படவேண்டும். நாம் செய்யும் தியாகம் நமது அன்பின் ஆழத்தைக் காண்பிக்கும். "உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள்

விசேஷமாய்ச் செய்கிறதென்ன?" "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்களும் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன?" (மத்தேயு 5—46, 47.) சாதாரணமாய் உலகத்தவரிடம் வழக்கமாக இருக்கும் கொடுக்கல் வாங்கல் முறையான அன்பிற்கு மீறினதாக நமது தொண்டு இருக்க வேண்டுமென்றால் அது பற்றற்றதாக இருக்க வேண்டும். அவ்விதச் செய்கைகளே அன்பின் கனிகள். "ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிந்து கொள்வீர்கள்." (மத்தேயு. 7—20.)

கடமை. ஏசு இகலோகத்தில் "என் சித்தத்தைச் செய்வதற்கல்ல; என்னை அனுப்பினவரின் சித்தத்தைச் செய்வதற்கே" தாம் வந்திருப்பதாகக் கருதினார். (யோவான் 6—38.) அவர் எவ்வண்ணம் அச்சித்தத்தைச் செய்ய முயன்றார் என்பது யோவான் ஸ்நானகன் ஏசு எவர் என்று கேட்ட சமயம், அவர் தம்மைப்பற்றி விடுத்த செய்தியிலிருந்து தெரியவரும். "குருடர் பார்வை யடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள். குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள். மரித்தோர் எழுப்பப் படுகிறார்கள். தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுகிறது." (மத்தேயு. 11—5.) அவர், "வியாதியுள்ளவர்களைக் குணமாக்குங்கள். மரித்தோரை எழுப்புங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தமாக்குங்கள். பேய்களைத் துரத்துங்கள்" என்று தம் சிஷயர்களுக்கும் உத்தரவு இடுகிறார்.

அன்றியும் கடவுள் தமது சிங்காசனத்தில் வீற்றுத் தீர்ப்புச் சொல்லுவதைப் பற்றிய வர்ணனையில் தமது வலப் பக்கத்தில் நிற்பவர்களைப் பரலோக ராஜ்யத்திற்கு ஏற்றவர் என்பதற்குக் காரணம், அவர்கள் துன்பப்பட்டவருக்கு உபகாரம் செய்த நற்செயலே என்று புகழ்ந்து வரவேற்கிறார். "பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனா யிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள். வஸ்திர மில்லாதிருந்தேன். எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள். வியாதியா யிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலி லிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்." "இந்த மிகச் சிறியரான என் சகோதரரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்." (மத்தேயு. 25—35, 36, 40.) இவைகளிலிருந்து பிதாவினிடம் உள்ள அன்பு நமது சகோதரர்களுக்குச் செய்யும் தொண்டாக மாற வேண்டும் என்பது தெரிகிறது. ஏசுநாதர் தமது சிஷ்யர்கள் பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு விளக்காகவும் இருக்க வேண்டும் என்கிறார். உப்பும் ஒளியும் தனித்திருந்தால் அவைகளினால் எவ்விதப் பயனுமில்லை. உப்பு இதர பதார்த்தங்களுடன் கலந்தாலே அது உபயோகப் படுகிறது. பிறருக்கு வெளிச்சம் கொடுத்தால்தான் விளக்குக்கு ஒரு மகிமை. இவ்விதம் பிறருடன் கலந்து உதவாவிட்டால் அவை இரண்டும் தூளியும் சாம்பரும் போலவே, பயனற்றவை. ஏசுவைப் பின்பற்றுகிறவர் தொண்டு செய்வதே தமது வேலையாகப் பாவிக்க வேண்டுமென்பது ஏற்படுகிறது.

வகை. இந்த வேலையை வாழ்க்கையில் எவ்விதம் செய்வது? இவ்விஷயத்திலும் ஏசுநாதரே நமக்குத் தமது சாத்வீகச் செய்கைகளினால் வழி

காட்டுகிறார். "அவர் வாக்குவாதஞ் செய்யவும் மாட்டார், கூக்குரலிடவு மாட்டார். அவர் சத்தத்தை ஒருவனும் வீதியில் கேட்பதுமில்லை. அவர் நியாயத்தை ஜயத்துக்குக் கொண்டுவரும் வரைக்கும் நெரிந்த நாணலை முறியார், மங்கி எரிகிற திரியை அணையார்" என்று அவரைப் பற்றி கூறப் பட்டிருக்கிறது. (மத்தேயு. 12—19, 20.) வாளும் ஈட்டியும் கொண்டு தமது மதத்தை நிலை நாட்ட விரும்புபவரைச் சார்ந்தவரல்ல அவர். எவ்விதக் கலவரமும் செய்யாமல் ரொட்டியின் மாவை மேல் தூக்கும் புளிப்பு போன்றும் அவர் வேலை செய்தார். அவருடைய சீடர்கள் பிறர் செய்கை களைப்பற்றி தீர்ப்புக் கூறக்கூடாது. (மத்தேயு. 7—1.) நற்கருமங்களாலும் அன்பு கூர்ந்த பணியாலும் தமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் (மத்தேயு. 5—16.) இவ்விதம் செய்து பிறருக்கு வழிகாட்டிக ளாக இருக்கவேண்டும். உப்பானது பதார்த்தங்களைப் பக்குவப்படுத்திக் கெட்டுப் போகாமல் காப்பாற்றுவதுபோல் அவர்கள் தங்களுடைய குணங் களினால் பிறரைப் பக்குவப்படுத்த வேண்டும். (மத்தேயு. 5—13.)

ஏசுநாதரின் இலட்சியங்கள் உயர்ந்தவையாகவும் சிறிதும் குறைவு படாதவைகளாகவும் இருப்பினும், அவர் அவைகளை ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்குத் தகுந்த வண்ணம் செய்ய வேண்டுமென்றே எதிர் பார்க்கிறார். "எவனிடம் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடம் அதிகம் கேட்கப்படும். (லூக்கா. 12—48) ஆகையால் திறமை பெற்றவர்களுக்குப் பொறுப்பு அதிகம். ஏழை விதவை தனது செப்புக் காசுகளைக் கோயில் உண்டியில் போட்டதை ஏசு புகழ்ந்தார் பிறரைவிட அவள் அதிகம் கொடுத்ததாக ஏசு கருதினார். "பிறர் தமது மிகுதியிலிருந்து கொடுக்க, இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத் துக்கு உரியதான யாவற்றையும் போட்டுவிட்டாள்" என்றார். (மார்க்கு. 12—44.)

சக்திக் குறைவாக இருப்பவர்களை ஏசு மெதுவாக அழைத்துச் செல்லுகிறார். பொது ஜனங்களிடம் பேசுகையில் அவர்களுடைய அறி விற்கு மேற்பட்ட விஷயங்களைப் பேசுவதில்லை. அவர்களுடைய தினசரி வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை உதாரணமாக எடுத்துக்காட்டி எளிய உவமானங்களைக் கூறியே ஆழ்ந்த விஷயங்களைப் போதிக்கிறார். "அவர் கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறார்கள்." (மத்தேயு.13—13.)

ஏசுநாதரின் வழியைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் இவ்வித வகையில் பணிசெய்ய வேண்டும். தங்களது வாழ்க்கையினாலும் செயலி னாலும் தங்களுடன் பழகுபவர்கள் மனத்தில் லோகபிதாவினிடம் அன்பை உண்டாக்க வேண்டும்.

இடம். மேற்கூறியவைகளிலிருந்து கடவுளிடமுள்ள அன்பு எளி யோருக்குத் தொண்டு செய்வதன் மூலம் வெளிப்பட வேண்டுமென்பது தெரிகிறது. நாம் நோயுற்றவரைக் குணப்படுத்தி, படிப்பில்லாதவருக்குப் போதிக்க வேண்டும். அது மாத்திரம் போதாது; மனிதனின் வாழ்க்கை விருத்திபெற்று சமூகம் மேன்மேலும் சிக்கலாக அமையும் காலத்தில் நாம் செய்யக்கூடிய தொண்டுகளும் அதிகரிக்கின்றன. இன்று பல பெரிய

துறைகளில் சுயநலப் பற்று அற்ற உழைப்பாளிகள் தேவையாக இருக்கின்றனர். நமது ஊரிலிருக்கும் விசுவாசிகளுக்கு மாத்திரம் நாம் உதவிசெய்தால் போதாது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் ஏசுவின் சிஷ்யர்களின் உதவி தேவை. சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய ஒவ்வோர் அமைப்பிலும் அவர்களின் வெளிச்சம் வேண்டும். நாம் இங்கே அவ்விதமான உதவி தேவையாக இருக்கும் பொதுப்பட்ட விஷயங்களை எடுத்துக்கூறிச் சிற்சில விவரங்களை மாத்திரம் சொல்வோம். மேலும் நமது தேசத்திலிருக்கும் நிலைமையையும், இங்குச் செய்யக்கூடிய தொண்டையும் மாத்திரமே கூறுவோமாக.

நாம் முன்பே கவனித்த விதம் ஏசு நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்படிவது என்ற வெளியிலிருந்து ஏற்படும் சாஸனத்தை மாற்றி அந்தர்யாமி கூறுவதற்கு இணங்கும் ஆத்மக் கட்டுப்பாடு முக்கியம் என்பதைப் போதித்தார். அவ்வித வாழ்க்கை நாளடைவில் நமக்கு ஆசைகளைப் பூரணமாய்க் கட்டுப்படுத்தக்கூடிய வழியை சுலபமாய் அளிக்கும். ஆகையால் இப்போது மேல் நாடுகளில் ஒவ்வொருவருடைய ஆசைகளையும் தேவைகளையும் அதிகரிக்கச் செய்து அவைகளைத் திருப்தி செய்துவரும் வழி ஏசுவின் போதனைக்கு நேர் விரோதமானது.

ஐச்வர்யவானுக்கு ஏசு கூறின "உன்னுடையதை விற்று ஏழைகளுக்குக்கொடு." என்ற மொழி தனதான்யங்கள் படைத்தவர்களுக்கு மாத்திரம் பொருந்தும் என்பதல்ல. இதரர்களுக்கு இல்லாத வஸ்து எவரிடம் அதிகம் இருக்கிறதோ அவர்களுக்கும் பொருந்தும். அந்த ஐச்வர்யவானுக்குத் தனமும் நிலமும் அதிகம் இருந்தது. நமக்கு வெள்ளியும் பொன்னும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், நமக்கு இருப்பது எதுவோ அதைக் கடவுளின் அருளாகப் பாவித்து அவ்விதம் பொருள் இல்லாதவரின் குறையை நீக்குவதற் கென்று நாம் அதைச் செலவிடவேண்டும். ஒருவருக்குத் தேகபலமும் ஆரோக்கியமும் அதிகம் இருக்கலாம் அபூர்வமான புத்தி சாதுர்யம் இருக்கலாம், சமூகத்தில் அதிகச் செல்வாக்கு இருக்கலாம், புதிய திட்டங்களை அமைத்து நடத்தும் திறமை இருக்கலாம், வியாபாரத் திறமையும் முன் யோசனையும் இருக்கலாம், பிறருக்குப் போதிக்கும் திறமை இருக்கலாம், கல்வி அறிவு இருக்கலாம், உத்தியோகத் திறமை இருக்கலாம்; சங்கீதம், சித்திரம், சிற்பம் முதலியவைகளில் அறிவு இருக்கலாம், பிரசங்கம் செய்யும் சக்தி இருக்கலாம், வைத்யம், சட்டம் முதலிய துறையில் சக்தி இருக்கலாம், விஞ்ஞான ஆராய்ச்சி செய்யும் அறிவு இருக்கலாம்; விவசாயம், காடுகளைப் பாதுகாப்பது, சுரங்கம் தோண்டுவது முதலிய அறிவு இருக்கலாம். எதுவாக இருப்பினும் அச்சக்தி முழுவதையும் நாம் பிரதியை எதிர்பாராமல் அர்ப்பணம் செய்யவேண்டும்.

இவ்விதம் பணி செய்வதனால், செய்பவன் தளர்ச்சி யடையவு மாட்டான், வீணாகவு மாட்டான். ஏனெனில் இவ்விதப பணி, கிணற்று நீர் இறைக்க இறைக்க இன்னும் தெளிவுபடுவதுபோல், மேன்மேலும் தொண்டு செய்பவனுக்கு நலத்தையே கொடுக்கும். பிரதி கேட்காத இந்தப் பணியானது, செய்பவன் ஏற்பவன் இருவரையும் புனிதமாக்கும். இம்மாதிரி தொண்டு செய்பவன் தானே செய்து கொள்ளும் தனது ஆத்மக்

கட்டுப்பாட்டினால் நாளடைவில் பக்குவ நிலையை அடைந்து பரலோகத்தி லிருக்கும் பிதாவைப்போல் தானும் பரிபூரணத் தன்மையை அடைகிறான். பணியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தனது தேவையைப் பெறுவதனுட னில்லாமல், இவ்விதக் கைம்மாறு கேட்காத பணியினால் அதிக நன்மையை அடைகிறான். அவன் ஒரு தொழிலாளி என்றால் நன்றாகப் போதிக்கப் பட்டதால் தனது வேலையை இன்னும் திறமையுடன் கற்று அதன் மூலம் தன்னுடைய பகுத்தறிவு, கலைத்திறமை ஆகியவற்றை விருத்திசெய்து கொள்ளுகிறான். ஒரு பெரிய பாடகராக வேண்டுமென்றால் பல வருஷத்திய சாதகம் வேண்டும். இவ்விதப் பயிற்சிக் காலத்தில் அவருடைய நுண்ணறிவு விருத்தி பெற்று, அவருடைய காதுகள் நுட்பமாகி, அவர் ஒரு வாத்தியத்தில் பழகினால் கைவிரல்கள் அதிகத் திறமை பெறுகின்றன. இதே விதம் எல்லா வேலைகளிலும் தொழில் மூலம் சக்தி விருத்தி பெறுகிறது. மனிதனின் ஒரு விதச் சக்தி விருத்தி பெற்றால் அது பொதுவில் அவருடைய வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் இடமளிக்கும். தனிப்பட்டு ஒவ்வொருவராகச் செய்யும் வேலையில் நிர்ப்பந்த உழைப்பு என்பது இராது. ஓர் அளவு தேக உழைப்பு இல்லாவிட்டால் மனிதன் குணம் குறைந்து விடுகிறான். வேலையின் மூலமே மனிதன் தன்னுடைய சக்தியை வெளிக்காண்பிக்க இயலும். அவ்வித மிருக்க வேலையைக் கடவுள் இட்ட சாபம் என்று நினைப்பது தவறு. வேலை யில்லாமல் திண்டாடுபவர்கள் தங்களுடைய சொந்த அனுபவத்தினால் மனிதனுக்குச் சரியான வேலை இருப்பதுபோன்ற அதிர்ஷ்டம் வேறே எதுவு மில்லை என்று அறிவார்கள்.

புதிய திட்டங்களை ஏற்படுத்தக்கூடிய சாமர்த்தியமும் சாதுர்யமும் புத்தி நுட்பமும் உடையவர்கள், பாம்பின் கூர்மையும் பசுவின் நிதானமும் உடையவர்கள் தங்களுடைய சக்தியைக்கொண்டு சமூகத்தில் சாந்தமும் முன்னேற்றமும் ஏற்படுமாறு உழைத்து, கிராமத்தில் மனிதர் ஒருவருக் கொருவர் சமாதானமாக வாழவும், தத்தம் சச்சரவுகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளவும், கிராமத் தொழில்கள் சரிவர நடக்கின்றனவா என்று பார்த்தும் பொதுவில் ஜனங்களின் நலத்திற்கு உழைக்கலாம்.

கல்வி அறிவு உடையவர்களுக்கு நமது நாட்டின் கல்விக் குறைவு ஒரு பெரிய சந்தர்ப்பம் அளிக்கிறது. எளியோருக்கு உதவி செய்ய விரும்பு வோருக்கும் நமது நாட்டின் ஹரிஜனங்களின் நிலை ஒரு பெரிய சந்தர்ப்பம்.

நமது நாட்டுப்புறத்துச் சிற்பி, ஆசாரி, கம்மாளன் முதலியோரின் தொழில் முறைகளை நல்ல வழியில் கொண்டுவந்து விட்டு, அவர்களின் உற்பத்தியை விருத்தி செய்து, அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது போன்ற கடவுளின் பணி ஒரு விஞ்ஞானிக்கு வேறு ஏது உளது? ஏசுநாதர் பேதுருவுக்குத் தம்மிடம் உள்ள அன்பைத் தமது ஆடுகளை மேய்ப்பதன்மூலம் வெளிக் காண்பிக்கச் சொன்னார். (யோவான், 21—15, 17.) ஜனங்கள் தமது ஜீவனத்துக்கு வேண்டியவற்றைத் தாமே சம்பாதித்துக் கொள்ளக்கூடிய விதம் அவர்களுக்குத் திறமையும் சந்தர்ப்ப மும் அளிப்பது போன்ற நல்ல 'மேய்ச்சல்' முறை ஏது? அன்னதானம் செய்வதும் இலவசமாகச் சாப்பாடு போடுவதும் மிகச் சாதாரணமான தர்மங்கள்; கேவலம் கணநேரத் திருப்தியை அளிப்பவை. நாம் செய்யும்

உதவி ஒவ்வொருவருக்கும் நீடித்திருக்க வேண்டுமென்றால் நாம் மிகவும் தியாகத்துடன் உழைக்க வேண்டும்.

இவ்விதம் தொண்டு செய்பவர்கள் தமக்குப் பிரதியாக, அன்றன்று போஜனமும் அன்று படுக்க இடமும் ஆடையுமே எதிர்பார்க்கலாம். பிரதியை எதிர்பாராமல் நமக்கு இறைவன் அளிக்கிறார், நாம் அவ்விதமே நமக்கு உள்ளதை அளிக்க வேண்டும்.

தனிப்பட்ட வித்தையுள்ளவர்கள் தமது தனித் திறமைகளைக் கொண்டு வைத்தியம் செய்தோ, விவசாய விருத்தி, தொழில் விருத்தி, வியாபார விருத்தி இவைகளில் உதவி புரிந்தோ தொண்டு செய்யலாம். தானியங்களைச் சேகரித்து வைத்து வியாபார விருத்தி செய்வது போன்ற வேலைகள் முன் நாட்களில் வணிகர்களினால் சற்று சுயநலப்பற்றுடன் செய்யப்பட்ட போதிலும் நல்ல முறையில் செய்யப்பட்டன. ஆனால் நாளடைவில் முதலாளித்துவ முறையில் அவர்கள் இழுக்கப்படவே நாட்டு விவசாயமும் கிராமத் தொழில்களும் ஆதரவு அற்றுப் போயின. பல ஆயிரம் தொண்டர்கள் நமது நாட்டின் கிராமங்களில் உழைக்க இது ஏற்ற தருணம்.

பொருள்களை வாங்குவதிலும் தர்ம முறை இருக்கிறது. நமது தேவைகளைக் குறைத்துக் கொண்டு நாட்டுத் தொழிலாளிகள் செய்யும் சாமான்களை மாத்திரமே வாங்கி அவர்களுக்குச் சுலபமான விற்பனைக்குச் சாதகம் உண்டாக்கலாம். வெளிநாடுகளிலிருந்து வரும் முதலாளி ஆதிக்கத்தின் ஒரு நிலைப்பட்ட உற்பத்தி முறையில் செய்யப்பட்ட பொருள்கள் மலிவாகவும் பார்க்க அழகானவைகளாகவும் இருக்கலாம். நமது தொழிலாளிகள் செய்யும் பொருள்கள் அவ்வளவு திருப்திகரமானவையாக இல்லாமல் இருக்கலாம். நமது நாட்டு உற்பத்திகளை நாம் செம்மைப்படுத்த வேண்டியது அவசியம். ஆனால் அவ்விதம் செம்மையான பிறகே நாம் அவைகளை உபயோகிக்கலாம் என்று காத்திருக்க வேண்டியதில்லை. பொருள்களின் விலையிலும் குணத்திலும் இருக்கும் குறைவை நாம் தரிக்கும் சிலுவையில் ஓர் அம்சமாகக் கருதி நாட்டுத் தொழில்களையே ஆதரிக்க வேண்டும். உண்மையைக் கூறுமிடத்து அவ்விதக் குறைவுகளை நமக்கு ஏற்படும் கஷ்டமென்று நாம் எண்ணலாமோ! ஒரு குழந்தை தனது தயாருக்குத் தன்னுடைய கையால் தைத்த கைக்குட்டையைப் பரிசளிக்கலாம். அந்தத் தையல்கள் கோணல் மாணலாக இருந்தால் அதைத் தாயார் குறைவாக நினைப்பாளோ? அதற்கு மாறாக, அன்புகொண்டு தைக்கப்பட்ட அதைப் போற்றுவாளல்லவா? தாயார் அப்பொருளை வியாபார முறையிலோ லாப முறையிலோ நோக்காமல் தனது அன்பினால் அதைப் போற்றுகிறாள். அதுபோன்றதாக அல்லவோ அன்பின் உருவாகிய கடவுளைப் பின்பற்றுவோரும் செய்ய வேண்டும். இவ்விதம் நல்ல முறையில் பண்டங்களை வாங்கும் தொண்டை ஏழையும் பணக்காரரும் செய்ய முடியும். ஏனெனில் உணவுப் பொருளோ, கூடை முறமோ, சட்டி பானையோ, மண்வெட்டி கடப்பாரையோ; துணி, பாய், படுக்கை, கட்டில் என்றே பண்டம் வாங்காத மனிதர் எவரும் இல்லை. இவைகளை நமது அண்டைவீட்டு ஏழைத் தொழிலாளியிடம் நாம் வாங்கக்கூடும். "அவர்களுக்கு உணவு கொடு"

என்கிறார் ஏசுநாதர். அவர்களுடைய பண்டங்களை வாங்கி வறுமையை நீக்குவது உணவு கொடுப்பதற்கு மிகச் சிறந்த வழியாகும்.

நிர்வாகத்திறமை உள்ளவர்கள் சர்க்கார் வேலையை ஏற்று கிராமத் தொண்டர்கள் போலவும் சொற்ப சம்பளம் பெற்று அரசாட்சி செம்மையாக நடைபெறச் செய்து மக்களுக்கு நலம் ஏற்படுத்தலாம். மேல்மேல் பெரிய பதவி, பெருத்த சம்பளம்—இவற்றுக்கு ஆசைப்பட்டுச் சர்க்காரின் உத்யோகத்திற்குச் செல்வது சரியல்ல. காட்டு இலாகா, வாய்க்கால் வெட்டுவது, மின்சார சக்தி உண்டுபண்ணுவது, போக்குவரத்துச் சாதனங்களுக்கு ஏற்பாடுசெய்வது ஆகிய விஷயங்களில் முன்னோக்கும் தீர்க்க திருஷ்டியும் வேண்டும். தற்கால நலத்தை மாத்திரம் உத்தேசித்து வேலையைச் செய்துவிடக் கூடாது. இந்த இலாக்காக்களில் உத்தியோகம் வகிப்பவர்கள் அனேகமாய்ச் சுயநலக்காரர்களாவும் சுரண்டும் குணம் உள்ளவர்களாகவும் இருந்து ஏழைகளின் சக்தியை மேன்மேலும் குறைப்பவர்களாகின்றனர். இந்தியாவில் தொண்டு செய்ய விரும்புகிறவர்களுக்கு மிக ஏற்ற துறை இதுவேயாகும். அவர்கள் தங்களுடைய முழு சக்தியையும் கொண்டு, சரீரசக்தி, மனோசக்தி, ஆத்மசக்தி ஆகிய எல்லாவற்றையும் கொண்டு எளியோருக்கு அநீதியும் தீங்கும் ஏற்படாமல் போராடவேண்டியிருக்கும். அவர்கள் தேகத்திற்கே தீங்கு செய்யக்கூடியவரும், நமது ஆத்மசக்தியை அசைக்க இயலாதவருமான வலியாருக்குச் சிறிதும் அஞ்சாமல் போராடவேண்டும்.

ஆத்மக் கட்டுப்பாட்டுடனும் இந்திரியங்களை அடக்கியும் வாழும் வாழ்க்கையே அரசியல் ஜனநாயகத்திற்கு மிகவும் கெட்டியான, அசைக்கொணா அஸ்திவாரம். ஏசுநாதர் நமக்கு உண்மையான ஜனநாயகத்தின் விதைகளை அளித்தார். அவைகள் அந்தோ! மேலை நாட்டில் தேவைகளை அதிகரிப்பது என்ற முட்களிடையே விழுந்து வளர இயலாமல் போய் விட்டன.

நமது நாட்டில் உண்மை ஜனநாயகம் என்ன என்ற ஞானம் அதிகரிக்க அதிகரிக்கத் தொண்டர்கள் செய்யக்கூடிய பணிகளின் வரம்பும் நிலையும் வாழ்க்கைபோல் விஸ்தாரமானதாகிறது. ஜனங்களின் பிரதிநிதிகளாக முன் வருகிறவர்கள் தமது தனித் தன்மையை இழந்து தமது குடிகளின் தேவைகளையே தமது வாழ்க்கையாகச் செய்துகொள்ள வேண்டும். உலகத்தின் சுகங்களையும் பாசங்களையும் தமது தாய்நாட்டிற்கென்று துறந்தவர்கள்தானே இதை மிகச் செம்மையாகச் செய்ய இயலும். இதற்கு மேற்பட்டதாக சர்வதேச நாட்டினிடை உழைத்து, தற்சமயம் பேராசை போட்டி ஆகியவற்றினால் ஆளப்பட்டு உலகமே அடிக்கடி இரத்தத்தில் மூழ்கடிக்கப் படுவதைத் தடுக்க முயலலாம். தமது வாழ்க்கையைக் கடவுளின் பணிக்கென்று அர்ப்பணம் செய்தவர்கள் இந்தச் சிக்கலான பிரச்சினைகளைத் தமது கையில் எடுத்து, சத்தியத்தின் ஆவியைக் கடைப்பிடித்து, சந்தேகமும் அவநம்பிக்கையும் தாண்டவமாடும் இடத்தில் அன்பும் உண்மையும் பிரகாசிக்கச்செய்து தொண்டு செய்தால் குழப்பமும் விரோதமும் நீங்கி உலகில் சாந்தமும் அன்பும் ஆளுமாறு செய்யலாம்.

அவ்வித உயர்ந்த சாந்தநிலையானது தற்காலம் ஏசுவைப் பின் பற்றுவதாகக் கூறும் "கிறிஸ்தவ" மதத்தின் குறுகிய போதனையின்படி நடப்பதனால் ஏற்படாது. இவ்விதக் குறுகிய மதத்தின் மதில்களை நாம் தகர்க்க வேண்டும். வாழ்க்கையின் எல்லா அம்சமும் கடவுளின் தியானம் கொண்டதாக இருக்க வேண்டும். கடவுளின் வழிபாட்டை ஞாயிற்றுக் கிழமைகளில் செய்வோம், இந்தக் கோயிலில் செய்வோம், அந்த மசூதியில் செய்வோம் என்று சில சந்தர்ப்பத்திற் கென்று அதைக் கட்டிவைக்காமல், தொட்டில் முதல் சுடுகாடு வரை நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் அவ் வழிபாடாகவே விளங்க வேண்டும். இவ்விதம் விரிந்ததாகச் செய்யாமல் கடவுளின் வழிபாட்டைக் குறுகினதாகச் செய்பவர் தீயோனினின்று வருபவ ராவர், "ஏசுவைச் சிலுவையிலேற்று, பராபஸ்ஸை எங்களுக்கு விடுவி." என்று சொல்லுபவ ராவர்.

**பிணியாளரைக் குணப்படுத்துவது:** பாபம் செய்தவரைப் பச்சாத் தாபப் படுமாறு செய்வதும், இழந்ததை மீட்பதுமே தமது அவதாரத்தின் காரணமாக ஏசுநாதர் கருதினர். (மத்தேயு. 9—13. 18, 11.) பாபத்தி லிருந்து மீள்வதற்கு வழியைக்கூறி உலகத்தோரை இரட்சிப்பவராகிறர். "நல்ல நிலையில் இருப்போருக்கு வைத்தியன் தேவை இல்லை." தாம் குணப் படுத்தினேரிடம் அவர், "போங்கள், இனிமேல் பாபம் செய்யாதீர்." என்று கூறிப் பாபத்திற்கும் வியாதிக்கும் இருக்கும் சம்பந்தத்தைக் காட்டு கிறர். ஆகையால் அவருடைய வேலையைச் செய்வதற் கென்று தம்மை அர்ப்பணம் செய்து கொள்ளுகிறவர்கள் பாபச் செய்கை எங்கிருந் தாலும் அதை எதிர்த்து நோயுள்ளவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும்.

**பாபம்:** பாபம் என்பது என்ன? கடவுளின் சிருஷ்டிகளில் மனி தனே தனது பகுத்தறிவினல் விசேஷமானவனுய் இருக்கிறன். அவ்வித மனிதன், தான் ஒரு சிருஷ்டி என்பதை மறந்து, தானே கர்த்தா என்று எண்ணிக்கொண்டு, தந்தையின் நியமனத்திற்கு எதிராக நடந்துகொள்ள ஆரம்பித்தால் அவன் பாபம் செய்கிறன். தனது நாசத்திற்கும் வழி ஏற்படுத்திக்கொள்ளுகிறன். கடவுளின் நியமனங்களுக்கு விரோதமாக நடப்பதனல் வியாதியும் சாவும்—பாபத்தின் பலனுகை—ஏற்படுகின்றன. அவனை மீளவும் நேர்வழியில் செல்லும்படி செய்தால் அவன் காப்பாற்றப் படுகிறன். ஆகையால் பாபம் என்பது நியாயத்திற்கு விரோதமாகவோ தர்மத்திற்கு விரோதமாகவோ நடப்பது என்பது மாத்திர மல்ல. இயற்கை முழுவதுமே இதில் கட்டுப்பட் டிருக்கிறது. மனிதனின் வாழ்க்கை இயற்கை யுடன் ஒத்து இருந்தால், அவன் கடவுளின் நியமனப்படி நடந்து ஆத்ம ஞானம் பெறுகிறன். அவ்வித மில்லாவிடில் வாழ்க்கையில் அபஸ்வரம் ஏற்பட்டு, முரண்பாடு உண்டாகிறது. அதே விதம் வாழ்க்கையில் அபஸ் வரம் இருந்தால் அது பாபத்தினலும், கடவுளின் நியமனத்திற்கு எதிர்த்து நடப்பதனலும் ஏற்படுகிற தென்று நாம் கொள்ளலாம். நமது மாமிச இச் சைக்கும் நமது ஆத்ம முன்னேற்றத்திற்கும் முரண்பாடு ஏற்படுவதே நமக்கு ஏற்படும் சோதனையாகும். நாம் மாமிச இச்சைகளுக்கு உட்பட் டால் பாபம் செய்பவ ராவோம். நாம் அவ்வித இச்சைகளுக்கு இடம் கொடுப்பதனல் இந்நாட்களில் ஏற்படும் சில பாபங்களைக் கவனிப்போம்.

ஆண்பெண் உறவு: ஒவ்வொரு வர்க்கமும் உலகில் தொடர்ந்து ஜீவித்திருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கடவுள் எல்லாஜீவராசிக ளிடையேயும் சேர்க்கையை ஏற்படுத்தி இருக்கிறார். இந்தச் சேர்க்கை கேவலம் சரீரத் திருப்திக்காக மாத்திரம் ஏற்பட்டால் அது தம்பதிகளிடை ஏற்பட்டாலும் வெளியே ஏற்பட்டாலும் பாபமேயாகும். இதைப் பலரும் ஒத்துக்கொள்ளலாம். ஆனால் இதே விதமான இதர பாபங்கள் அவ்வளவு சுலபமாகக் கண்ணில் படா.

ஆகாரம்.—உதாரணமாக அரிசி என்கிற தான்யமானது உள் அரிசி, நுனி மூளை, மேல்தவிடு, தவிட்டிற்கு அடுத்திருக்கும் சர்க்கரை ஆகியவை கொண்டது. மனிதன் பல காரணங்களை உத்தேசித்து இந்த அரிசியைத் தீட்டிச் சுத்தம் செய்கிறான். இதனால் இயற்கையின் ஏற்பாடு கலைகிறது. இவ்விதம் சுத்தம் செய்த அரிசியைச் சாப்பிட்டு அதனால் ஏற்படும் ஆகாரக் குறைவின் பூர்த்தியை வேறு வகையில் திருப்தி செய்துகொள்ளா விட்டால் வியாதி ஏற்பட்டு அவ்விதப் பாபம் செய்தவனைத் தண்டிக்கிறது. எல்லா ஜீவராசிகளிடமும் பசி என்பது இருந்து, சரீரத்திற்குத் தேவையான ஆகாரம் சரிவரக் கிடைக்குமாறு செய்கிறது. ஆனால் மனிதன் தனது நாக்கின் சுவைக் கென்று மிக உயர்ந்த பதார்த்தங்களைத் தயாரித்து மித மிஞ்சி உண்டு பாபத்தின் கூலியாகச் சரீரத்திற்குப் பலவித வியாதிகளைச் சம்பாதித்துக் கொள்ளுகிறான்.

வேலை: எல்லா உரிமைகளுக்கும் அதற்கென்று ஏற்பட்ட கடமை களும் இருக்கின்றன. இதைப் பிரித்து உரிமைகளை மாத்திரம் அனுப வித்து, கடமைகளைப் புறக்கணிப்பது பாபமாகும். தொழில் செய்வ தனால் வேலை, அவகாசம் ஆகிய இரண்டு ஏற்படுகிறது. வேலையைத் தொழிலாளிகளுக்குக் கொடுத்து, அதனால் ஏற்படும் அவகாசத்தை மாத் திரம் தாங்கள் அனுபவிக்கப் பார்க்கிறவர்கள் சுரண்டுகிறவர் ஆவர். ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம் முதலிய சமூக வியாதிகள் நாம் கடவுளியற்றிய வேலையிலிருந்து அதனுடைய லாபத்தை மாத்திரம் பிரிப்பதனால் ஏற்படுவதாகும்.

மரங்களை எல்லாம் வெட்டிவிட்டு, அதற்குத் தகுந்த வண்ணம் காடு களை மறுபடி இயற்றுவிட்டால் வெள்ளமும் நிலச்சேதங்களும் ஏற்படு கின்றன.

உள்நாடுகளிலிருந்து இயற்பொருள்களை ஏற்றுமதி செய்து வெளியி லிருந்து உற்பத்திசெய்த பண்டங்களைத் தருவிக்கச் சாதகமாக அமைக்கப் பட்டுள்ள ரயில்வே திட்டம் உண்மையில் நாட்டுமக்களுக்கு வேலையில்லா மல் செய்து ஏழ்மையை உண்டாக்குகிறது. மேலும் மணிலாக்கொட்டை முதலிய இயற்பொருள் வெளியே போய்விடுவதனால் நிலத்திற்குத் தக்க எரு இல்லாமல் போகிறது. அதே விதம் குப்பைகள் வீணாக்கப்படும் பெரிய நகரங்களினால் நாட்டின் செழுமை குன்றிவிடுகிறது.

நாணயம்: ரொக்கத்தின் மூலம்லேவாதேவி இருப்பதனால் குடியா னவன் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யாமல் லாபத்தை உத்தே சித்துப் புகையிலை முதலியவைகளை உற்பத்திசெய்யத் தூண்டப்படுகிறான். பசியினால் ஜனங்கள் மரிக்கும் இத்தேசத்தில் அவ்விதம் செய்வது பாப

மாகும். லாபத்திற் கென்று பால், தேன், முட்டை முதலிய சத்தான பதார்த்தங்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டு, நாட்டுமக்களுக்குக் கிடைக் காமல் போய்விடுவது பாபமாகும். இவ்விதப் பாபத்திற்கு இடமளிக்க மூலகாரணமாக இருப்பது நாணயமாற்று.

அரசு: நாட்டுமக்களுக்குச் சுதந்தரமும் கல்வி கற்க வசதியும் கொடுக் காமல் ஜனங்கள் தமது முழுவளர்ச்சியைப் பெறவிடாமல் நாட்டின் அர சாட்சி தடுத்ததென்றால், அவ்விதக் கொடுங்கோல், சைத்தானின் வேலை யாகிறது. அரசு என்பது குடிகளின் வேலையாளாக இருக்கவேண்டும்; குடிகளின் எஜமானனாக இருக்கக்கூடாது. குடிகளுக் கென்றே அரசு ஏற்பட்டது. அரசிற் கென்று குடிகள் ஏற்படவில்லை. மனிதனின் கற்பனா சக்தி முழுவதையும் நாசத்திற் கென்று ஆயுதங்களைத் தயாரிப்பதில் அரசு உபயோகித்த தென்றால் அவ்வித அரசு ஒரு விநாசப்பேயே யாகும். காலாட்படை சைன்யம் கடற்படை முதலிய நாச சக்திகள் மொலாச்சி யால் தன்னுடைய சிஷ்யர்களுக் கென்று சிருஷ்டிக்கப்பட்டவை, கொலைக் கென்று கொலையாளிகளை ஏற்படுத்துபவை. 'சமாதானத்தின் சக்ரவர்த்தி' யாகிய ஏசுவைப் பின் தொடர்பவர்களுக்கு—அன்பைத் தமது வெற்றிக் கொடியாகப் பிடித்துச் செல்பவர்களுக்கு—இவ்வித வேலைகளில் சம்பந்த மிராது. ஏசு இருக்கும் இடங்களில் யுத்தங்கள் இரா. கத்திக ளெல்லாம் உருக்கி ஏர்களாய்ச் செய்யப்படும்.

இவ்வித நிலையை ஏற்படுத்துவதற்காக மானிட சகோதரரிடையே தொண்டு செய்வதன் மூலம் கடவுளின் பணியைச் செய்வோம் என்று தம்மை அர்ப்பணம் செய்துகொண்டிருப்பவர் அச்சமின்றியும் பக்தியுட னும் எவ்விதப் பிரதியையும் எதிர்பாராமல் தமது அன்புப் பணியைச் செய்ய வேண்டும். மனிதரின் நாகரிகத்தில் ஏற்பட்ட விதிகளினால் உண் டாகும் இருளிலிருந்து தம்மை அப்புறப் படுத்திக்கொண்டு, அந்தத் தச்சன் மைந்தனாகிய நஜாரினின் எளிய போதனைகளைப் பின்பற்றிப் பாபத்தை எதிரிட்டு, இடைவிடாமல் போர்புரிந்து, தங்களை இருளிலிருந்து வெளிச்சத்திற் கழைத்த அந்தக் கடவுளின் அற்புத வெளிச்சத்தை உல கத்திற்குக் காண்பிக்கும் விளக்குகளாக இருந்து, தேசத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் அறிவின்மை பாபம் என்கிற இருவித இருளையும் போக்கி, பூமியின் உப்பாகத் தாங்கள் இருந்து, நாட்டின் உயிர் நாடியான பல்வேறு துறையிலும் வாழ்க்கைப் பிரவாகம் பரிசுத்த மானதாக இருக்கு மாறு செய்ய வேண்டும். பாரீர்! வயல்கள் வெண்மையாகி அறுப்பிற் குத் தயாராக இருக்கின்றன. ஆனால் நமக்குத் தேவையான வேலையாட்கள் இல்லை. ஆகையால் அறுவடையின் அரசராகிய அக்கடவுள் அவரு டைய சக்தியின் அம்சத்தைப் பெற்றவர்களாகிய வேலையாட்களை அனுப்ப வேண்டுமென்று நாம் பிரார்த்திப்போமாக.

ஏழாவது அத்தியாயம்

# மனிதரின் கட்டளைகள்

கடவுளின் கட்டளைகளுக்கும் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்குமிடையே வித்தியாசங்களை ஏசுநாதர் கூறுகிறார். கடவுளின் விதிகளுக்கு எப்போதும் கீழ்ப்படியவேண்டும். ஆனால் மனிதரின் விதிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதில்லை. அவை கடவுளின் கட்டளையின் ஆவிக்கு எதிரிடையாக இல்லாமல் இருந்தாலே, சந்தர்ப்பத்திற்குத் தக்க வண்ணம் நாம் அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (மத்தேயு. 23—23. மார்க்கு. 71—8, 13) பேதுரு கூறுவதுபோல் "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது." (ஆக்ட்ஸ். 5—29)

பவுலும் தாம் அடிக்கடி அனுமதிபெற்றுக் கூறும் வார்த்தைகளையும் "கடவுளின் கட்டளைகளையும்" பிரித்துக் கூறுகிறார். (I. கொரி. 7—6, 12, 25. II. கொரி. 8—8, 10. IX. 17.) சில சமயம் இதற்கும் அதற்கும் இருக்கும் வித்தியாசம் மிகச் சிறியதாக இருக்கிறது. ஆகையால் கடவுளின் கட்டளைக்குமேற்பட்டதாக மனிதரின் விதியை நாம் பின்பற்றிவிடாமல் நாம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். நமக்கு இதம் சொல்வதும் போதகராக இருப்பதுமான சத்தியத்தின் ஆவியே அவ்விதக் காலங்களில் நமக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். நமது உள்ளத்திலிருக்கும் இந்தச் சத்தியத்தின் ஆவிக்கு மேற்பட்டதாக வேறு உலக அதிகாரி எவரும் கூற இயலாது. போப்பரசரோ, பார்லிமெண்டின் சட்டங்களோ, பிரிவி கவுன்ஸில் தீர்ப்புக்களோ இந்த நமது உள்ளத்தில் எழும் வார்த்தைக்கு எதிராக நாம் நடக்கும்படி செய்ய முடியாது. ஆகையால் எச்சரிக்கையுடன் இருப்பதற்காக இந்த அத்தியாயத்தில் மனிதரின் விதிக்கும் கடவுளின் விதிக்கும் இருக்கும் வேறுபாடுகள் சிலவற்றை ஆராய்வோம். அவ்வித வேறுபாடுகள், முக்கியமாய்ப் பெண்கள், தாம்பத்ய. வாழ்க்கை, நாட்டின் அதிகாரி முதலியவர் விஷயத்தில் இருக்கின்றன சமூக அமைப்பு மேன்மேலும் சிக்கலாக ஆக, வாழ்க்கையில் அவ்விதப் பிரச்சினைகள் அதிகம் உண்டாகின்றன. இவைகள் எல்லாவற்றையும் தீர்க்க எவ்வித மானிட அமைப்பாலும் சட்டங்கள் இயற்ற முடியாது.

ஏசுநாதர் இவைகளுக்கு அடிப்படையான சில கொள்கைகளை விளக்கினார். அவை என்றும் நிரந்தரமான விதிகள். அதற்கு மேற்பட்ட விதிகளை நாம் சத்தியத்தின் வழியே சென்று ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஏற்கெனவே மூன்றும் அத்தியாயத்தில் நாம் விளக்கிய விதம், ஒரு தீய காரியத்தைச் செய்வது மாத்திரமல்ல, அதை நினைப்பதே பாபமாகிறது. கொலை செய்வதுபோல் கோபம் கொள்வதும் பாபமாகும். விபசாரம் போன்றதே சிற்றின்ப ஆசைகளை மனத்தில் கொள்வதும். மேன்மேலும் அதிக ஜனங்களை மந்தையில் சேர்க்க வேண்டுமென்ற ஆசையினால் ஆதியில் தேவாலய அதிகாரிகள் இந்த விதியைக் குறைத்து மனத்தில் அல்ல, சரீரத்தினால் செய்தால்மட்டுமே பாபம் என்று நியமித்தனர். அவர்களுடைய

நிபந்தனை—" விக்ரங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும், வேசித்தனத்திற்கும் நீங்கள் விலகி இருக்க வேண்டுமென்பதே" (அப்போஸ்தலர். 15—29) புறஜாதியிலிருந்து மாற்றப் பட்ட ஆதி கிறிஸ்தவர்கள் பேரில் இதற்கு மேற்பட்ட கடுமையான விதிகளை வைப்பது உசிதமல்ல என்று அக்காலத்தில் கருதினர்.

தற்காலத்திலும் அதையே கைப்பிடித்து நடப்பதனுல்தான் திவ்யசபை அதிகாரிகள் தவறான வழியில் சென்று விட்டனர். ஏசுவின் போதனைகளையும் சத்தியத்தின் ஆவியையும் பின்பற்றாமல், மூலத்திலிருந்து கட்டளையைப் பெறாமல், தொடக்கத்தில் பேதுருவும் பவுலும் சில மனிதருக் கென்று சில இடங்களில் இட்ட திட்டத்தையே எக்காலத்தும் எல்லா இடங்களுக்கும் ஏற்றதென்று தற்காலத்திய கிறிஸ்தவ போதகர்கள் கொண்டு விட்டனர்.

**பெண்கள் நிலை;** இவ்விதம் முதற் தவறு செய்ததன் பலனாகப் பல தேசங்களில் பல இடங்களில் பல தவறுகள் ஏற்படலாயின. உதாரணமாக ஸ்திரீகள் விடுதலை பெற்றிருக்கும் இந்நாட்களில் லண்டன் நகரக் கோயிலின் பிரசங்கத் தொட்டியில் மிஸ். ராய்டன் என்ற பெண்மணி ஏறின சமயம் பெரிய கலவரம் ஏற்பட்டது. ஏனெனில் பவுல் ஆதியில் கொரிந்திலும் எபிசெஸ்ஸிலும் இருந்த சபைகளுக்குக் கூறிய கட்டளைகளில், " ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அவமானமே." (I கொரி. 14—35.) என்று இருப்பதற்கும், " உபதேசம்பண்ண ஸ்திரீகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. (I தி. மத்தேயு. 2—11.) என்று இருப்பதற்கும் விரோதமாக இருந்தது. இவ்விதம் ஸ்திரீகள் பகிஷ்கரிக்கப் பட்டதற்குக் காரணம் ஆதாமை ஏவாள் பாபம் செய்யத் தூண்டினாள் என்ற கதையே. அச்சமயம் அவள் சபிக்கப்பட்டு அவளுடைய தீச்செயலின் காரணமாய் அவள் எப் போதும் புருஷனால் ஆளப்படுவாள் எனக் கூறப்பட்டாள். (ஜெ. 3--16.) காலத்திற்குப் பொருத்தமற்றதான இவ்விதக் கொள்கையை நிறுத்த முயன்றால் உபாத்தியாயினிகள் இல்லாமல் பள்ளிக்கூடங்கள் என்ன ஆகும்? இந்நாட்களில் அமெரிக்காவில் உபாத்தியாயர் தொழிலை, முக்கியமாக ஆரம்பப் பாடசாலைகளில் பெண்களே செய்து வருகின்றனர். புருஷனின் உயர்ந்த உரிமைகளைக் கொண்டாட விரும்பும் ஆசாரக் காரர்கள் இதே பவுலானவர் கலாத்தியாவில் ஏசுவில் " ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை " என்று கூறியதை மறந்து விடுகின்றனர்.

**கணவனும் மனைவியும்:** கொரிந்தியர்களுக்கு விவாக முறைகளைப் பற்றிப் பவுல் எழுதும் சமயம் அக்காலத்தில் அவர்களிடையே சகஜமாக இருந்த வேசித்தனத்தைப்பற்றி எழுதுகிறார். இந்தக் கேள்வி பிரத்தியேகமாய் அவரைக் கேட்கப்பட்டது. (I. கொரி. 7—1, 6.) அச்சமயமும் ஆண் பெண் இருவரையும் சமமாகவே பாவித்து எழுதுகிறார். மேலும் தாம் கடவுளின் அதிகாரம் பெறவில்லை என்றும் கூறுகிறார். எபிசேயருக்கு எழுதிய கடிதத்தில் (5—23, 24 ) " புருஷன் மனைவிக்குத் தலையானவன் " என்று எழுதி யிருக்கிறார். இவ்விதம் கூறியதற்குக் காரணம் நாம் முன்பே கூறிய வண்ணம் ஏவாளின் சாபம் என்ற கதை. பவுல் வாலிபத்தில் மிக ஆசாரமுள்ள யூதனாக வளர்க்கப்பட்டு, போதனை பெற்றிருந்ததால் அக் கதை அவர் மனத்தில் நன்கு பதிந்திருந்தது.

அதே யூத போதனையினால் பெண்கள் தாங்கள் புருஷருக்குக் கீழ்ப் பட்டவரென்று தெரியப்படுத்தத் தங்களுடைய தலையை மூடிக்கொள்ள வேண்டுமென்று பவுல் கூறினார். (I கொரி. 11—5-10) இன்றும் சபையில் பெண்களின் தலை மூடியிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது! இருந்தும் கடவுளெதிரில் ஆணும் பெண்ணும் சமமே என்று பவுல் கூறியது என்ன ஆயிற்று? (I கொரி. 11—11).

யூதரில் கிறிஸ்தவரானவர்களுக்குப் போதித்து வழிகாட்டப் பேதுரு நியமிக்கப்பட்டாரென்பதையும், அவ்வித யூதர்களிடை அனேகம் மனைவிகள் கிறிஸ்துவின் மதத்தைத் தழுவ, புருஷர்கள் யூதர்களாக இருந்தனரென்றும், அனேக யூதப் புருஷர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவ, அவர்களின் மனைவியர் யூதர்களாக இருந்தனரென்பதையும் நாம் மறக்கக் கூடாது. ஆகையால் மனைவிகளைக் கணவருக்குக் கீழ்ப்பட்டு இருங்கள் என்று அவர் கூறும் சமயம், (I பேதுரு 3—1-4) அம் மனைவிகள் தமது பணிவு, பதிவிரதத் தன்மை, சாந்தம் முதலியவைகளால் தமது கணவரைத் தமது வழிக்கு மாற்ற வேண்டு மென்று அவர் விரும்புகிறார். அவர் கூறும் முறை "சத்தியாக்கிரஹ" முறை. இதிலிருந்து பெண்கள் கீழ்ப் பட்டவரென்பது ஏற்படவில்லை. ஏனென்றால் இதே போதனையைத்தான் விசுவாசியான கணவனுக்கும் கூறுகிறார். (I பேதுரு. 3—7.) பவுலும் கொரிந்தியர்களுக்கு இதே விதம் எழுதுகிறார். (I கொரி. 7—14.)

ஏசு இருபாலாரையும் சமமென்று கருதினார். உண்மையில் அவர் இருபாலாருக்கு மிடையே வேற்றுமையே பாராட்ட வில்லை. "அவர்கள் தெய்வ தூதர்கள் போல் ஆவார்கள்" என்கிறார். (லூக்கா. 20—36) அதாவது அவர்கள் கடவுளின் குழந்தைகளானால் அதற்குமேல் அவர்களிடை ஆண் பெண் என்ற வித்தியாசமில்லை. இந்த வித்தியாசம் மாமிச உலகத்தைச் சேர்ந்தது. அந்தந்த வர்க்கம் அழிந்து விடாமலிருக்க ஏற்பட்ட விஷயம். மனிதரின் பகுத்தறிவுபிசகித் தவருக இருப்பதனால் மனிதருக்கே தீங்கை உண்டாக்குவதாக இருக்கிறது. மறுபடி பிறந்தால் இது முற்றும் மறைந்து விடும்.

**கிறிஸ்துவ மதக் கட்டளைகள்:** இந்த விதமே, மதத்தைச் சேர்ந்த விதிகள் அதிகாரங்கள் முதலியவற்றிற்கு பேதுருவும் பவுலும் எழுதியவற்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவைகளுக்கே விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டு மென்று கோயில் அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ரோமர் 13. 1—6தான் இவர்களுக்கு மேற்கோளாக இருக்கிறது. ஆனால் அவ்விடத்தில் பவுல் எழுதிய முதல் நிபந்தனையாகிய, "கடவுளாலேயன்றி ஓர் அதிகாரமும் இல்லை" என்ற வார்த்தை நழுவ விடப்படுகிறது. எல்லா அதிகாரங்களும் ஒரே விதமாகா. அவ்விதம் என்றால் ஹிந்துக்களின் சங்கராச்சாரியார், பௌத்தர்களின் தலைலாமா, முஸ்லிம்களின் காலிப் முதலியோருக்கும், போப் பாண்டவரும் காண்டர்பரி ஆர்ச் பிஷப்பும் கீழ்ப்படிய வேண்டும் என்றாகிறதே! நாம் எந்த அதிகாரத்துக்குக் கீழ்ப்படிகிறோ மென்பது நமது உள்ளத்தில் எழும் பக்தியினால் தூண்டப்பட்டு ஏற்படுவ தாகும்.

பரிசேயரில் ஒருவராக இருந்த பவுல் வெளிச்சம் ஏற்பட்டதும் யூதரின் அதிகாரத்திற்கு உட்படமறுத்து அதை எதிர்த்தார். பிற்காலத்தில் அப்போஸ்தலர்கள் யூதர்களின் முக்கிய பிரமாணமாகிய விருத்தசேதனத்தை ஒதுக்கினர். (அப்போஸ். 15—23, 29. கலா. 5, 6). வேறு வழியில்லை யென்ற சந்தர்ப்பம் ஏற்பட்டபோது பவுல் டிமோத்தியை நீக்கினர். (அப்போஸ் 16—3). யூதர்களின் சமய அதிகாரத்தின் பிடியில் சிக்காமலிருப்பதற்காகவே சீசரிடம் பவுல் விண்ணப்பம் செய்தார் (அப்போஸ். 25—11).

வேத பாரகருடையவும் பரிசேயருடையவும் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று ஏசு கூறியதாக (மத். 23—2, 3) மேற்கோள் சொல்லப்படுகிறது. அதே சமயம் அவர் கூறின "மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறர்" என்பது மறந்து விடப்படுகிறது. மோசே கடவுளால் பொறுக்கப் பட்டவரென்று ஜனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார். அதே விதம் ஜனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இயற்கையாகவே தலைமை ஸ்தானம் வகிக்கும் திறமையுள்ளவர்களையே இது குறிப்பிடும். ஆதலால் ஏசு கூறுவது கடவுளால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டு மென்பது. தமக்கு இதரர் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் முதலில் தாம் கடவுளால் அனுப்பப்பட்ட தலைவரென்பதை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் அந்த இடத்தில் கூறி யிருக்கும் "கைக்கொண்டு செய்யுங்கள்" என்ற வார்த்தை மனத்தில் எழும் நியாய அநியாய சம்சயங்களைப் பற்றினதாக இராமல் கேவலம் அனுஷ்டானங்களைப் பொறுத்ததாக இருக்கலாம். குஷ்டரோகியை அவர் சொஸ்தம் செய்தவுடன் மோசே இட்ட கட்டளைப்படி குருமாருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்துமாறு அவனுக்குக் கூறுகிறர். (மத். 8—4.) இவ்விதம் நாம் அர்த்தம் கொள்வது சரி என்றல் நாம் அனுஷ்டான விஷயங்களில் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமே தவிர, எல்லாவற்றிற்கும் கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிய வேண்டு மென்று ஏற்படவில்லை. அவர் வேதபாரகரையும் பரிசேயரையும் "குருடரான வழிகாட்டிகள்" என்றர் (மத். 23—16.) அவ்விதமானவர்களை ஜனங்கள் நம்பிக்கையுடன் பின்பற்ற வேண்டு மென்று அவர் கூறுவாரா?

ஏசு தீவிர சமய வெறியர் அல்ல. இதர மதத்தினருக்கு அனுதாபமும் மரியாதையும் காண்பித்தார். (மத். 8—10,11.) ஏசு யூதரின் அதிகாரத்திற்கு எல்லாச் சமயங்களிலும் கீழ்ப்படிய வில்லை. பலமுறை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அதை மீறி நடந்திருக்கிறர். பரிசேயர் கொண்டிருந்த ஓய்வு நாளின் அர்த்தத்தை இவர் மீண்டும் மீண்டும் நிராகரித்தார். (மார்க். 2—27.) அவருடைய செய்கை எல்லாவற்றிற்கும் மூல அதிகாரி மோசேயின் நியாயம் அல்ல, "கடவுளின் கட்டளையே." ஆகையால் நமது உள்ளத்தில் இருக்கும் சத்தியத்தின் ஆவியே நமக்கு அப்பீல் கோர்ட்டு. அதற்கே நாம் கட்டுப்பட வேண்டும். அதனல் நமது உயிரை இழக்க நேரிட்டாலும் சரி, பின் வாங்கக் கூடாது.

**அரசுக்குக்கீழ்ப்படிதல்.** இந்த விஷயத்திலும் பேதுரு கூறியதும்பவுல் கூறியதும் பிரமாணமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன (1பேது.2-13,14).

பேதுருவைப் பற்றி முதலில் எழுதுவோம். அவர் பொதுவாக அரசுக்குக் கீழ்ப்படி என்று சொல்லவில்லை. "நீங்கள் மனுஷ ஏற்பாடு கள் யாவற்றிற்கும் ஆண்டவரின் நிமித்தம் அடங்கி இருங்கள்.............. ...ராஜாவுக்கானாலுஞ் சரி,......அவனால் அனுப்பப்படுகிற அதிகாரிகளுக் கானாலுஞ் சரியே......" என்று சொல்லுகையில், கூடவே, "நீங்கள் நன்மை செய்கிறவர்களாய், புத்தியீன மனுஷரின் அறியாமையை வாயடைப்பது கடவுளின் சித்தம்" என்கிறார். அதாவது ஏசு சத்தியத்தை நிலை நிறுத்தவே பிலாத்தின் தீர்ப்புக்கு உட்பட்ட மாதிரி என்கிறார்.

பவுல் கூறியதை ஆராய்கையில் அவருடைய முன் வரலாற்றை ஆலோசிப்பது உசிதம். இந்தியக் கிறிஸ்தவர்களாகிய நம்மில் அனேகர் ஆங்கிலத்தையே தமது தாய் பாஷையாக உபயோகிக்கும் விதம் அவ் வளவு தூரம் ஜாதி மாறி இருப்பது போலவும், பிரிட்டிஷ் பிரஜை யாக இருப்பது பற்றிப் பெருமைப்பட வேண்டும், அந்த அரசுக்கு விசுவாசமான குடியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் இளம் வயதிலிருந்தே போதிக்கப்படுவது போலவும் பவுலும் பிறப்பின் மூலம் ஒரு ரோமப் பிரஜையாக இருந்து (அக்காலத்தில் அது மிகக் கௌரவமானதாகக் கருதப்பட்டது.) (அப்போ. 22—25, 28.) பிறப்பு முதல் அந்நிய ஆட்சிக்கு விசுவாச முள்ளவராய் வளர்க்கப்பட்டவர். நம்மைப்போல் அவரும் மேல்நாட்டுக் கொள்கைகளை யுடையவராக இருந்திருக்க வேண்டும். அரிஸ்டாட்டிலின் நீதியாகிய "அரசுக்குக் குடி பணிய வேண்டும்" என்பது அவருக்கு ஆதாரமாக இருக்கும். இது ஏசுவின் போதனையாகிய, "கடவுளின் புத்திரர்களுக்குத் தனிப்பட்ட சுதந்திரம், அவரவர் தத்தம் சத்தியத்தின் ஆவியைப் பின் தொடர்வது" என்ற கொள்கைக்கு முரண்பாடானது. ஆகையால் பவுலின் உப தேசத்தை இவ்விஷயத்தில் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. (ரோமர். 13—1.) அவர் கூறுவதாகிய, "எந்த மனுஷனும் தனக்கு மேலான அதிகார முள்ளவர்களுக்கு அடங்கி நடக்கக் கடவன். கடவுளாலேயே அன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் கடவுளா லேயே ஏற்பட்டிருக்கின்றன" என்பதை நாம் ஏற்றுக் கொண்டால் ஹிட்லர் பேரிலும் முஸோலினி பேரிலும் போர் தொடங்குவது தவறுகிறது. இந்தச் சர்வாதிகாரிகளைவிட அதிகமாக யார் அதிகாரம் செலுத்தினார்கள்? மேலும், மற்றோர் இடத்தில் பவுல் கடவுளால் ஏற்படாத வேறு அதிகாரம் உளதென்று ஒத்துக் கொள்ளுகிறார். (I கொரி. 2—6, 8)

பேதுருவும் பவுலும் கூறியதை இவ்விதம் தவறாக அத்தாட்சியாக எடுத்துக் கொள்வதுடன் வேதாகமப் புத்தகத்தில் ஏசு பிலாத்துக்குக் கூறிய மொழியும் மேற்கோளாக உபயோகிக்கப் படுகிறது. (யோவான். 19—11). ஏசுவின் சொற்களைக் கொண்டே இந்த விஷயத்தைப் பலப் படுத்த முயலுகிறார்கள். பிலாத்து மிக ராங்கியுடன், "உன்னை விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரமுண்டு, சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரமுண்டு" என்கையில், ஏசு சட்டென்று அவனுக்கு விடைகூறி அவனை மட்டம் தட்டுகிறார். "மேலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந் தால் என்மேல் உமக்கு அதிகாரம் என்றும் இராது" என்கிறார். அதா

வது இராயனால் பிலாத்து நியாயாதிபதியாக நியமிக்கப் படாதிருந்தால் தெருவில் போகும் இதர மனிதருக்கும் அவனுக்கும் வித்தியாசமில்லை'' என்பதாகும். "மேலிருந்து" என்பது அரசாங்க மேலதிகாரியையே குறிப்பதாகும், கடவுளை அல்ல. கடவுளைக் குறிப்பதென்றால் ஏசு வழக்கமாய்த் தாம் அதற்கு உபயோகிக்கும் பதமாகிய "என் தந்தை" என்றோ "பரமண்டலம்" என்றோ குறிப்பிட் டிருப்பார். (மத்தேயு. 22—53. லூக்கா. 9—54.)

மறுபடியும் சில கட்டங்கள் தாண்டி ஏசு "இராயனுடையதை இராயனுக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்" (மத்தேயு. 22—21). என்று சொல்வது அத்தாட்சியாகக் கூறப்படுகிறது. இந்த வார்த்தைகளின் முழு அர்த்தத்தை அறிவதற்கு ஏசு எதற்காக இவ்வார்த்தைகளைச் சொன்னார் என்பதை உணரவேண்டும். "அப்பொழுது பரிசேயர் போய்ப் பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனை பண்ணி" அவரிடம் தங்களுடைய ரகசியச் சாரணர்களை அனுப்பினர். அவர்கள் இராஜத் துரோகமான பேச்சை அவருடைய வாய் மூலமாக வரச்செய்து அவரைச் சிக்க வைக்கலாம் என்ற எண்ணத்துடன் இராயனுக்கு வரி செலுத்துவது நியாயமா என்று கேட்கின்றனர். "ஏசு அவர்களின் துர்க்குணத்தை அறிந்து, "மாயக்காரரே, நீங்கள் என்னை சோதிக்கிற தென்ன?" என்றார். (மத்தேயு. 22—18). இவ்விதம் முன் கூட்டி யோசிக்கப்பட்ட ஒரு சங்கடத்தில் ஏசு மாட்டப்பட்டார். அவர் தந்திரமாக மேற்கூறிய வார்த்தைகளைச் சொல்லி அவர்கள் பதில் சொல்ல இயலாமல் செய்தார். இவ்வித நிலையில் நிர்ப்பந்தமாக அவரிடமிருந்து பெறப்பட்ட சிலேடையான வார்த்தையைக் கொண்டு அதுவே ஒரு அரசாங்க நீதி முழுவதற்கும் அத்தாட்சி எனக் கொள்ளலாமா?

அவ்வண்ணம் செய்வதாக இருந்தாலும் இதற்கு எதிரிடையாகக் கூற அத்தாட்சி இருக்கிறது. "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டான தொன்றும் அவரையல்லாமல் உண்டாகவில்லை" (யோவான். 1—3) ஆகையால் வானமும் வையமும் நீரும் நிழலும் ஆகிய யாவும் அவர் படைத்தவை என்றால், இராயனுக்குச் சேரவேண்டியது என்ன இருக்கிறது? எல்லாமும் கடவுளைச் சேரவேண்டிய தன்றோ? இராயனுக்கு எவ்விதப் பங்கும் கிடையாதே!

ஏசுவின் குறுகிய கால மானிட வாழ்க்கையில் அவரைக் கேட்டதாகப் பதிவு செய்யப்பட்ட வரலாறு ஒன்றுதான் இருக்கிறது. கப்பர்நகூம் என்ற இடத்தில் கோயிலுக்குச் செலுத்தவேண்டிய வரியை அவர் கொடுப்பாரா என்று கேட்கப்பட்டார். அந்நியநாட்டாரிடமே அவ்வித வரி வசூலிக்கப்பட வேண்டுமென்று ஏசு அபிப்பிராயப்பட்ட போதிலும், பேதுருவை அவ்வரியைச் செலுத்தும்படி கட்டளை யிட்டார். (மத்தேயு. 17—26, 27). தற்காலத்திய அரசாங்கத்தில் இருப்பதான பொது ஜனங்களிடமிருந்து வரி வசூலித்துச் செலவு செய்யும் முறைக்கு அக்காலத்திய இம்முறையைப் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

ஏசு தமது வாழ்க்கை முழுவதையும் அநீதியும் பறிமுதலும் நாட்டில் நடவாத வண்ணம் போராடவும், மனிதனின் தெய்வீகத் தன்மையை

யும் அவனுடைய உள்ளத்திலிருக்கும் சத்தியத்தின் ஆவியின் மேன்மை யையும் நிலைநிறுத்தவுமே முயன்று கழித்தார். இந்த மேலான போரில் அனேகம் சீடர்கள் அவரைப் பின் பற்றி, பலவிதச் சித்திரவதைக்கு உட்பட்டுத் தங்களுடைய ஆத்த மேன்மையை எவ்விதப் பலாத்கார மும் வெல்லாது என்று நிலைப்படுத்தினர். அவர்களே ஆதிகாலக் கிறிஸ் தவத் தவசிகள். என்றும் அழியாத அவர்களுடைய தியாகம் நம்மெதிரில் இருக்க, நாம் நமக்குக் கடவுள் கொடுத்த கடமையைச் செய்யாமல் அதைப் பிறரிடம் கொடுக்கலாமா? அன்னிய அதிகாரிகள் அதைச் செய்யுமாறு விடலாமா? நமது ஆத்ம தர்மம் கூறுவதற்கு ஏற்ப அதிகாரிகள் சொல்வதும் இருக்கும்வரை மாத்திரமே நாம் அதைச் செய்யலாம். நமது கடமைகளைக் கடவுளின் திருப்திக்காகவே நாம் முக்கியமாகச் செய்ய வேண்டும். அவ்விதம் செய்யாமல் காலத்தை வீணாகக் கழிப்பதை எவ் வாறும் மன்னிக்க இயலாது. "இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பவும், மனுஷ குமாரன் முன்னிலையில் நிற்கவும் வலிமை பெறும்படி விழித்திருங் கள்" (லூக்கா. 21—36). "கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசி களும் எழும்பி, கூடுமானால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்' (மத்தேயு. 24—24).

"என் ஆடுகள் என் குரலைக் கேட்கும், நானும் அவைகளை அறிந் திருக்கிறேன், அவைகளும் என்பின் வருகின்றன. அவைகளை எனக் குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவர்; பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ளவோ ஒருவனாலும் முடியாது" (யோவான். 10—27, 29.)

## எட்டாவது அத்தியாயம்

# ஓர் உபமானம்—முன் கூறியவற்றின் சுருக்கம்

தெய்வத்தன்மை சிறிது பெற்றிருப்பவனும் சுய அறிவு உடையவனு மான மனிதனை நாம் எதற்கு ஒப்பிடலாம்?

வாழ்க்கை என்னும கடலில் ஒரு படகு போன்றவன் அவன். அவனுக் குத் திசை காட்டும் கருவி ஒன்றிருக்கிறது—சத்தியத்தின் ஆவி—அதைக் கொண்டு எத்திசை நோக்கிச் செல்லவேண்டுமென்பதை அவன் தெரிந்து கொள்ளலாம். அவனுக்கு ஒரு சுக்கான் இருக்கிறது—அதுதான் சுய அறிவு. அதைக் கொண்டு தன்னுடைய தேகம் என்னும் படகை அவன் அடக்கி வழிப்படுத்தலாம்.

சத்தியம் என்பது நிரந்தரமானது. ஒருவருக்கென்று ஏற்பட்டதல்ல, எல்லாருக்கும் பொதுவாக இருப்பது. ஆனால் ஒவ்வொரு படகின் கோலும் வெவ்வேறு வகைப்பட்டு இருப்பதால், காற்றும், கடலின் போக்கும் சுழலும் பலவகைகளில் ஏற்படுவதாலும் ஒவ்வொரு படகின் யாத்திரையும் தனிப்பட்ட வகையில் பாதிக்கப் படலாம்.

திசைக்கருவி படகில் இருந்தபோதிலும், அது வேலை செய்வது பூமியின் சம்பந்தத்தினாலேயே இருக்கும்; சூழலின் சக்தியினாலு மல்ல, படகின் சக்தியினாலு மல்ல. அலை மோதுவதால் படகு மேலும் கீழுமாகச் சாய்ந்து புரளலாம்; அதுபோகும் திசை கணத்துக்குக் கணம் மாறலாம். ஆனால் திசைகாட்டும் கருவி இப்படகின் ஆட்டத்தினால் பாதிக்கப்படாமல் இருக்கும்; அதனுடைய ஊசி எப்போதும் வடதுருவத்தையே சுட்டிக் காட்டும். ஆகையால் படகு கொந்தளிக்கும் கடலில் சுழன்று சுழன்று வந்தாலும் இந்தத் திசைகாட்டும் கருவியின் உதவியினால் நாம் அப்படகைச் சரியான பாதையில் செலுத்த இயலும்.

அதேவிதம் மனிதனின் உள்ளத்திலிருக்கும் சத்தியத்தின் ஆவியானது அவனுடைய உடலில் இருந்த போதிலும் கடவுளின் சக்தியின் அம்சமாய், அவரைச் சேர்ந்ததாக இருக்கும்; அது உடலின் தன்மையில் கட்டுப்பட்டதல்ல. ஆகையால் அது மனிதனைக் கடவுளிடம் கொண்டு போய்ச் சேர்க்க வழிகாட்டும் திறமையுள்ளது. அதற்கு மனிதன் கீழ்ப் படிந்தால் தன்னுடைய "அறிவு" என்பதைக் கடவுளின் விருப்பத்துடன் ஐக்கியப்படுத்திக் கொள்ளுகிறான்.

சுக்கான்—திசைகாட்டும் கருவி படகின் ஆட்சிக்குப் புறம்பானது. படகு எவ்விதம் இருப்பினும் அது திசையைச் சரியாகக் காட்டும். ஆனால், சுக்கான் என்பது படகுடன் சேர்த்து அமைக்கப்பட்டிருப்பது. திசை காட்டும் கருவிக்குச் சரியாக அதைத் திருப்பினால் அது படகைக் கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். இல்லாவிடில் பாறையில் மோதச் செய்யலாம்.

இந்த சுக்கான்—அதாவது மனிதனின் சுய இச்சை என்பது கடவுளின் கட்டளைக்கு இசைந்ததாக ஏற்பட்டால் மனிதன் கடவுளின் வழிப்படி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நித்ய ஜீவனைப் பெறுகிறான் சுய இச்சை என்பது அவ்விதம் கட்டுப்படுத்தப் படாமல் விடப்பட்டு தேவ பாதையை விட்டு மனிதனை திக்குத் தெரியாமல் வேறு வழி அழைத்துச் சென்றுவிட்டதென்றால் அவன் சுழலிலும் புயலிலும் அகப்பட்டுத் தவிக்கும் ஓர் படகுபோல் ஆகிறான்,

சுக்கானானது திசைகாட்டும் கருவிபோல் உதவாது. சுக்கான் திரும்பியிருக்கும் வகையைக்கொண்டு நாம் படகு எங்கே போகவேண்டு மென்பதைத் தீர்மானிக்க இயலாது. மேலும் இரண்டு படகுகள் ஒரே திக்கை நோக்கிச் செல்லலாம். அவைகளுடைய திசை காட்டும் முள்ளானது நேர் வடதிசையையே காண்பிக்கும். ஆனால் அவ்விரு படகுகளும் இருக்கும் இடத்திற்கு ஏற்றவாறே அவைகளுடைய சுக்கான் அமைந்திருக்கும். ஒரே இடத்திலிருந்து ஒரே திசையை நோக்கிச் செல்லும் படகுகள்கூட எதிரே ஒரு மணற் திட்டு இருந்தால் ஒன்று அதனுடைய வலப்புறமாகவும் மற்றொன்று அதனுடைய இடப்புறமாகவும் போக நேரிடலாம். பார்க்கிறவர்களுக்கு இரண்டும் வெவ்வேறு இடம் செல்வதாகத் தோன்றினபோதிலும் எதிர்க்கரையில் இரண்டும் ஒன்றாகச் சேரும். அதேவிதம் இரண்டு மனிதரோ அல்லது இரு ஜாதியினரோ வெவ்வேறு முறையைப் பின்பற்றிச் செல்வதால் அந்த ஒரு விஷயத்தை மாத்திரம் கொண்டு நாம் அவர்கள் செய்வது தவறு என்று நினைக்கக்கூடாது. அவ்விருவரும் ஒரே

சத்தியத்தின் ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டு, அதற்கு ஏற்றவிதம் தங்களுடைய சுக்கான்களாகிய மனத்தைத் திருப்பிச் சென்றால் இறுதியில் ஒரே இடத்தை அடையலாம். இடங்களுக்கு ஏற்ற வண்ணம் முறையும் வித்தியாசப்படுவதால் இருமுறையும் ஒன்றுக்கொன்று விரோதமானதாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றலாம்.

சத்தியத்தின் ஆவியைக் கொண்டிருப்பவையான பலவகைப்பட்ட மதங்களும் ஒரே இடத்தை அடைய முயலுகின்றன. அவைகளுடைய வகை வேறுபடலாம். இதனால் அவைகளைக் கண்டிக்க இடமில்லை.

**பழைய ஏற்பாடு:** ஏசுநாதரின் அவதாரத்திற்கு முன்பு யூதர்கள் மோசேயின் நியாயப் பிரமாணமாகிய சுக்கானைத் திசை காட்டும் கருவி என்று தவறாக நினைத்தனர். விருப்பம்போல் படகைத் திருப்பிச் செலுத் தச்சாதகமாக இருக்கும் சுக்கானை அசைக்க இயலாமல் படகில் நிலையாகப் பதித்துவிடவே, அது படகைச் சரியாக அழைத்துச்செல்லச் சக்தியற்ற தாயிற்று. ஏசுநாதர் அவர்களுக்குத் திசை காட்டும் முள்ளிற்கும் படகைச் செலுத்துவதற்குச் சாதகமான சுக்கானுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கி, அவைகளைச் சரிவர உபயோகிக்கப் போதித்து ஜனங்கள் நித்திய ஜீவனையும் பரிபூரண வாழ்க்கையையும் அடையுமாறு செய்தார்.

**புதிய ஏற்பாடு:** படகில் ஒரேவிதமாகப் பதித்திருக்கும் சுக்கானைப் போன்றதான மோசேயின் பிரமாணங்களைக் கண்மூடித்தனமாகப் பின் பற்றுவதை நிறுத்தியது மல்லாமல், தீமைக்கு மூலகாரணமாகிய தீய எண் ணத்தையே அகற்றுமாறு ஏசு போதித்தார். திசை காட்டும் முள்ளாகிய சத்தியத்தைப் பின்பற்றி எவ்விதம் நமது வாழ்க்கையை நடத்திப் பிதாவின் வேலையைச் செய்வதெனக் காண்பித்தார்.

**பிரார்த்தனை:** இந்த உபமானத்தையே மேலும் சொன்னால், நிரந்தர உண்மைகளையும் நாம் கட்டுப்படவேண்டிய விதிகளையும் காண்பிக்கும் பரமண்டல மந்திரத்தின் முதல் மூன்று பாகங்களையும் திசை காட்டும் முள்ளாகவும், நமது தினசரி வாழ்க்கையை நடத்தச் சாதகமாக இருப்பவைகளான இதர பாகங்களை ஒரு படகின் சுக்கானாகவும் சொல்லலாம்.

**சோதனை:** திசைகாட்டும் கருவிக்கும் படகின் சுக்கானுக்கும் இருக்கும் சம்பந்தம் விட்டுப்போனால் நாம் தேவ வழியை இழந்தவர் களாய்ச் சோதனைக்கு உட்பட்டு, உண்மை மதிப்புகளை இழந்து, ஆசை என்னும் கொந்தளிக்கும் கடலில் தவிக்கிறோம். திசைகாட்டும் முள்ளை மறுபடி அடைந்து இந்திரிய இச்சைகளின் திருப்தியைக் கட்டுப்படுத்தி, நேரான வழியில் சென்றாலே காப்பாற்றப் படுவோம்.

**கடமை:** வாழ்க்கை என்னும் கடலின் அபாயங்களை அறிந்து அதில் மூழ்கி இருக்கும் பாறைகளில் மோதாமல், மணல் திட்டுகளில் புதைந்து விடாமல், நமது படகைச் செலுத்தக் கற்று, நமது அயலானின் படகிற்கும் நேர்வழி காட்டுவதே வாழ்க்கையில் நமது கடமை.

இவ்வித வேலையை ஏற்பவர் சோம்பி இருக்கவும் தூங்கவும் இயலாது.

**மனிதரின் விதிகள்:** முன்னாட்களில் யூதர்கள் செய்தவிதம் தற்கா லத்திய திவ்ய சபைகளும் ஒரு திசையை நோக்கிப் பதிக்கப்பட்ட சுக்கா

யே சரியான வழிகாட்டி என்று எண்ணிவிடுகிறது. பேதுரு, பவுல் முதலிய அப்போஸ்தலர்கள் அக்காலத்திய கடலில் இருந்த புயல்களுக்கும் மணற் திட்டுகளுக்கும் அகப்படாமல் தப்புவதற்கு ஏற்ற வழியை ஜனங்களுக்குக் காண்பித்தனர். அந்தப் பழைய படகில் பழைய சுக்கான் எத்திசையை நோக்கிப் பதிக்கப்பட்டிருந்தது என்பதை அளந்து அதே விதம் தற்காலத்திய படகில் சுக்கானைப் பதிக்க திவ்ய சபை முயலுகிறது. திசைகாட்டும் கருவியை அனாவசியம் என்று ஒதுக்கிவிட்டுச் சுக்கானை நம்பிப் படகைச் செலுத்த திவ்ய சபை அதிகாரிகள் முயலுகிறார்கள். ஐரோப்பாவில் ஏற்பட்ட பெரிய நாசத்திற்குக் காரணம் இதுவே.

நாம் இந்தப் படிப்பினையை நன்கு அறிய வேண்டும். திசை காட்டும் கருவிக்கு ஏற்றதாகச் சுக்கானை இங்கும் அங்கும் திருப்பக்கூடியதாக அமைத்துக்கொள்ள வேண்டும். ஆசைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு சத்தியத்தைப் பின்பற்றுவதென்றால், நாம் எக்காலும் விழித்த வண்ணம் இருக்கவேண்டும். சற்று அசிரத்தையுடன் இருந்தோமென்றால் சாத்தான் படகை நாசவழி இழுத்துச் சென்று மூழ்கச் செய்யும்.

Q6
N46

முற்றிற்று.

ARCHIVES LIBRARY
No. 109318
EGMORE, MADRAS

அகில பாரத கிராம கைத்தொழில்
சங்கத்தில் ஸ்தாபகரும் காரிய
தரிசியுமான ஆசிரியர்

ஜே. ஸி. குமரப்பா அவர்களின்

# கிராம இயக்கம்

'குமுதினி' மொழிபெயர்த்தது

மகாத்மா காந்தி தமது முன்னுரையில் "கிராம இயக்கம் அவசியமா, இயலுமா என்பவைகளைப் பற்றின சந்தேகங்களெல்லாவற்றையும் ஆசிரியர் குமரப்பா தீர்த்து வைக்கிருர். கிராமங்களிடம் அன்புள்ள எவரும் இப்புத்தகம் இல்லாமல் இருக்க இயலாது. எவ்விதச் சந்தேகக்காரரும் தமது சந்தேகத்தை இழக்காமலிருக்க இயலாது. கிராமங்களை அழித்து இந்தியா முழுதும் பெரிய பெரிய நகரங்களைக் கட்டி ஒரு நிலைப்பட்ட அதிகாரத்தின் கீழ், ஆலைத் தொழில்கள் பல செய்தால் தேசத்தில் பொன்னும் பொருளும் குவியும் என்று ஏற்கனவே தமது மனதில் தீர்மானித்திருப்பவர்களுக்கு இப்புத்தகத்தினல் ஏதுவிதப் பயனும் ஏற்படாது. நல்ல காலமாய் அவ்வித நாசத்தை விரும்புவோரின் தொகை இப்பொழுது அதிகமில்லை. தேசத்தில் விநாச இயக்கம் பரவாமல் தடுக்க ஏற்ற தருணத்தில் இக் கிராம இயக்கம் ஏற்பட்டிருக்கிறதென்பது என்னுடைய எண்ணம். இக்கேள்வியின் விடை இப்புத்தகத்தில் கிடைக்கும்" என சொல்லுகிருர்.

அழகிய கைக்காகிதத்தில்
சுமார் 240 பக்கம்

ரூபாய் : மூன்று
(தபால் செலவு தனி)

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை : சென்னை
வடக்கு வெளி வீதி : மதுரை
வெரைடி ஹால் ரோடு : கோயமுத்தூர்
ஹைரோடு : திருநெல்வேலி

# அரிய புத்தகங்கள்

| | |
|---|---|
| இந்திய சுயராஜ்யம்<br>காந்திஜி | ரூ. 1 0 |
| கிராம இயக்கம்<br>ஜே. ஸி. குமரப்பா | ரூ. 3 0 |
| கதைகள் 1<br>டால்ஸ்டாய் | ரூ. 2 4 |
| கதைகள் 2<br>டால்ஸ்டாய் | ரூ. 2 4 |
| ஏசுநாதர் போதனை<br>ஜே. ஸி. குமரப்பா | ரூ. 0 12 |
| உலக நிலை<br>ராஜாஜி | ரூ. 2 0 |
| அரசியல்<br>பிளேட்டோ | ரூ. 6 0 |
| புதிய சீனா<br>வெ. சாமிநாத சர்மா | ரூ. 6 8 |

68/12-46

சக்தி வெளியீடுகள்